தனிப்பிரதி விலை அணா 0—1—6.
Reg. No. M. 3066. 1937-ஜூன் 1.

PAHUTHARIVU ("REASON")

மலர் 3. இதழ் 2.



பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1 —8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கையிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருட பைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

பெண்களைக் கெடுத்தது யார்? (பாட்டு) (கான்சாகிபு)	1
மெய்யாகவே ஒரு கடவுளுண்டா? (எம். ஜே. காவின்)	3
நல்வழி எது? (இங்கர்சால்)	17
கடவுள் (வால்யம்)	24
மதத்தால் விளைந்ததென்ன? (கோ. சௌரிராஜன்)	31
குழந்தைகளும் பயிற்சியும் (ஜோஸப் மாக்காபி)	37
கடவுளுக்கு நமது உலகில் வேலை உண்டா? (சிங்காரவேலு)	54
சோவியத் ரஷ்யாவில் பெண்கள் நிலை (ஜே. எம். குமாரப்பா எம். ஏ)	59
இந்து என்பவர் யார்? (டி. டி. கார்வே)	63

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

——(○)——

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 3. } ஈரோடு 1937. ஜூன் 1. { இதழ் 2.

பெண்களைக் கெடுத்தது யார்?

(கான் சாகிபு.)

கும்மி.

1. கலாசாலை ரோட்டினில் காத்திருப்பான்—அங்கு
என்னைக் கண்டதும் முறுவலிப்பான்
தலைமறை மட்டிலும் நோக்கிடுவான்—இது
வருடமொன்றாய் வழக்கமடி.

2. தாகங்கொண்டு நீர் குடிப்பது போல்-மனத்
தாகங்கொண்டெழில் குடித்திடுவான்
காத்திருந்து பிச்சை கிடைத்தவர் போல்—அவன்
என்னைக்கண்டதும் முகமலர்வான்.

3. பருவம் வந்ததும் எனைச்செறுத்துக்—கலா
சாலை செல்வதைத் தடுத்து
கூண்டினிற் கிளிபோல் வீட்டிலிட்டுக்-கல்விக்
கண்ணைக் கெடுத்தார் பாவிகளே.

4. ஜன்னலின் வாசல் திறந்திருக்கும்—மாலை
வீணையின் கானம் தொனித்து நிற்கும்
வீதியிலன்னை பால் விற்று நிற்கும்—எனைக்
கேட்டிடுவான் போல் நோக்கிடுவான்.

5. கோக்கெதிர் கோக்கு கோக்கிடவே—மனம்
பள்ளம்பாய் வெள்ளம்போலாயினனே
அழகு வழிந்திடும் மார்பினில்—காம
மன்மத அம்பினால் சிக்கினனே.

6. உன்னை எனக்குக் கொடுத்து விடு யாணும்
என்னை உனக்குக் கொடுத்து விட்டேன்
என்றதும் தழுவினம் யார் முந்தி ?—என்று
இது காறும் தெரிந்திலம் கேட்டிடடீ.

7. கூலியும் உறங்கிடும் நடுபாமம்—அந்த
போதம்பறித்த சேதுவொடு
எனக்குள நகைகளைக் களவுகொண்டு—அயல்
யாழ்ப்பாணம் போயினம் விரைவினொடு

8. உல்லாச நேரம் போக்கிடவே—படக்
காட்சியும் இளப்பு முதவியன
கைப்பொருள் யாவும் கரைந்திடவே—கூலி
வேலைகள் செய்துமே வாழ்ந்து வந்தோம்.

9. "தெய்வீக"க் காதலிலீடுபட்டு—யாங்கள்
சந்தோஷ சாகரம் மூழ்கியதில்
முத்துக்கள் மூன்று கண்டெடுத்தோம்—அதில்
முக்கிய கஷ்டம் யாருக்கடீ.

10. ஓயா உழைப்பிலும் கர்ப்பத்திலும்—என்
அழகு ஒழிந்து தோல் சுருங்க
வாழ்விலும் தாழ்விலும் கைவிடேன்—என்று
காதலர் கருத்தில் வேறு பட்டார்.

11. சந்தையில் மாட்டினை விற்பது போல்—கொடுந்
தேயிலைத் தோட்டத்துக் கண்காணிக்கு
பெண்டாள விற்றுமே சென்றனர்—அந்தோ
கதியற்று கலங்குறேன் மக்களுடன்

12. உலகாசை கொண்டு உயிர் வாழ்வதோ—உயர்
மானம் உலகிலும் பெரிதலவோ ?
இற்றது வாழ்க்கை யின்றுடன்—அம்மா !
வஞ்சக மனிதரை நம்பாதடீ.

மெய்யாகவே ஒரு கடவுளுண்டா?

(எம். ஜே. காவின்)

(சென்ற மாதத் தொடர்ச்சி)

"கடவுள் பிரபஞ்சத்தை அடக்கியாள வேண்டியதுதான்; எனெனில் பிரபஞ்சம் அவன் படைப்பு" என மதஸ்தர்கள் கூறுகிறார்கள்.

அதன் உண்மையை ஆராய்வோம். பிரபஞ்சம் ஒரு சிருஷ்டிப் பொருளானால் சிருஷ்டி ஆரம்பமாகு முன் அநந்த காலம் கடந்திருக்கவேண்டும். அந்தக் காலத்தில் எதுவுமே இருந்திருக்கமுடியாது. கடவுளைத் தவிர ஒரு ஒளிக்கதிரோ—கருகளவு மண்ணோ கூட இருந்திருக்க முடியாது. ஒரு இருட்டறையில் ஆயுட்கால தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு குற்றவாளியைப்போல் ஒரு சூனியமான உலகத்திலே மை இருளிலே குந்திக்கொண்டிருக்கும் ஒரு எல்லையற்ற கடவுளின் தன்மை எத்தகையது என்று யோசித்துப்பாருங்கள். காலக் கிரமத்திலே சூரியன்களையும் உலகங்களையும் சிருஷ்டிக்க அவன் எண்ணினானாம். ஆனால் சூரிய, உலக சிருஷ்டிக்குத் தேவையான சாமான்கள் அவனுக்கு எங்கிருந்து கிடைத்தன? சூனியத்திருந்து அவைகளை அவன் சிருஷ்டித்தானா? சூனியத்தை ஒளி பொருந்திய நட்சத்திரங்களாக எப்படி மாற்ற முடியும்? சூனியத்திலிருந்து ஒரு பொருள் உண்டாவதை நமக்குக் கற்பனை செய்யத்தான் முடியுமா? மாறாக முன்னாடியே ஜடப்பொருள் இருந்திருந்தால் அப்பொழுதே பிரபஞ்சம் இருந்திருக்கிறது; எனவே பிரபஞ்சம் ஒருபொழுதும் சிருஷ்டிப்பொருள் ஆகாது. கடவுளுக்கோ பிரபஞ்சத்துக்கோ ஆதியில்லையென்றுதான் கொள்ளவேண்டும். அநாதிகாலமாக கடவுள் இருக்க முடியுமானால் அநாதிகாலமாகப் பிரபஞ்சமும் ஏன் இருக்க முடியாது? அநாதிகாலமாகக் கடவுள்தான் இருக்க முடியுமென்றும் பிரபஞ்சம் இருக்க முடி

யாதென்றும் கூறுவதற்கு ஆதாரமென்ன? எதாவது ஒன்றி லிருந்துதான் பிரபஞ்சம் தோன்றியிருக்க வேண்டுமானால் கடவுள் எதிலிருந்து தோன்றினான்? கடவுள் தோற்றத் திற்குத் தேவையான ஜடப்பொருள் அநாதியாக இருந்திருக்க லாமானால் பிரபஞ்சத் தோற்றத்துக்குத் தேவையான ஜடப் பொருள் அநாதியாக ஏன் இருந்திருக்கக் கூடாது? உண்மை யென்னவெனில் பிரபஞ்சத்துக்கு முன் கடவுளை வைப்பதி னால் மர்மம்தான் அதிகப்படுகிறது. கடவுளும் சிருஷ்டி யும் சிந்திக்க முடியாத விஷயங்கள்; பிரபஞ்சமே இல்லாதிருந் தகாலம் ஒன்று இருந்தது எனக் கூறுவது சூனியத்திலி ருந்து பிரபஞ்சம் தோன்றிற்று எனக் கூறுவதற்கே ஒப்பா கும். பிரபஞ்சத்தோற்றத்துக்குக் காரணஸ்தனாக சிந்த னைக் கெட்டாத ஒரு கடவுளைச் சிருஷ்டிப்பது விஞ்ஞான உண்மைக்குப் பொருத்தமானதல்ல. ஜடப்பொருளையும் சக்தியையும் பிரிக்கவோ அழிக்கவோ முடியாதென்று சந்தே கத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பிரபஞ்சம் நித்தியமான தென்று விஞ்ஞான சாஸ்திரம் நிரூபித்திருக் கிறது. ஜடப்பொருளும் சக்தியும் சதா இயங்கி காம் பார்க் கும் பொருள்களை சதா உண்டுபண்ணியும் மாற்றியும் புதிய உருவைக் கொடுத்து வருகின்றனவென்று விஞ்ஞான சாஸ் திரம் தெளிவு படுத்தியிருக்கிறது.

பிரபஞ்சம் சிருஷ்டிப்பொருள் என்கின்ற நம்பிக்கையை லக்ஷோபலக்ஷம் ஜனங்கள் கைவிட்டு விட்டார்கள். எனி னும் கிறிஸ்தவர்கள் மட்டும் அந்த நம்பிக்கையை இறுகப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். பிரபஞ்சத்தை ஒரு கைக் கெடியாரத்துக்கு ஒப்பிட்டு கைக்கெடியாரம் உண்டு பண்ணு வதற்கு ஒரு ஆள் தேவையாயிருப்பதுபோல் பிரபஞ்சா சிருஷ்டிக்கும் ஒரு கர்த்தா இல்லாமலிருக்க முடியாதென்று அவர்கள் கூறுகிறார்கள். சிறிது நுட்பமாக யோசித்துப் பார்த்தால் இது ஊத்துக்கு நிற்காத வாதமென்பது விளங்கி விடும். பிரபஞ்சம் ஒரு கடிகாரத்துக்கு ஒப்பானதல்ல; பிர பஞ்சம் உண்டு பண்ணப் பட்டதென்பதற்கு ஒரு அணுவளவு ருசுவாவது இல்லை. பிரபஞ்சத்தை சிருஷ்டிக்க ஒரு கடவுள் தேவையானால் கடவுளை சிருஷ்டிக்க வேறொரு கடவுள் வேண்டாமா? கடவுள் மட்டும் அநாதிகாலமாக இருக்கலாம், பிரபஞ்சம் அநாதிகாலமாக இருக்க முடியாதென்று கூறுவ தற்குப் பொருண்டா?

கடவுள் உண்மைக்கு கிறிஸ்தவர்கள்:— "கடிகாரம் ஒரு அற்புதமான பொருள்; எனவே அதை உண்டுபண்ண ஒரு ஆள் இருக்கவேண்டும். கடிகாரம் உண்டு பண்ணினவன் மிகவும் திறமைசாலி; எனவே அவனை சிருஷ்டித்தவன் ஒருவன் இருக்கவேண்டும். பிரபஞ்சமோ இவைகளைவிட மிக விநோதமானதாக இருக்கிறது. எனவே அதற்கும் ஒரு சிருஷ்டி கர்த்தா இருக்கவேண்டும். ஆனால் மேலே கூறிய யாவற்றையும் விட விசேஷமான கடவுள் மட்டும் அநாதியாக இருந்து வருகிறான்" என்று வாதம் செய்கிறார்கள். சிருஷ்டிவாதம் கடவுளையடுக்கும்போது அழிந்து விடுகிறது. அந்த வாதத்தை நிலைநாட்ட வேண்டுமானால் பரஸ்பரம்சிருஷ்டிக்கும் லக்ஷோபி லக்ஷம்கடவுள்கள்தோன்ற வேண்டியதுதான்.

பிரபஞ்சத்தை நோக்கி, அதை சிருஷ்டித்தவன் இருக்க வேண்டும் என்றும் அவன் சர்வஞானி—என்றும் குணக் கடல் என்றும் பகுத்தறிவுடைய எவனாவது கூறுவானா? சிலபொருள் சிருஷ்டிக்கப் பட்டவை; சில அநாதியானவை என்பதினால் மட்டும் வாதம் பூர்த்தியாகிவிடாது. பிரபஞ்சத்தை சர்வவல்லமையுடைய ஒரு கடவுள் அடக்கி ஆண்டால் பிரபஞ்ச நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அவனே ஜவாப்தாரியாக இருக்கவேண்டும்; பிரபஞ்ச மாற்றங்களுக்கெல்லாம் அவனே ஜவாப்தாரியாக இருக்கவேண்டும். ஓருயிரை மற்றோர் உயிர் உண்ணும் ஒரு உலகத்தை ஒரு நல்ல கடவுள் சிருஷ்டித்திருப்பானா? பிறமிருகங்களின் மாமிசத்தைத் தின்று இரத்தத்தைக் குடிக்கும் கொடிய மிருகங்களை ஒரு நல்ல கடவுள் சிருஷ்டித்திருப்பானா? வனங்கள் நித்தியத் துன்பம் நிறைந்திருக்கின்றன. கொடிய மிருகங்களால் விழுங்கப்படும் பிராணிகள் சதா ஓல மிட்டுக்கொண்டேயிருக்கின்றன. கடல்களில் எல்லாம் தம் முன் வாழ்ந்தவைகளை விழுங்கும் பயங்கரப் பிராணிகள் நிறைந்திருக்கின்றன. மிருகங்களும் லக்ஷக் கணக்கான மக்களை விழுங்கி வருகின்றன.

வங்காள மாகாணத்திலே ஒரு வனத்தையடுத்த ஒரு குடிசையிலே ஒரு தாய் மஞ்சத்தில் வாசித்துக்கொண்டிருக்கிறாள். அவளுடைய குழந்தை பக்கத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறது. பக்கத்தில் ஒரு பயங்கரப் புலி சுற்றிக் கொண்டிருப்பது அவளுக்குத் தெரியாது. புலி மெல்லக் குடிசைக்குள் நுழைகிறது. குழந்தை புலியைப் பார்த்து சிரிக்கிறது. உடனே குழந்தை கூச்சல் போடுகிறது. தாய்

திரும்பிப் பார்க்கிறாள். தன் குழந்தையைப் புலி கடித்துத் தூக்கிக்கொண்டு போவதைப்பார்க்கிறாள்; ஆயுதபாணிகள் புலியைத்தேடி ஓடுகிறார்கள். கடைசியில் புலி சுட்டுக் கொல்லப்படுகிறது. அதன் வயிற்றிலே குழந்தையின் மாமிசம் இருக்கிறது. அந்தப் புலியையும் கடவுள் சிருஷ்டித்தானா? கருணையுடைய ஒருகடவுள் புலியின் பசியைத் தணிக்க ஒரு குழந்தையை அழிப்பானா?

தன் சிருஷ்டிப் பொருள்களான குழந்தைகளைக் கொல்ல எந்த நல்ல கடவுளாவது கொள்ளை நோய்களை உண்டு பண்ணுவானா? குஷ்டம், க்ஷயம், பிளைவை முதலியனவும் கடவுள் சிருஷ்டிதானா?

பூகம்பங்களும் கொள்ளை நோய்களும் பஞ்சங்களும் கடவுள் கருணைக்கு அறிகுறிகளா? எரிமலை வெடிப்பு, ஜலப்பிரளயம், புயற்காற்று முதலியனவும் கடவுள் திருவிளையாடல்தானா?

சர்வ வல்லமையுடைய ஒரு கடவுள் உலகத்துக்குக் கர்த்தாவாயிருந்தால் உலகத்தில் இதுவரை நிகழ்ந்துள்ள கொடுமைகளுக்கெல்லாம் அவனே ஜவாப்தாரியாக இருக்கவேண்டும். சர்ப்பங்களுக்குத் தம் குழந்தைகளை பலியிட்ட தாய்மார் கடவுள் கட்டளைப்படியே நடந்திருக்கிறார்கள். லக்ஷோபி லக்ஷம் பேர் அடிமைகளானதற்கும், போர்க்களங்களில் இரத்த ஆறு ஓடியதற்கும் நற்குணமுடையவர்கள் சிறையில் பட்டினி கிடந்து மாண்டதற்கும் தீரர்களும் ஜீவ காருண்யமுடையவர்களும் தீயிலிட்டு ஹிம்சிக்கப்பட்டதற்கும் கொடுங்கோன்மை ஓங்கியதற்கும் சுதந்தரம் அமிழ்ந்ததற்கும் கடவுள்தான் ஜவாப்தாரியாக இருக்கவேண்டும். இயற்கை, கடவுள் சிருஷ்டியானால், மடமை, மூடநம்பிக்கை, பொய் மதங்கள், மத வெறி, பகை, பொறாமை, சித்திரவதை ஜீவ ஹிம்சை முதலிய யாவற்றிற்கும் கடவுளே ஜவாப்தாரி.

மிகச் சமீப காலத்திற்கு முன் உலக மகாயுத்தம் நடந்தது. கோடிக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள்; நாடுகள் அழிந்தன; நாகரீகம் அழிந்தது; இவைகளுக்குக் காரணஸ்தன் யார்? கடவுள்தானே!

பகுத்தறிவை ஏய்க்க முடியாது. உண்மைகளை ஒப்புக் கொண்டுதானாகவேண்டும். பிரபஞ்சம் கடவுள் சிருஷ்டி

யா? அல்லவா? கடவுள் சிருஷ்டியானால் யாவற்றிற்கும் கடவுளே ஜவாப்தாரி. உடலையுண்டு பண்ணியது கடவுளானால் உடலையுண்ணும் புழுக்களையுண்டு பண்ணியதும் கடவுளே. கண்ணைப் படைத்தது கடவுளானால் காட்சியைப் பழிக்கும் கட்படலத்தைப் படைத்ததும் கடவுளே. ஒரு சிருஷ்டிப்பொருளையழிக்க வேறொன்றைச் சிருஷ்டிக்கும் கடவுள் மெய்யான கடவுளே அல்ல.

இயற்கை, கடவுள் சிருஷ்டியானால் பிரபஞ்சத்திலுள்ள சகல கொடுமைகளுக்கும் துன்பங்களுக்கும் கடவுளே ஜவாப்தாரி.

இதை சமயவாதிகளும் உணர்ந்தே இருக்கிறார்கள். ஆகவே கடவுளை நல்லவனாக்கும் பொருட்டு ஒரு சாத்தானை அவர்கள் சிருஷ்டித்திருக்கிறார்கள். அதாவது கடவுளை தன் பொறுப்பில் இருந்து தப்புவிப்பதற்காக கிறிஸ்தவர்கள் சாத்தானை உண்டுபண்ணிக் கொண்டார்கள். அது போலவே இந்துக்கள் கருமத்தை (முன் ஜன்ம கர்மத்தை) உண்டுபண்ணிக் கொண்டார்கள். சாத்தான் சதா கடவுளோடு போராடி அவன் செய்யும் நல்லவேலைகளையெல்லாம் அழித்துக்கொண்டிருக்கிறானாம். சுவர்க்கத்துக் கனுப்ப கடவுள் உயிர்களை சிருஷ்டிக்கிறானாம்; சாத்தான் அந்த உயிர்களை நரகத்துக்கு இழுத்துக்கொண்டு போகிறானாம்.

உலகம் ஒரு போர்க்களம் என்றும் கடவுளை வெல்ல சாத்தான் சதா போராடிக்கொண்டிருப்பதாகவும் பண்டைக்காலக் கிறிஸ்துவர்கள் கம்பி வந்தார்கள். கடவுள் பக்கம் எண்ணற்ற தேவதூதர்கள் உதவியாக நின்று போர் புரிந்தார்கள். நரகத்திலுள்ள துஷ்டர்களைச் சாத்தான் தன் படையாக உபயோகித்தானாம். இந்தக் கடவுள்களும் பேய்களும் பிரபஞ்ச விவகாரங்கள் அனைத்திலும் தலையிட்டுக் குழப்பம் செய்தனவாம். பருவக் காற்று, பயிர், ஆரோக்கியம் முதலிய அனைத்தும் அவர்களின் ஆதீனத்திலேயே இருந்து வந்தனவாம். மக்கள் க்ஷேம லாபங்களில் அவைமிகுந்த கவலை செலுத்தி வந்தனவாம். தெய்வங்களின் பிரீதியைப் பெறும் பொருட்டும் பேய்களை ஓட்டும் பொருட்டும் ஏழை ஜனங்கள் மிக்க பயத்துடன் மூட பக்தி தாண்டும் செயல்களையெல்லாம் கையாண்டு வந்தார்களாம். பெரியார்கள் ஞாபகார்த்தப் பொருள்

களையும் தாயத்துகளையும் அவர்கள் வணங்கினார்கள். ஜெபமணிகளை எண்ணினார்கள்; சிலுவைகளை முத்தமிட்டார்கள்; தீர்த்தத்தை தலையில் தெளித்துக்கொண்டார்கள்; ஆலயமணிகளை அடித்தார்கள்; தீர்த்தயாத்திரை சென்றார்கள்; ஊர்வலங்கள் நடத்தினார்கள்; சாத்தான் கோஷ்டியின் கையில் அகப்படாமல் தப்பித்துக்கொள்ள அவர்களால் ஆனதையெல்லாம் செய்தார்கள். உலகம் முழுதும் பீதி கொண்டிருந்தது. கிறிஸ்தவ உலகம் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி மாதிரி இருந்தது. கிறிஸ்து மதம் ஒரு பைத்தியமாயிற்று. மக்கள் தம் உடலையும் உயிரையும் பேய்களுக்கு விற்று விட்டதாக போப்புகளும், பூசாரிகளும், ராஜ்யதந்திரிகளும், நீதிபதிகளும் நம்பி வந்தார்கள். சாத்தானுடன் சேர்ந்துகொண்டு புயற் காற்றை உண்டாக்கியதற்காகவும், சாகுபடியை அழித்ததற்காகவும், கால் நடைகளைக்கொன்றதற்காகவும் பெண்களை மலடாக்கியதற்காகவும், நோய்களை உண்டுபண்ணியதற்காகவும், அயலாரைக்கொன்றதற்காகவும் ஆண்களும் பெண்களும் மரணதண்டனைக்கு ஆளாகினார்கள். பெண்கள் வெகு சுலுவாய் சாத்தான் வலையில் சிக்கிக்கொள்கிறார்கள் என்று பொதுவாக நம்பப்பட்டு வந்தது. பேய்களின் பூசைகளில் கலந்து கொள்வதற்காகவும் துடப்பைக் கட்டைமீதும் ஆடுகளின் மீதும் ஏறி ஆகாய வழி பிரயாணம் செய்ததற்காகவும் சாத்தானைக்காட்டிக் குழந்தைகளைப் பெற்றதற்காகவும் ஓநாய் வடிவெடுத்ததற்காகவும் நூற்றுக்கணக்கான வேற்றுருவெடுத்ததற்காகவும் பெண்கள் குற்றம் சாட்டப்பட்டு தண்டனையடைந்தனர்.

இவ்வாறு குற்றம் சாட்டி ஹிம்சிக்கப் பட்டவர்களுக்கு கிறிஸ்தவ உலகம் இரக்கம் காட்டவில்லை. பேய்களை ஓழிக்கவே கத்தோலிக்க புராடஸ்டண்டு குருமார்கள் ஒருமுகப்பட்டு உழைத்து வந்தார்கள். எக்குற்றமும் செய்யாத நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் வண்டிச்சக்கரங்களால் நசுக்கப்பட்டும் பரணிலேற்றி ஆணியடிக்கப்பட்டும் கசையடி யடிக்கப்பட்டும் தூக்கிலிடப்பட்டும் தீக்குழியில் தள்ளப்பட்டும் கொல்லப் பட்டார்கள். இம்மாதிரியான அசாத்திய குற்றங்கள் சாட்டப்பட்டு ஆயிரக்கணக்கான குழந்தைகளும் கொல்லப்பட்டன.

கிறிஸ்தவ உலகக்கொடுமைகளை எவ்வளவு கற்பனாசக்தியுடையவனுக்கும் வர்ணிக்க முடியாது. இக்கொடுமை

களை எந்த சரித்திர காரனாலும் கணக்கிட முடியாது. பன்னூற்றாண்டு காலம் இந்த மதப்பேய் மூலம் சித்திரவதையும் கொலையுமே நடைபெற்று வந்தன. எனினும் மதகுருமார் சத்தியவாதிகள் என்றே கூறிக்கொண்டார்கள். பேய்களோடு புரியும் யுத்தத்தில் கடவுள் உதவியை நாடினார்கள். சாத்தான் வசப்பட்டவர்களைக் கொல்லவேண்டியது தமது மதக் கடமையென்றும் அவர்கள் நம்பினார்கள்.

இன்றைய கிறிஸ்தவ திருச்சபை (Church) பண்டைக் காலத்திருச் சபையின் எலும்புக் கூடாகவே இருக்கிறது. உலகத்துக்கும் திருச்சபைகளுக்கும் உள்ள தொடர்பு அநேகமாக அறுந்துபோய் விட்டது. அதன் சக்தியும் பெரும்பாலும் அழிந்து விட்டது. கிறிஸ்தமத சித்தாந்தங்களும் சீரழிந்து விட்டன. எங்குபார்த்தாலும் அவிசுவாசமே விருத்தியாகிக் கொண்டு வருகிறது; சிறு பேய்கள் எல்லாம் ஒழிந்து பெரிய பேய்கள் மூடர்கள் உள்ளத்துமட்டும் தங்கியிருக்கின்றன. சில சமயங்களில் அந்தப் பேய்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றன. ஆனால் அறிவாளிகளுடைய உலகத்து பேய்களின் ஆர்ப்பாட்டம் ஒழிந்து விட்டது.

மதமும்—நாகரிகமும்.

மதம் சாகுந்தோறும் நாகரிகம் வளர்கிறது. ஒரு காலத்திலே மத குருமாருக்கு உலகம் தலைவணங்கி அவர்கள் கூறியவைகளையெல்லாம் நம்பிற்று; இப்பொழுது நிமிர்ந்து நின்று நியாயவாதம் செய்கிறது. கடவுளையும் பேய்களையும் பற்றிய பிரச்சினைகளை அறிவினால் ஆராய்ச்சி செய்கிறது. உலகத்துன்பங்களுக்குப் பேய்களை ஆதாரமாகக் காட்டமுடியாதென்று எல்லாரும் உணர்ந்துகொண்டு விட்டார்கள். பிரபஞ்சத்திலே சர்வ வல்லமையுள்ள சக்தி ஒன்று தான் இருக்க முடியும். ஒரு கடவுளும் ஒரு பேயும் இருந்தால் அந்தப் பேய் கடவுளின் அதிகாரத்துக்கு உட்பட்டே இருக்கவேண்டும். கடவுள் சிருஷ்டித்தபடியே அவன் இயங்குகிறான்; கடவுள் கட்டளைப்படியே அவனுக்குச் செயலாற்றவும் முடியும். ஏதோ ஒரு காரணத்தினாலேயே கடவுள் பேயைக் கொல்லாமல் விட்டிருக்கிறான். ஆகவே பேயின் செயல்களுக்கெல்லாம் கடவுளே பொறுப்பாளி. பேய்க்கதை பொய்யென்று விளங்கி விட்டதினாலும் உலகத் துன்பங்களுக்கெல்லாம் கடவுளே காரணமென்று கூறுவது ஆபாச

மாயிருப்பதினாலும் கடவுள் சர்வ சக்தியுடையவன் அல்ல வென்றும் அனால் சாத்தியமானதை அவன் செய்கிறான் என்றும் சிலர் கூறுகிறார்கள். பிரபல காவலாசிரியரான எச். ஜி. வெல்ஸ் கூறுவதாவது:—"கடவுள் காமறுபங்களும் கருவி காரணங்களும் உடையவனல்ல; அவன் ஆவிரூபமானவன்; எனினும் பால் வேற்றுமையில்லாத ஒரு பிராணியே. அவன் ஒரு வரையறைக்கு அடங்கியவன்; சர்வஞானியுமல்ல; சர்வ வல்லமையுடையவனுமல்ல; சர்வ வியாபகனுமல்ல. அவன் உலகத்தை சிருஷ்டிக்கவுமில்லை; அடக்கியாளவுமில்லை. அவனுக்கு ஆதியுண்டு; மனித சமூகம் வளருவதோடு அவனும் வளர்ந்து வருகிறான். அவன் காலத்தால் வரையறுக்கப்பட்டவனே. அவன் ஜடப்பொருளிலுமில்லை; பரவெளியிலுமில்லை. அவன் மக்கள் வாழ்வில் லயித்திருக்கிறான்; தான் வளர்ந்து வரும் சக்தியைப் பிரயோகம் செய்யப் போதுமான அறிவைச் சம்பாதிப்பதே அவனது முதல் நோக்கமாக இருக்கிறது. அவன் ஞான திருஷ்டியுடையவனல்ல. மக்கள் அறிவு மூலமே அவன் செயலாற்றுகிறான். ஒரு மனிதன் தன் சிநேகிதனை அறிந்து கொள்வது போலவே கடவுளையும் அறிந்துகொள்ளலாம். எனினும் கடவுள் உண்டென்பதற்கு ருசுவில்லை; நம்பிக்கையே கடவுள் உண்மைக்கு ஆதாரம்."

இம்மாதிரிப் பேச்சு வேறு கதியில்லாத குழந்தைகளின் பேச்சல்லவா? கடவுள் சிருஷ்டிக்கவில்லை; உலகத்தை சிருஷ்டிக்கவில்லை என்று கூறுவது உலகத்தில் கடவுளுக்கு வேலையில்லை யென்று கூறுவதையே ஒக்கும். கடவுளுக்கு ஆதியில்லை; பிரபஞ்சத்தோடு அவனும் வளர்ந்து வருகிறான் என்று கூறுவதற்குப் பொருளே இல்லை. கடவுள் சிருஷ்டிகர்த்தாவல்ல, உலக நாயகனல்லவென்று கூறுவது கடவுள் இல்லையென ஒப்புக்கொள்வதேயாகும். உண்மையெனவெனில் கடவுளின் பாதச்சுவடுகளைப் பிரபஞ்சத்தில் எங்குமே காண முடியவில்லை. நாமறிந்தவரை பிரபஞ்ச இயக்கத்தில் எந்த வெளிச்சக்தியும் தலையிடவே இல்லை. நாம் இதுவரையறிந்துள்ள விஷயங்களினால் இயற்கை சுயமாகத் தோன்றி சுயமாக இயங்குகிறதென்றும் எல்லாக் காரண காரியங்களையும் இயற்கை தன்னுள் அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறதென்றும் பழைய பொருள்களிலிருந்து புதிய உருவங்களை சதா சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறதென்றும் பிறப்பும் இறப்பும் வளர்ச்சியும் அறிவும் பிரபஞ்சத்தில் இயல்

பானதென்றும் மாற்றமடையாத இயற்கை விதியை கடத்தி வைக்கிறதென்றும் தெரிய வருகிறது.

பரிணாமத்தில் தொழில்நித்தியமானது. வானமண்டலத்தில் எல்லாப் பகுதிகளிலும் அக்கினிக் குழம்பு இறுகி புது உலகங்கள் உருவாகிக்கொண்டே இருக்கின்றன. லக்ஷோபிலக்ஷம் வருஷங்களுக்கு முன்னே உலக உற்பத்திக்கு மூலப் பொருளான இந்த மேகப்படலங்களில் ஒன்று சூரிய மண்டல வான வெளியிலே பரவியது. அந்தப் பெரிய மேகப்படலம் குளிர்ச்சியடைந்து இறுகிய பல பாகங்களாகப் பிரிந்தது. அப்பால் எவ்வளவோ காலத்துக்குப் பிறகு சூரியனும் மற்றும் கிரகங்களும் உருவாயின. மேலும் பல யுகங்கள் கழிந்தன. ஏனெனில் இயற்கைக்கு அவசரம் கிடையாது. திரவமாக உலகம் குளிர்ச்சியடைந்து மேற்பகுதி கட்டியாயிற்று. அப்பால் சில மூலப்பொருள்கள் கலந்து ஜீவராசிகள் உண்டாயின. முதற்பிராணி மிக அற்ப உருவுடையதாக இருந்தது. ஒவ்வொரு பிராணியின் உடலிலும் ஒரு கண்ணறையே இருந்தது. காலக்கிரமத்தில் ஒவ்வொரு கண்ணறையும் பெரிதாகப் பரிணாமமாகிப் பிரிந்தது. கடைசியில் இரண்டடுக்குக் கண்ணறைகள் தோன்றின. இவ்வண்ணம் வளர்ச்சியும் மாற்றமும் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டே யிருந்தன. கடைசியில் பிராணிகள் புழுவப்பருவத்தையடைந்தன. அந்தப் பிராணிக்குத் தலையில்லை; ஹிருதயத்துக்காக ஒரு காடிக்குழாய் இருந்தது. பிறகு மீன்களும் அப்பால் ஊர்வனவும் அதற்கப்பால் பல திறப்பட்ட நாற்கால் பிராணிகளும் தோன்றின. ஜீவராசிகள் நானாபக்கங்களிலும் பரவின. உலக முழுதும் விநோதமான பயங்கர மிருகங்களால் நிரப்பப்பட்டன. மரமேறும் பிராணிகளில் மனிதக் குரங்கு போன்ற பிராணிகள் பரிணாமம் பெற்றன. அவைகளிலிருந்து காலக்கிரமத்தில் மிருக சுபாவமுடைய மனிதர்கள் தோன்றினர். ஆற்றலுடையவை வாழ்ந்து விருத்தியடையும், மற்றவை நசிக்கும் என்ற இயற்கை விதிப்படி ஜீவராசிச் சீர்திருத்த வேலையை இயற்கை தொடர்ச்சியாக நடத்திக் கொண்டே இருந்தது. காலக்கிரமத்தில் குழியாயிருந்த காட்டானன் நெற்றி உயர்ச்சியடைந்தது; அவனது சிறு மூளையும் பெரிதாகி விருத்தியடைந்தது. வெளியில் தள்ளிக்கொண்டிருந்த கடவாய் உள்ளுக்கிழுத்துக் கொண்டது. அவனதுமுகத்தின் மிருகத்தோற்றம் சிறிது சாந்தமடைந்தது.

கடைசியாக மனிதன் உருவாக லக்ஷோபி லக்ஷம் வருஷங்கள் பிடித்தன. நமது மூதாதைகள் பிறக்கும் உலக முழுதும் ஊரும் பிராணிகளும் பறவைகளும் நிரம்பியிருந்தன. கடைசியில் இயற்கை அரங்கில் மனிதன் தோன்றியபோதும் கூட அவன் லக்ஷோபி லக்ஷம் வருஷங்களாக பயங்கரப் பிராணிகளுக்கு இரையாகவே இருந்து வந்தான். நமது முன்னோர்களுக்கு எத்தகைய சலுகையும் காட்டப்படவில்லை. மற்றும் ஒரு விஷயத்தையாவது கடவுள் மக்களுக்குக் கற்பிக்கவுமில்லை. மனித சமூகத்துக்கு உண்டான கஷ்டங்களால் ஏற்பட்ட அநுபவமே அதன் ஆசிரியனாக இருந்தது. தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் முறைகளை நமது முன்னோர் கற்றுக்கொண்ட பிறகு அவர்களுடைய கலைகளும் ஸ்தாபனங்களும் விருத்தியாகத் தொடங்கின. தற்காப்பு முறைகளிலிருந்து நாகரிகம் உற்பத்தியாயிற்று.

மதத்தினால் ஏற்படும் அடிமை உணர்ச்சியினால் மனித சமூக முன்னேற்றத்துக்கு எல்லையற்ற தடைகள் ஏற்பட்டிருக்கின்றன. வனத்தில் மனிதன் வாழ்ந்த காலத்தில் மிருகங்களுக்கு இரையாகி வந்தது போலவே நாகரிகம் பெற்ற பிறகும் பன்னூற்றாண்டு காலம் அவன் மத குருமாருக்கு இரையாகிக் கொண்டே இருந்தான். அறியாமை, மூடநம்பிக்கை, பொய், ஹிம்சைகள் மூலம் மத குருமார் மனித சமூகத்தின் பெரிய சத்துருக்களாயிருந்து வருகிறார்கள். விசுவாசிகளுக்குச் சுவர்க்கமும் அவிசுவாசிகளுக்கு நரகமும் கிடைக்குமென்று கூறி புரோகிதர்கள் மக்கள் உள்ளத்தை அசுத்தப்படுத்தி சோம்பலையும் பீதியையும் நுழைத்து விட்டார்கள்.

உலகம் மதத்தின் ஆட்சியில் இருந்த போது நியாய வாதம் செய்வது குற்றமாக மதிக்கப்பட்டது. ஆராய்ச்சி நடத்துவதும் கிறிஸ்து மத நம்பிக்கைகளுக்கு முரணான அபிப்பிராயங்களை வெளியிடுவதும் குற்றமாக எண்ணப்பட்டது. இயற்கை சம்பந்தமான பிரச்சினைகளையறிய பேய்களைப் பிரார்த்தனை செய்யவேண்டுமென்று போதனை செய்யப்பட்டது. சில ஆயிர வருஷங்களுக்கு முன்னே எல்லாப் பொருள்களும் பூரண உருவில் சிருஷ்டிக்கப்பட்டதாகக் கற்பிக்கப்பட்டது. பூமிக்கு கொஞ்ச தூரத்துக்கு மேல் சுவர்க்கம் இருப்பதாக நம்பப்பட்டது. நாம் வாழும் ஒரு புது உலகமே உண்டென்றும் சூரியன் பிரதி தினமும் பூமியைச் சுற்றி வருவதாகவும் நட்சத்திரங்கள் எல்லாம் வானமண்டலத்தை அழகு படுத்தும் ஆபரணங்கள்

என்றும் போதனை செய்யப்பட்டது. இயற்கை விதியைப் பற்றி எவரும் உணரவே இல்லை. பரிணாம வாதத்தையும் எவரும் அறியவில்லை.

அக்காலத்துக்குப் பிறகு அறிவுலகத்திலே விஞ்ஞான சாஸ்திரம் ஒரு பெரிய புரட்சியை உண்டுபண்ணிவிட்டது. பிரபஞ்சம் எல்லையற்றிருக்கின்றதை தூரதிருஷ்டிக்கண்ணாடி மூலம் விளக்கிக் காட்டிவிட்டது. நட்சத்திரங்கள் எல்லாம் எரிந்து கொண்டிருக்கும் சூரியன்களாகிவிட்டன. பிரபஞ்சத்தில் நமது பூமி மட்டும் முக்கியமான நடு நாயகமாயிருக்கவில்லை. பிரபஞ்ச சமுத்திரக் கரையிலே நமது பூமி ஒரு சிறு மணலாகவே இருக்கிறது.

எல்லா உயிர்களும் ஒரு மூல உயிரிலிருந்து தோன்றியிருப்பதாக விஞ்ஞான சாஸ்திரிகள் நிரூபித்துக்காட்டியிருக்கிறார்கள். பிராணி வர்க்கத்திலே மனிதனே உத்தம உருவமும் கேர்த்தியான மூளையும் உடையவன். பண்டு பரிணாம வேலை நடந்து கொண்டிருந்தது போலவே இப்பொழுதும் பரிணாம வேலை நடந்து கொண்டுதானிருக்கிறது.

பிரபஞ்சம் முழுதும்—மண் முழுதும் நட்சத்திரங்கள் வரை, புழுக்கள் முதல் மனிதன் வரை—நித்தியமான ஒரு இயற்கை விதிக்குக் கட்டுப் பட்டிருப்பதாக விஞ்ஞான சாஸ்திரம் ஸ்தாபித்து விட்டது. தெய்வீகமானது, தற்செயலாய்த் தோன்றியது என்பவைகளுக்கு உலகத்தில் இடமே இல்லை. காரணமின்றிக் காரியமில்லை. அற்புதங்கள் உண்டாகவே மாட்டா. பிரார்த்தனைகளுக்குப் பலன் கிடையாது. இயற்கைக் கட்டளையை ஒருவருக்கும் மீற முடியாது. பேய்க்கோ கடவுளுக்கோ அதை அசைக்கவும் முடியாது.

இத்தகைய விஞ்ஞான உண்மைகள் வெளிவந்த பிறகு வேதங்களுக்கும் மதங்களுக்கும் நரகங்களுக்கும் சுவர்க்கங்களுக்கும் தெய்வங்களுக்கும் பேய்களுக்கும் மதிப்புக்குறைந்து விட்டது. அவை மூடநம்பிக்கைகள் ஆகிவிட்டன. இயற்கையுண்மைகளை அறியப்படாத காலத்தில் வாழ்ந்த மக்களின் அறியாமைக்கே அவை அறிகுறிகளாக இருக்கின்றன.

இயற்கையின் ஆயிரக்கணக்கான துறைகளில் விஞ்ஞானம் ஆராய்ச்சி நடத்தி விட்டது. ஒவ்வொரு துறையிலும்

ஆராய்ச்சி நடத்தியவர்கள் கண்ட உண்மைகளினால் தெய்வீகம் என்பது பொய்யென விளக்கப்பட்டு விட்டது.

மதங்களுக்கு இயற்கை சலுகை காட்டவில்லை. ஆட்களை அது மதிப்பதுமில்லை. பிரார்த்தனைகளையும் உபதேசங்களையும் லக்ஷ்யம் செய்யாமல் பூகம்பங்களும் எரிமலைகளும் மக்கள் உயிரை மாய்த்துக்கொண்டே இருக்கும். நல்லாரும் பொல்லாரும் இடி விழுந்து சாகத்தான் செய்வார்கள். பக்திக்கோ ஸ்துதிக்கோ பஞ்சமும் பிரவாகமும் மதிப்புக் கொடுக்கவே மாட்டா. ஆரோக்கியத்துக்கும் நோய்க்கும் பக்தியோ அவிசுவாசமோ காரணமுமல்ல. இயற்கை விதியை மாற்றுமாறு எவனும் நல்லவனாகவோ தீயவனாகவோ இருக்க முடியாது. ஏனெனில் மக்களை மதித்து இயற்கை எதுவும் செய்வதில்லை; நமது விண்ணப்பங்களைக் கேட்க இயற்கைக்கு காதுமில்லை; நமக்கு நன்மை செய்ய இயற்கைக்குக் கையுமில்லை. நம் எண்ணங்களையோ, தேவைகளையோ, நடக்கைகளையோ இயற்கை அறிவதுமில்லை; இயற்கை நமக்கு அருள் சுரப்பதுமில்லை; நம்மை சபிப்பதுமில்லை. ஒரு கொசுவும் மனிதனும் இயற்கைக்கு ஒன்றே. ஜீவராசிகள் விஷயத்தில் இயற்கை அலக்ஷ்யமாகவே இருந்து வருகிறது.

மதபோதனைகளுக்கு நேர்மாறாகவே இயற்கை இருந்து வருகிறது. எனினும் உண்மையில் இயற்கையின் போக்கு உலக க்ஷேமத்துக்கு அநுகுணமாகவே இருந்து வருகிறது. இயற்கை வழியைப்பின்பற்றி உழைத்தவர்களின் உழைப்பே மக்கள் முன்னேற்றத்துக் காரணமாக இருந்திருக்கிறது. மரங்களை வெட்டுதல், வயல்களில் பயிரிடுதல், நகரங்கள் அமைத்தல், கப்பல் நிர்மாணம், யந்திர உற்பத்தி, பள்ளிக்கூடங்கள் ஸ்தாபனம் மற்றும் நாகரிக வளர்ச்சிக்கான காரியங்கள் எல்லாம் இயற்கை விதியைப் பின்பற்றி நடத்தப்பட்டவைகளே.

எனவே பிரபஞ்சம் ஒரு இயற்கை விதிக்குக் கட்டுப்பட்டிருக்கிறதென்றும் பிரார்த்தனைகளினால் பலன் ஏற்படாதென்றும் ஆண்களும் பெண்களும் உணர்ந்து விட்டால் தெய்வீக உதவியை அவர்கள் நாடமாட்டார்கள்; சுய முயற்சியினால் தம்மை விருத்தி செய்ய முயலுவார்கள். நோய்களை எப்படி ஒழிப்பது, ஆயுளை எப்படி நீட்டுவது என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ளுவார்கள். ஆலயங்களையெல்லாம் பள்ளிக்கூடங்களாக மாற்றி விடுவார்கள்; அங்கே சத்தியவாதிகள்

இயற்கை உண்மைகளைப் போதனை செய்வார்கள்; மக்களின் பகுத்தறிவைவிருத்தி செய்து ஒழுக்க மூடையவர்களாக்க அவர்கள் முயலுவார்கள். நீதியை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில் ஸ்தாபனங்களைத் திருத்தியமைப்பார்கள். குற்றவாளிகள் பால் இரக்கங்கொண்டு அவர்களைச் சீர்திருத்த முயல்வார்கள். யுத்தங்கள் உண்டாகாமல் தடையேற் படுத்துவார்கள். உலகத்தை அழகு படுத்தி மக்கள் சுகமாக வாழத் தம்மாலானதை யெல்லாம் செய்வார்கள்.

உலகமே நமது மெய்யான வீடு; குடும்பம்; மக்கள் எல்லாம் நமது சகோதர சகோதரிகள்; நமது தற்கால வாழ்வே நமது சுவர்க்கமும் நரகமும். மதங்கள் எல்லாம் மனிதனால் ஏற்படுத்தப்பட்டவைகளே. கடவுளைப்பற்றிய கருத்துக்களெல் லாம்மக்களின் கற்பனைகளே. கடவுள் உலகத்துக்கு வேதங்க ளைப் போதனை செய்யவுமில்லை; எனவே மதபோதனைகள் எல்லாம் பொய்யே.

இருபதாவது நூற்றாண்டுச் சீர்திருத்தம் என்னும் குன் றின்மேல் நின்று கொண்டு மதசரிதங்களை ஆராய்ந்து பார்க்க லாம்; அநேகதெய்வங்களின் பிறப்பையும் இறப்பையும் அறிந்து கொள்ளலாம்; இயற்கை சக்திகளை காட்டானன் தெய்வ மாக மதித்து வணங்கியதை நாம் பார்க்கிறோம்; அவன் மரங் கள், நதிகள், பிராணிகளை வணங்கியதையும் நாம் பார்க்கி றோம்; யூதர்கள் போன்ற மூறட்டு ஜாதியார் தம் தெய்வங்க ளைக் கொடியவராக்கியிருப்பதையும் நாம் பார்க்கிறோம்; உயர்ந்த லக்ஷியங்களையுடைய நாகரீக சாதியார் தெய்வங் களைக் கவிகளாகவும், அறிவாளிகளாகவும் கருணைக்கடலாக வுர் கற்பனை செய்திருப்பதையும் நாம் பார்க்கிறோம். ஆசியா, எகிப்து, பாபி லோனியா, பாரசீகம், கிரீஸ் தேசத்தவர்கள் கம் பீரமான ஆலயங்கள் கட்டி பூஜைகள் செய்து கடவுளை வணங் குவதையும் நாம் பார்க்கிறோம். சக்தியுடைய தேசத்தாரின் கடவுள்களே மேலான கடவுள்களாயிருப்பதையும் நாம் பார்க் கிறோம்.

காட்சி மாறிக்கொண்டே இருக்கிறது, தேசங்கள் ஒன்றின் பின் ஒன்றாக அழிந்து போகின்றன; அவைகளின் மதங்களும் மறைந்து போகின்றன. அவர்களுடைய தெய்வங்களும் மாண்டு புதைக்கப்பட்டு விடுகின்றன. புது தேசங்கள், புது மதங்கள், புதுத் தெய்வங்கள் தோன்றி மக்களை யடக்கியாள முயல்கின்றன. காலம் செல்லச் செல்ல தெய்வங்களின் தொகை குறைகிறது. கடைசியாக ஒரு மேலான கடவுள் பிரபஞ்சத்தை ஆள்வதாகக்கற்பனை செய்யப்படுகிறது. அந்தக் கடவுளின் பேரிலுள்ள பக்தியினால் மக்கள் இகர விஷயங்களையெல்லாம் மறந்து விடுகிறார்கள். மீண்டும் உலகத்திலே புரோகிதர்கள் தோன்றுகிறார்கள். வறுமை குடிகொள்கிறது. மூட நம்பிக்கைகள், ஹிம்சைகள், துன்பங்கள், யுத்தங்கள் பெருகுகின்றன. மக்களின் பகுத்தறிவு மறைந்து விடுகிறது. சிறிய மதம் உலகத்தை அஞ்ஞான இருளில் அமிழ்த்தி விடுகிறது.

கடைசியில் மக்களின் அறிவுச்சுதந்தர உணர்ச்சி ஆலயங்களையெல்லாம் தகர்த்தெறிகிறது; மீண்டும் பகுத்தறிவு உதயமாகிறது; மக்கள் ஆராய்ச்சி செய்யவும் உண்மைகள் காணவும் முயல்கிறார்கள்; இயற்கை விதி பிரபஞ்சத்தை அடக்கியாளுவது பிரத்தியட்சமாகிறது. விஞ்ஞானம் விருத்தியடைகிறது. இயற்கை உண்மைகள் விளியாகின்றன. கடவுளுண்மை பொய்யாகிறது. மதம் அழிகிறது. மக்கள் விடுதலை பெற்று விருத்தியடைகின்றனர்.

(ஒரு கடவுள் இருந்தாக வேண்டுமானால் இப்போது கடவுளுக்கு கற்பிக்கப்பட்டிருக்கும் குணங்களும் செய்கைகளும் மாற்றமடைந்தாக வேண்டும். சாத்தான், கர்மம், முன் ஜன்மம், விதி, கடவுள் சித்தம் முதலியவைகள் மாறி,உலகம்பொது, அது ஒரு குடும்பம், உலக சொத்தும் சுக துக்கமும் பொது (அக்குடும்ப சொத்து) என்ற கொள்கை மதக்கொள்கையாகி அதை நடத்திக்கொடுக்கும் சக்தி உள்ள (கற்பிக்கப்பட்ட) கடவுள் இருக்கட்டும்)

நல்வழி எது?

(இங்கர்சால்)

I

இரண்டு வழிகள் உள்ளன. அவற்றுள் ஒன்று இயற்கை வழி; மற்றொன்று இயற்கைக்குப் பொருந்காத அல்லது ஆத்மீக வழி. (ஆத்மீகவழி என்பது பஞ்சேந்திரியங்களுக்கு எட்டாததும் காரண காரியங்களை கண்டுபிடிக்க முடியாததுமான தெய்வீக நம்பிக்கை வழி)

நாம் வாழும் உலகத்துக்கு நன்மை பயக்கும் முறையில் வாழ்தல், கல்வியினாலும் ஆராய்ச்சியினாலும் மூளையை விருத்தி செய்துகொள்ளுதல், புதுக்கருவிகளைக் கண்டுபிடித்து இயற்கைச் சக்திகளை மக்களுக்குப் பயன் படுத்திக்கொள்ளும் படி செய்தல், நல்ல வீடுகளையும் ஆடைகளையும் உணவுப் பொருள்களையும் உண்டுபண்ணுதல், ஆசா பாசங்களை கலைகளினாலும் விஞ்ஞான சாஸ்திரத்தாலும் பூர்த்திசெய்து கொள்ளுதல் முதலியன இயற்கை வழியின்பாற் பட்டனையாகும்.

நாம் எதிர்பார்க்கும் மறுஉலகத்துக்காக என்று வாழ்வது, நம்மால் அறிந்துகொள்ளமுடியாத ஒரு பொன்னுலக வாழ்க்கைக்காக என்று இம்மண்ணுலக வாழ்க்கையைத் தியாகம் செய்வது, பிரார்த்தனை, சடங்குகள் மூலம் மண்டலத்துக்கு மேலேயுள்ள பூதங்களின் உதவியையும் பாதுகாப்பையும் நாடுவது மற்றும் இவைபோன்றன ஆத்மீக வழியின்பாற் பட்டவையாகும்.

மற்றும் சிந்தித்து, உற்றுநோக்கி பகுத்தறிவு ஒளியைப் பின்பற்றுவதே இயற்கை வழி.

புலன்கள் (பஞ்சேந்திரியங்கள்) பகுத்தறிவு (ஆராய்தல்) மூதலியவைகளின் அநுபவங்களையும் அதன் நியதிகளையும் மீறி, எல்லாம் தமக்குத் தெரியுமென்று கூறுவோரின் போதனைகளை நம்புவதும், ஒப்புக்கொள்வதும், பின்பற்றுவதும் ஆக்மீக வழியிற்பட்டவையாகும்.

மனித சமூகத்தின் சுகூமத்துக்காகவும் மனைவி மக்கள் கலனுக்காகவும் வாழ்வதும், நம் அன்புக்குப் பாத்திரமானவர்கள் சந்தோஷமாக இருக்கும்படி பார்த்துக் கொள்வதும் அவர்களை உலகத் தின்பங்கள் சாராமற் காப்பாற்றுவதும்இயற்கை வழியிற்பட்டவையாகும்.

மறுஉலகத்தில் பரிசு (மேன்மை) கிடைக்கும் என்ற நம்பிக்கையினால், பூதங்களையும் ஆவிகளையும் பேய் பிசாசுகளையும் தெய்வங்களையும் நம்பி அவைகளுக்காகவே வாழ்வது ஆக்மீக வழி.

பகுத்தறிவுக்கு மதிப்புக்கொடுத்து பிரத்தியட்ச அனுபவ உண்மைகளை நம்பி வாழ்வது இயற்கை வழி.

குருட்டு நம்பிக்கைக்கு மதிப்புக்கொடுத்து நம்பித்தான் ஆகவேண்டும் என்கிற நிர்ப்பந்தத்தின் மீது வாழ்வது ஆக்மீக வழி.

யாவற்றையும் புலனறிவால்—ஸ்பரிசத்தால்—காட்சியால்-கேள்வியால் ஆராய்ந்தறிந்து மூளைக்குப் பிரகாசத்தைக் கொடுக்கும் அறிவுச் சோதியின் உதவியினால் வாழ்க்கை நடத்துவது இயற்கை வழி.

அந்தப்புனித அறிவுச்சுடரை அவித்து பெரியார்கள் என்பவர்கள் சொன்னார்கள் என்று மற்றவர்களைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றுவது ஆத்மீக வழி.

உன்கருத்துகளைப் பிறருக்குச் சொல்லி, பேய் பிசாசுகளைபும் நரகங்களையும் லக்ஷ்யம் செய்யாமல் தைரியமாக நிமிர்ந்து நின்று சுதந்தியவானாக விளங்குவது இயற்கைவழி.

கெஞ்சி, மன்றாடி, சுயமரியாதையையிழந்து, உனக்கு அனுபவிக்கத் தைரியமில்லாத சுயேச்சையை மற்றவர்களுக்கு அளிக்க மறுத்து அடிமை வாழ்க்கை வாழ்வது மற்றொரு வழி.

தப்பான போதனைகளை நம்பித் தப்புவழியில் நடப்பவர் களை நான் வெறுப்பதாக எண்ணவேண்டாம்.

தம்மால் சாத்திபமானதை நமது முன்னோர்கள் செய் தார்கள்; தெய்வீகமானது எதுவோ ஒன்று இருப்பதாக அவர்கள் நம்பினார்கள்; பலிகளினாலும் பிரார்த்தனைகளி னாலும் நோன்புகளினாலும் அழுவதினாலும் தெய்வங்கள் மனமிரங்கி மகிழ்ச்சியையும் மழையையும் செல்வத்தையும் மண் ணுலகில் நீண்ட வாழ்க்கையையும் பொன்னுலகத்தில் பேரின் பத்தையும் அளிக்குமென்று அவர்கள் நம்பினார்கள்.

கடவுள் ஒரு யதேச்சாதிகார அரசன் என்றும் சிறு குற் றங்களுக்கும் கடுங்கோபம் கொள்ளக்கூடியவன் என்றும் சத்து ருக்களிடம் வெறுப்பும் பகையும் மித்துருக்களிடம் கருணை யும் காட்டக் கூடியவன் என்றும் அவர்கள் நம்பினார்கள்.

பிரபஞ்சநாயகனான கடவுளுக்கு ஒப்பான தியகடவுள் ஒன்று இருப்பதாகவும் மற்றக் கடவுளைவிட அது மிகவும் தங் திரமானதென்றும் அவர்கள் நம்பினார்கள். பூனையின் இரு கரங்களின் இடையில் அகப்பட்ட எலிக்குஞ்சைப்போல அந்த இரண்டு கடவுள்களுக்கு இடையில் ஆத்மா அகப்பட்டுத் தத்த ளித்துக்கொண்டு இருந்ததாக நம்பினார்கள்.

அந்த இரண்டு கடவுள்களும் மக்கள் மனத்தில் பீதியை உண்டுபண்ணின. நமது முன்னோர்கள் கடவுளை அவ்வள வாக நேசிக்கவுமில்லை; பேயை அவ்வளவாக வெறுக்கவு மில்லை; மாறாக அவைகள் இரண்டுக்கும் பயந்திருந்தார்கள். பேயுடன் சேர்ந்து இந்த உலகத்திலும் கடவுளுடன் சேர்ந்து மறு உலகத்திலும் இன்பம் அனுபவிக்கவே அவர்கள் உண்மை யில் விரும்பினார்கள். அவைகளினால் இயற்கையின் போக்கு பாதிக்கப்படுகிறதென்றும் பாப தண்டனையாக ஜலப்பிரளயங்க ளையும், கொடுங்காற்றுகளையும், நோய்களையும், பூகம்பங்க ளையும், புயல்களையும அவை அனுப்புகின்றனவென்றும் அவர்கள் நம்பினார்கள்.

யாவும் தெய்வீக சக்தியின் ஆணைப்படி நடப்பதாக நம்பினார்கள். வான மண்டலத்திலும் இருளிலும் தேவதூதர் களும் பேய் பிசாசுகளும் ஆவிகளும் நிறைந்திருந்தனவாம். அவை பக்தர்களுக்கும் உண்மை நம்பிக்கையுடையவர்களுக்கும் எதிரிடையாகச் சூழ்ச்சி செய்தனவாம்.

மக்களின் பாபச் செயல்களினால் கிரகணங்கள் உண்டாயினவாம்; அசாதாரணமானவைகள் எல்லாம் தெய்வத்திருவிளையாடல்களாம். பண்டைக்காலத்தில் கிறிஸ்தவ நாடுகள் எல்லாம் பைத்தியகார ஆஸ்பத்திரிகளாக இருந்தன. அத்தியட்சகர்களும் புரோகிதர்களும் அந்த ஆஸ்பத்திரிகளின் அதிகாரிகளாயிருந்தனர். அக்காலத்தில் விஞ்ஞான சாஸ்திரமே கிடையாது. மக்கள் ஆராய்ச்சி செய்வதுமில்லை; சிந்திப்பதுமில்லை. நடுநடுங்கியாவற்றையும் நம்பினார்கள். அறியாமையும் மூடப்பக்தியும் கிறிஸ்தவநாடுகளில் குடிகொண்டிருந்தன.

கடைசியாகச் சிலர் உற்றுநோக்கவும் தாம் கண்டவைகளைக்குறித்து வைக்கவும் சிந்தனை செய்யவும் தொடங்கினார்கள்.

சில குறிப்பிட்ட காலங்களில் கிரகணம் உண்டாகிறதென்றும் அதை முன்னாடியே அறியலாமென்றும் கண்டுபிடிக்கப்பட்டது. மக்கள் செயலுக்கும் கிரகணங்களுக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை யென்றும் ருசுப்படுத்திக்காட்டினார்கள். பூகம்பங்கள் புயற்காற்றுகள் முதலியன இயற்கைக் காரணங்களினாலேயே தோன்றுகின்றனவென்றும் அவைகளுக்கும் மக்கள் செயலுக்கும் எத்தகைய தொடர்புமில்லை யென்றும் யூகிக்கத் தொடங்கினார்கள்.

பேய் பிசாசுகளைப்பற்றியும் சிலருக்குச் சந்தேகமுண்டாயிற்று. உலக விவகாரங்களுக்கும் தேவ தூதர்களுக்கும் சம்மந்தமிருக்க முடியுமாவென்றும் ஐயப்பாடுண்டாயிற்று.

வானசாஸ்திரம் மூலம் பல உண்மைகள் புலப்படலாயின. கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் இருப்பதாகவும் கிரகங்கள் எல்லாம் சதா சுற்றிக்கொண்டு இருக்கின்றனவென்றும் அவைகளில் பெரும்பாலன பூமியைக்காட்டிலும் பிரம்மாண்டமானவையென்றும் பூண்டுகள் சிறுகச் சிறுகவளர்ந்து பல உருக்கொண்டனவென்றும் கண்டுபிடிக்கப்பட்டன.

பூகண்டங்கள், தீவுகள் தோன்றிய வரலாறுகளும் அறியப்பட்டன. தீ, நீர், காற்று முதலியன பலகோடி வருஷமாகச் செய்துவந்த வேலைகளும் விளக்கப்பட்டன. ஜீவராசிகள் எல்லாம் பந்தமுடையனவென்றும் உணரப்பட்டது. சூரியமண்டலத்தில் பூமியின் ஸ்தானமும் நிர்ணயம் செய்யப்பட்டது.

ஆராய்ச்சியினாலும் பரீக்ஷைகளினாலும் பல ரஸாயன உண்மைகள் வெளியாயின.

அச்சு யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோடு அறிவு பரவியதினால் குருட்டு நம்பிக்கைகள் ஒழியத்தொடங்கின. மக்கள் சுதந்தர உணர்ச்சி பெற்றனர்; உண்மை ஒளியை நாடலானார்கள். வெகு விரைவில் ஆராய்ச்சியாளர்களும் சிந்தனையாளர்களும் பெருகலானார்கள்; உண்மைகள் புலப்படத் தொடங்கின; விஞ்ஞான சாஸ்திரமும் உருவாயிற்று. பழைய நம்பிக்கைகள் ஆபாசமெனத் தோன்றலாயின. தெய்வீகம் மறையத் தொடங்கிற்று; தெய்வீகத்துக்கும் உலகியலுக்கும் சம்மந்தமில்லையெனவும் உறுதியாயிற்று.

பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிதமாயின; குழந்தைகளுக்குக் கல்வி புகட்டப்பட்டன; புத்தகங்கள் அச்சிடப்பட்டன; சிந்தனையாளர்கள் பெருகினார்கள். காளுக்குநாள் தெய்வீகத்தில் நம்பிக்கை குறையலாயிற்று. தாமே தமக்குக் காப்பாளர் என்ற நம்பிக்கையும் சிறுகச் சிறுக உறுதிபெறலாயிற்று. அஞ்ஞான—அநாகரீக இருள் நீங்கி மெய்ஞ்ஞானம் உதயமாயிற்று. ஹிருதயத்தில் சுதந்தர உணர்ச்சி குடிகொண்டது; ஆத்மா தன் சக்திகளைச் சிந்திக்கலாயிற்று. நானாடக்கங்களிலும் புதுப்புது விஷயங்களும் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன; உறுதியான கருத்துக்கள் தோன்றலாயின.

விஞ்ஞான சாஸ்திரிகளை மதாபிமானிகள் தம் எதிரிகளாக மதித்தனர். உண்மையாராய்ச்சியாளரை மதபோதகர்கள் சிறையிலடைக்கவும் சித்திரவதை செய்யவும் ஹிம்சிக்கவும் தொடங்கினார்கள்.

சிந்தனையாளர்கள்—அவிசுவாசிகள், நாஸ்திகர்கள், சாத்தான் தோழர்கள், கிறிஸ்துத் துரோகிகள் என அவமதிக்கப்பட்டார்கள். அறிவிலிகளையும் பொறாமைக்காரர்களையும் துஷ்டர்களையும் தூண்டிவிட்டு சுதந்தரச் சிந்தனையை அடக்க முயற்சி செய்யப்பட்டது. இந்தப் போர் பல நூற்றாண்டு காலம் முட்டின்றி நடைபெற்று வந்தது. தெய்வீக சக்தியால் நம்பிக்கையுடையவர்கள் பகுத்தறிவு வாதிகளுக்குப் பலவித இன்னல்களை இழைத்து வந்தார்கள். தெய்வீகத்தின் பெயரால் எவ்வளவோ பாதகங்கள், கொடுமைகள் நடைபெற்றன. எனினும் எத்தகைய இடுக்கண்களையும் பொருட்படுத்தாமல்

இயற்கை வாதிகள் முன்னேற்றமடைந்து வந்தனர். அவர்கள் முன்னேற்றமடைய அடைய சமயவாதிகள் செல்வாக்குக்குறையத்தொடங்கியது. இப்பொழுது உலகத்திலுள்ள அறிவாளிகள் எல்லாம் இயற்கை வாதிகளுக்கு ஆதரவாகவே இருந்து வருகிறார்கள். எனினும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமாகவே இருக்கிறது; அந்தப்போர் நிகழ்ந்துகொண்டு இருக்கையிலேயே இயற்கை வாதிகள் வெற்றியடைந்து கொண்டும் ஆத்மீக வாதிகள் தோல்வியுற்றுக் கொண்டும் இருக்கிறார்கள். இன்னும் கொஞ்ச காலத்துக்குள் மூடபக்தியை விஞ்ஞான சாஸ்திரம் வெல்வது உறுதி.

இவ்வண்ணம், பல நூற்றாண்டு காலம் வாழ்க்கையைப் பற்றி இரண்டு கொள்கைகள் நிலைபெற்று இருந்துவந்தன. ஒன்று ஆசாபாசங்களை வென்று தேவைகளைச் சுருக்கி பரம்பொருளில் நம்பிக்கை வைப்பது; மற்றொன்று ஆசாபாசங்களை நியாயமானமுறையில் திருப்திப்படுத்தி, தேவைகளைப்பெருக்கி, கைத்தொழில்களினாலும் புத்திசாலித்தனத்தாலும் அவைகளைத் திருப்திப்படுத்தி சுயமுயற்சியில் நம்பிக்கை கொள்வது. டயோஜினஸ், எபிக்டிட்டஸ், (எகதேச அளவில்) சாக்ரட்டிஸ் புத்தர், கிறிஸ்து முதலியோர் முதல் கொள்கைகளையே பிரசாரம் செய்தனர். அவர்கள் எல்லாம் செல்வத்தையும் போகத்தையும் வெறுத்தனர்; கலைக்கும் சங்கீதத்துக்கும் எதிரிகளாகயிருந்தனர்; நல்ல ஆடை, நல்ல உணவு, நல்ல வீடு முதலியனவைகளையும் இகழ்ந்தனர். வறுமை, கந்தல், குடிசைக்குச்சு, அறியாமை நம்பிக்கை முதலியவைகளை ஆதரிக்கும் தத்துவ ஞானிகளாயிருந்தனர். பொன்னுலகின்பங்களையும் மண்ணுலகத் துன்பங்களையும்பற்றி அவர்கள் சதா பிரசாரம் செய்தனர். சீமான்களையும் உழைப்பாளிகளையும் உலக சுகங்கள் அனுபவிப்பவர்களையும் அவர்கள் இகழ்ந்தார்கள். ஏழை எளியோரை சுவர்க்கம்புகத் தகுதியுடையவர்கள் எனக் கூறினார்கள்.

அத்தகைய தத்துவ ஞானத்துக்கு இப்பொழுது மதிப்புக் குறைந்துவருகிறது. இப்பொழுது இந்த உலகத்திலேயே சாத்தியமான இன்பங்களை அநுபவித்துவிட மக்கள் பெரு முயற்சி செய்கிறார்கள். பெரும்பாலார் உணவு, உடை, வீடு, புஸ்தகங்கள், சித்திரசாலைகள், போகம், ஓய்வு முதலியவைகளை முக்கியமாக விரும்புகிறார்கள். மூளையைவிருத்திசெய்வதிலும் இயற்கைச் சக்தியை அடிமைப்படுத்துவதிலும் அவர்கள் முனைந்து நின்று வேலை செய்து வருகிறார்கள்.

இப்பொழுது அறிவாளிகள் துறவிகள் உபதேசங்களையும் தத்துவபோதங்களையும் புறக்கணிக்கத் தொடங்கிவிட்டார்கள். உபவாசம், ஆக்மநிக்கிரகம் முதலிய பைத்தியகாரக் கூத்துக்களில் அவர்களுக்கு இப்பொழுது நம்பிக்கையில்லை. நற்செயல்கள் நன்மையையும் தீச்செயல்கள் தீமையையும் படைக்குமென் அவர்கள் நம்புகிறார்கள்.

இன்பத்துக்கான மார்க்கங்களை மக்கள் ஆராய்ச்சியினாலும் பகுத்தறிவினாலும் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளின்படி வாழ்க்கைநடத்த வேண்டுமென்றும் அவர்கள் நம்புகிறார்கள். தெய்வீகத்தில் அவர்களுக்கு இப்பொழுது நம்பிக்கையே இல்லை. பூகம்பங்களுக்கும் புயற்காற்றுகளுக்கும் எரிமலைகளுக்கும் கிரகணங்களுக்கும் மனிதன் காரணமென்று அவர்கள் இப்பொழுது நம்புவதில்லை. அறிவினால் பல துன்பங்களைத் தடுக்கலாமென்று அறிவை விருத்தி செய்ய அவர்கள் முயல்கிறார்கள். பள்ளிக்கூடமே அவர்களது தேவாலயம்; சர்வகலாசங்கமே அவர்களது ஞானக்கோபுரம்.

மற்றும் பன்னாற்றாண்டு காலம் தேச நிருவாகத்தைப் பற்றியும் இரண்டு தத்துவங்கள் நிலைபெற்றிருந்தன. ஒன்று மத சம்மந்தமானது; மற்றொன்று லௌகீக சம்மந்தமானது.

அரசன் கடவுளிடமிருந்து நேரடியாக அதிகாரம் பெற்றவனாம். என்வே மக்கள் எல்லாம் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்து தீர வேண்டுமாம். மதாசிரியர்கள் எல்லாம் கடவுளிடமிருந்து நேரடியாக ஞானோபதேசம் பெற்றவர்களாம்; எனவே மக்கள் எல்லாம் அவர்கள் கூறுவதை நம்பித்தீரவேண்டுமாம்.

சமயாசிரியர்கள் நிருவாகம் இப்பொழுது அதிப்பிழந்து வருகிறது. இங்கிலாந்திலே கடவுளின் ஸ்தானத்தைப் பார்லிமெண்டு கைப்பற்றிக்கொண்டு விட்டது. அமெரிக்காவில் ஆள்வோர் ஆளப்படுவோரிடமிருந்து அதிகாரம் பெற்று வருகிறார்கள். இத்தாலியாவிலே கத்தோலிக்கக் கடவுளுக்கும் சர்க்காருக்கும் இருந்துவந்த தொடர்பு அறுந்து விட்டது. ருஷ்யாவில் பொதுவுடமை தாண்டவமாடுகிறது.

சமயகுருமார் அதிகாரமிழந்து லௌகீக அதிகாரம் வலுப்பெற்றுவருகிறது. மனிதன் நாளுக்குநாள் வளர்ச்சியடைந்து வருகிறான்; கடவுள் நாளுக்குநாள் தேய்ந்துமாய்ந்து வருகிறது. பயங்காளிகள், அறிவிலிகள், தந்திரசாலிகள், அயோக்கியர்கள் முதலியோரே சமய குருமார் ஆதிக்கத்தை மதித்து வரு

கடவுள்.

(கைவல்யம்.)

கடவுள் என்றால் யாவற்றையுங் கடந்து யாவற்றுள்ளும் கலந்து நிற்கும் ஒரு பெரும் பொருள் என்று சொல்லப்படுகிறது. உலகத்திலுள்ள மதங்களெல்லாம் பெரும்பாலும் அப்பொருளையே தலைமையாகக் கொண்டு நிற்கின்றன. அக்கடவுள் நிலைமையைத்தான் எல்லாச்சமயவாதிகளும் ஒன்றாகவே நிச்சயிக்கிறார்கள். அக்கடவுள் நிலைமையைப் பற்றியோ, அதன் அபாரசக்திகளைப்பற்றியோ, சமய தர்க்கங்களைப்பற்றியோ நான்

கிறார்கள். உண்மையும் மனவுறுதியும் உடையவர்கள் ஜனநாயகத்தையே ஆதரிக்கிறார்கள்.

பாதிரியார் அல்லது தேவ ஆவி உதவியின்றி மனிதனுக்குத் தன்னைத்தானே ஆண்டுகொள்ள முடியுமென்று நாம் அறிந்து கொண்டுவிட்டோம். மதத்துக்கு ஆதாரமில்லையென்றும் ஆதாரமில்லாததை நம்புவது சிலாக்கியமான தல்லவென்றும் நாம் தெரிந்துகொண்டு விட்டோம். ஆதாரமுடையவைகளை ஒருவருக்கும் மறுக்கமுடியாதென்பதையும் நாமறிவோம். ஆதாரமுடையவைகளை நம்புவது அவ்வளவு விசேஷமான தல்லவென்றும் ஆதாரமற்றவைகளை நம்புகிறவர்களை எவரும் பாராட்டமாட்டார்களென்றும் நாம் உணர்ந்து கொண்டுவிட்டோம்.

விசுவாசிகள் எல்லாம் நல்லவர்களாகவும் இருக்கவில்லை. மகாகொடியவர்கள் பலர் விசுவாசிகளாகவே இருந்திருக்கிறார்கள். சாக்கரிட்டிசுக்கு விஷம் கொடுத்தவர்கள் விசுவாசிகளே. கிறிஸ்துவைச் சிலுவையிலேற்றிய யூதர்களும் விசுவாசிகளே. பேய் மும்மூர்த்திகளை நம்புகிறது. எனினும் அதன் ஒழுக்கம் உயரவில்லை. எனவே நமது முன்னோர் மதத்தை ஆராயுமக்கு உரிமையுண்டு.

உங்களிடம் வாதிக்கவில்லை. மற்றநாட்டுக் கடவுளைப்போல நமது நாட்டுக்கடவுளும் நமது ஊண், உடை, தொழில், கல்வி, மிவாக விவகாரங்களில் குறுக்கிடாமலிருந்தால் அந்தக் கடவுளைக் குற்றம் சொல்லுவதுமில்லை. கடவுள் சுகத்திற்காக ஆசைமிகுந்து பக்திமேலிட்டு இவ்வுலக சுகத்தைவிட்டு கடவுளோடு கலந்துகொள்ளப்போகிறவர்களைத் தடுப்பதுமில்லை. அப்படியிருக்கக் கடவுளைக்குற்றம் சொல்லுகிறோம் என்று பொதுப்பட ஏன் சொல்லுகிறீர்கள்?

அந்தக் கடவுளைப்பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவு எனக்குத்தெரியும். எவ்வளவு எனக்குத் தெரியாதோ அவ்வளவு உங்களுக்கும் தெரியாது. உள்ளம் கடந்து அப்பால் நிற்கும் கடவுளை உள்ளம் கடந்து அறிவால் கண்டு ஆனந்திக்கலாமென்று, அதாவது இந்திரியங்கள் கலந்த இவ்வுலக சுகங்களிலுள்ள மனதை விட்டு அதற்கு அப்பாற்பட்ட சித்தனா சக்தியென்னும் அறிவால் கடவுள் தன்மையைக்கண்டு அதோடு கூடிவாழ நினைப்பதே விசேடமென்று சொல்லப்படுவதை நீங்களும் படித்தும், கேட்டுமிருக்கிறீர்கள். நானும் அப்படியே தெரிந்திருக்கிறேன். இவ்வுலக விவகாரங்களை நான் எப்படிப்பற்றிக்கொண்டிருக்கிறேனோ அப்படியே நீங்களும் பற்றிக்கொண்டிருக்கிறீர்கள். இவ்வுலக சுகதுக்கங்கள் நம்மிருவருக்கும் ஒன்றாகவேயிருக்கின்றன.

"உண்மைத் தத்துவங்கள் உனக்கு விளங்கவில்லை. அந்தப்பெரும் கடவுளைத்தான் கோவில்களில்கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கின்றன. கடவுள் பக்தியாலும், ஒழுக்கத்தாலும் நன்னடக்கை வருவதற்கே கோவில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடவுள் இல்லையென்றாலே ஒழுக்கம் கெட்டுப்போகும். பாவ கிருத்தியங்கள் அதிகமாய்விடும். சாஸ்திர அறிஞர்களான முன்னோர்களால் போடப்பட்ட வேலியெல்லாம் பாழடைந்துவிடும். ஆகையால் எந்தக் கடவுளையும், சாஸ்திரங்களையும் பெரியவர்களையும் குற்றம் சொல்லாமல் உங்களுடைய சீர்திருத்தங்களைச் செய்துகொள்ளுங்கள்" என்று சொல்லுகிறீர்கள்.

இப்பொழுது சொன்னவைகளுக்கெல்லாம் எனது நண்பனில் பலர் 'குடி அரசு' பத்திரிகையில் விரிவாக எழுதியிருக்கிறார்கள். நீங்களும் படித்திருப்பீர்கள். வியாபக அறிவில்லாதவர்களைப்போகவும், விவகாரத்தின் உண்மையை ஆலோ

சித்துப்பார்ப்பதற்குச் சக்தியற்றவர்களைப்போலவும் அல்லவே தாங்கள். வேதாந்த சித்தாந்தம் படித்தவர்களாயிற்றே! ஆங்கிலத்திலும் கலந்தவர்களல்லவோ! உலக அனுபோகமும் உங்களிடமுண்டே! அப்படி இருந்தும் ஏன் விவகாரத்தின் உண்மையை உணரவில்லை? அதன் உண்மைகளை எங்களில் சிறியோனான நான் உங்களுக்கு விரித்துச்சொல்ல இந்த ஏட்டில் இடமில்லை என்றாலும், இடமுள்ளவரையிலும் சுருக்கிச்சொல்லுகிறேன்.

கடவுள் பேரைச்சொல்லி மனிதனை மனிதன் தாழ்த்துவதும், மோசம் செய்வதும், சமயத்தின் பேரைச்சொல்லி மனிதனை மனிதன் இழிவு படுத்துவதும், சாஸ்திரமென்னும் பெயரைச்சொல்லி தன்னம்பிக்கையில்லாத கோழைகளாக்குவதும் ஜாதியின் பெயரைச்சொல்லி சமூகத்திற்கே துன்பத்தை விளைவிப்பதும், இத்தனையாலும் பெரியவர்கள் பேரைச்சொல்லி ஏமாற்றுவதுமான விஷயங்களிலேயே என் விவகாரங்களிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். கடவுளுக்குச் சாதியில்லை, சமயமில்லை, கடவுளை அடையப் போகிறவனுக்கும் சாதியும் சமயமுமில்லை என்பதும் நீங்கள் உணர்ந்த விஷயம், நீங்களும் நானும் படித்த சாஸ்திரங்களும் அப்படியே சொல்லுகின்றன.

சைவர்களும், அவர்கள் ஆச்சாரிகளும் தங்கள் சாஸ்திரங்கள், புராணங்கள், திருமறைகள் முதலியவைகளிலெல்லாம் விஷ்ணுவை தேவனில் ஒருவனாகவே சொல்லியிருப்பதுமல்லாமல் இழிவுபடுத்திப்பாடியும் எழுதியும் வைத்திருக்கிறார்கள். அதுபோலவே வைணவ இதிகாச புராணங்களிலும், திருவாய் மொழிகளிலும் சிவபெருமானை ஒரு தேவனென்றே சொல்லியிருப்பதுமல்லாமல் இழிவு படுத்தி எழுதியும் வைத்திருக்கிறார்கள். இதிலிருந்து சைவவைணவப் பண்டிதர்கள் மாறிமாறி இழிவுப்படுத்திப்பாடின பாட்டுகளோ அனந்தம். அந்தப்பாட்டைப்படித்து ஆடிப் பாடி பஜனை பண்ணும் பக்தர்களோ அநேகம். அந்தப்பாட்டைப் பதம் பதமாகப் பிரித்து இலக்கணப்பிழையில்லாமல் அர்த்தம் செய்யவந்த பண்டிதர்களோ இருகட்சியிலும் எத்தனையோ பேர். இந்த இரண்டு தெய்வத்தையும் "அறிவேதெய்வம், ஆன்மாவே கடவுள், ஞானமே மோக்ஷம், பிரமமே உலக" மென்னும் வேதாந்தி ஒத்துக்கொள்வதில்லை. அந்த வேதாந்தியை வை

ணவ சைவர்கள் பிரசன்ன பௌத்தனென்றும் மாயாவாதி என்றும் தள்ளியேவிட்டார்கள். இந்த மூன்றும் கூடித் தானே இந்துமதம்! இந்த மூன்று பேர்களாலும் தூஷணைக்கு உட்படாத ஒரு இந்து தெய்வமுண்டா? நாங்கள் அப்படித்தூஷிக்கவில்லை; அதற்காக வந்தவர்களுமன்று. பல கடவுளை சிருஷ்டித்து அதற்காக பல சமயங்கள், பல ஏற்பாடுகள், பல கொள்கைகள், பல ஜாதிகள் முதலியவைகளையுண்டாக்கி ஏமாற்றி வருவதற்கு முதற்காரணமாக விருக்கும்தெய்வங்களெல்லாம் சிறிதுமறைந்துபோனால் நல்லதென்றே சொல்லுகிறோம்.

அதுவுமல்லாமல் கபிலர் விஷ்ணுவின் அவதார மென்கிறார்கள். அவர் செய்த சாங்கிய மதத்தையும் கண்டிக்கிறார்கள். பதஞ்சலிக்குப்பரமசிவனால் யோக சாஸ்திரம் சொல்லப்பட்டது, அவர் ஆதிசேஷ அவதாரம், அவரால் சொல்லப்பட்ட யோகசாஸ்திரத்தையும் சங்கர பாஷியம் கண்டிக்கிறது. விஷ்ணுவின் தசாவதாரங்களில் ஒன்றான புத்தபகவானாலும், அம்ச அவதாரமான ரிஷபதேவராலும் உபதேசிக்கப்பட்ட பௌத்த சைன மதங்களை சங்கரர் அவதாரமான சங்கரரும், விஷ்ணு அம்சமான ராமானுஜரும், சுப்பிரமணிய அவதாரமான திருஞான சம்பந்தரும் கண்டித்தார்கள். இதையெல்லாம் கவனித்தால் இவர்களில் யார் பெரியவர்கள்? இந்து சமயப்பிரிவுக்குள் எந்த சமயம் தள்ளப்படாதது? குற்றம் சொல்லிக் கண்டித்தவர்களும் கண்டிக்கப்பட்டவர்களும் பெரியவர்களாகச் சொல்லப்படுகிறவர்கள்தானே? இந்த சமயங்களின் தொல்லையானபாரம் எங்கள் தலையில் ஏறி கழுத்தை அப்படியும் இப்படியும் திருப்ப விடாமல் பிடித்துக்கொண்டிருக்கும் பிடிப்பைத்தளர்த்த வேண்டுமென்பதே எங்கள் விவகாரம்.

நீங்கள் இதை இன்னும் கருத்தோடு கவனியுங்கள்! "சிவனுடைய இருதயமே விஷ்ணு, விஷ்ணுவின் இருதயமே சிவன், என்னிடத்தில் பக்தி செய்து சங்கரனைத்து வேஷிப்பவனும், சங்கரனிடத்தில் பக்தி வைத்து என்னைதுவேஷிப்பவனும் சூரியன், சந்திரன் உள்ளவரையில் கோரமான நரகத்தையடைவார்கள்" என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொன்ன வார்த்தை மெய்யா? பொய்யா? பொய்யானால் எல்லாப்பெரியவர்கள் வார்த்தையும், பாகவதம், பாரதம், கீதை, பெருமாள் திருப்பதியிலிருந்து மதுரை கள்ள அழகர்

வைகையாற்றில் இறங்கி மண்டபமண்டபமாக எழுந்தருளி துலுக்கநாச்சியார் பள்ளியறை போய்ச் சேருகிறவரையிலும் பொய்யாகவே போகட்டும். அந்த ஸ்ரீ கிருஷ்ணன் வார்த்தை மெய்யானாலோ சைவசமய ஆச்சாரிகள், சந்தானகுரவர்கள், சமயகுரவர்கள், அவர்களைச்சேர்ந்தவர்கள், சைவப் பண்டிதர்கள், சைவ பக்தர்கள் எல்லாம் இன்றைக்கும் என்றைக்கும் கோர நரகத்திலேயே கிடக்க வேண்டும். அதுபோல வே வைணவ ஆச்சாரிகள், ஆழ்வார்கள், ஜீயர்கள், பாகவதர்கள் இவர்களைச்சேர்ந்த பக்தர்களெல்லாம் என்றைக்கும் கோர நரகத்திலேயே கிடக்கவேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணன் வார்த்தையை அநேகமாக இந்து சமய வாதிகளெல்லாம் மெய்யென்றே சொல்லுவார்கள். மெய்யானால் ஸ்ரீ கிருஷ்ணருக்குப்பின் உண்டான சைவவைணவ சமய வாதிகளெல்லோரும் கோரமான நரகத்தில் தானிருக்கவேண்டும். இனியும் இப்பொழுதுள்ள சைவ வைணவ கிரந்தங்களை ஆதாரமாகக்கொண்டு நடக்கிறவர்களும், இனியும் நடக்கப்போகிறவர்களும் ஸ்ரீ கிருஷ்ணன் வார்த்தைப்பிரகாரம் நரகத்திற்குத்தான் போகவேண்டும். அதுபோல எங்களுக்கு நரகமில்லை; ஏனெனில் இரண்டு தெய்வங்களால் சொல்லப்பட்டதாகச்சொல்லப்படும் சாஸ்திரங்களும், அவர்களைப்பற்றி எழுதப்பட்ட நூல்களும் நியாயத்திற்கும் மனித ஒழுங்கிற்கும் ஒத்துவராததும் ஒத்துக் கொள்ளப்படாததாகவு மிருப்பதால் நாங்கள் அதை நம்புவதில்லை. தில்லை என்று சொல்லப்படும் சிதம்பரத்துக்கு, இமயகிரியிலிருந்து கைபர் கணவாய் வழியாக மூவாயிரம் அந்தணர்களோடு சிவபெருமான் வந்து "அந்தணர்களுக்கு நான் அடிமை" என்று சீட்டெழுதிக்கொடுத்ததாகச் சொல்லப்படுவது உண்மையாகவிருக்குமா? அப்படித்தான் ஒரு தெய்வமிருக்குமா? அதுதான் தெய்வத்திற்குவேலையா? நம் நாட்டைவிட அகண்டாகாரமாக வியாபித்து சுகபோக ஆனந்தங்களில் அமர்ந்திருக்கும் மற்ற நாடுகளிலுள்ள எந்தத்தெய்வங்களாவது இவ்விதச் சீட்டு எழுதிக்கொடுத்ததா? இல்லையே! அதை நம்பினவர்களையும் நம்பும்படியாகச் செய்தவர்களையும் நமது நாட்டை ஏமாற்றி தங்கள் கூட்டத்தார்களைச் சிறப்பித்துக்கொள்ள வந்தவர்களென்றே நினைக்கிறோம்.

விஷ்ணுவும் அவர் பெண்ஜாதியும் படுத்திருக்கையில் சில பிராமணர்கள் அந்த வீட்டிற்குள் போனதாகவும்

வேலைக்காரர்கள் தடுத்ததாகவும் வேலைக்காரர்களை பிரா மணர்கள் சபித்ததாகவும், அந்த வேலைக்காரர்கள் பூலோ கத்தில் ராக்ஷதர்களாகப் பிறந்ததாகவும், அவர்கள் சாபத் தைத் தீர்க்க விஷ்ணு பூலோகத்தில் அவதாரம் செய்ததாக வும் சொல்லப்படும் தெய்வம் தெய்வமாக விருக்கமுடியுமா? பெண்ஜாதியுடன் தெய்வம் படுத்திருந்தது என்பதே அசம் பாவிதம். அப்படி இருந்தால் அங்கு வருகிறவர்களைக் காவற்காரர்கள் தடுப்பது முறையல்லவா? தடுத்த வேலைக் காரர்களை சாபம் கொடுக்கும் ரிஷியும் அந்த சாபத்தை நிறைவேற்றி வைக்கும் தெய்வமுமிருக்குமா? அப்படி இருப் பதாகச் சொல்லப்படும் ரிஷியும், தெய்வமும் நியாயத்திற்கும் முறைக்கும் ஒத்ததாகவில்லையே. பெரிய நந்தவனத் தோட் டங்களில் புதிதாகக் காதலிக்கும் ஆண்பெண்கள் உட்கார்ந்து பேசுமிடம் அமைத்து வைப்பது ஆங்கிலேயர் வழக்கம். காதலர்கள் அந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தால் அந்த வழியே மற்றவர்கள் செல்லமாட்டார்கள்; இதுசாதா ரணம். இந்த ஞானம் கூட வராத ரிஷியையும், தெய்வத்தை யும் கட்டி அழுது காம ஒழுக்கமும், சன்மார்க்கமும் கற்றுக் கொள்வது எப்படி? அவர்கள் கதைகள் தானே நமக்குச் சமயமாக விருக்கிறது. தேனொழுகிப் பாலொழுகித் திக்கி றதென்று பண்டிதர்களால் சொல்லப்படும் அந்தக் கவியின் பம் வாணுருக்க உடல் சுருக்கி உழைக்கிறவர்களின் பணத்தை யெல்லாம் பாடறியாமல் பல்லக்கேறி வந்து பார்ப்பார பந்துக் கூட்டம் பட்டினியில்லாமலிருக்கப் பக்குவமாய்ச் சொன்ன பாட்டென்பதைப் பண்டிதர்கள் உணரப்பயந்தார்கள்.

நீங்கள் எப்பொழுதும் முன்னோர் வழி, முன்னோர் அமைப்பு, முன்னோர் போட்ட வேலி என்றே பேசுகிறீர் கள். ஒரு தகப்பன் குடிசையில் வாழ்ந்து கூலி வேலை செய்து கூழைக்குடித்து மகனுக்குக் குஷித்துவைத்துப்போன திரவியத்தைக் கொண்டு மகன் மச்சு வீடும், சுதந்திர வேலை யும், சுகபோஜனமும், அழகிய பெண்ணும் விரும்புவது சகஜம் தானே. ஆனால் அளவிற்கு மிஞ்சாமல், முதலைப் பாழ் படுத்தாமல் வருவாயைக்கொண்டு அவரவர்கள் நிலைமை யைக் கருதி நடந்துகொள்ள வேண்டுமென்பதில் யாருக்கும் ஆக்ஷேபணையில்லை. உலகமுண்டான நாள் முதற்கொண்டு எந்தப் பெரியவர்கள் அமைப்பும் மாறிக்கொண்டு தான் வரு கின்றன. முன்னோர் உங்களுக்குப் போட்ட வேலியை நீங் கள் உதைத்துத் தள்ளிவிட்டுத் தாழ்ந்தவர்களுக்குப் போட்ட வேலியை மட்டும் காப்பாற்ற நினைப்பது நியாயமல்லவே.

நதிகளெல்லாம் முன்னையநதிகள் ஓடினவழியேஓடி சமுத்திரத்தில் சங்கமமாகாமல் இப்பொழுது புது வழியான வாய்க்கால் வழியே ஓடி வயலில் சங்கமமாகின்றன. வனங்களாகவும், சோலைகளாகவும், மிருகங்கள் வாசம் செய்யுமிடமாகவுமிருந்த மலைகளெல்லாம் இப்பொழுது பூந்தோட்டங்களால் அலங்கரிக்கப்பட்ட மாடமாளிகைகளாகி, டீ, காப்பித் தோட்டங்களாகி மனிதர் வசிக்க ஏற்றவிடங்களாகி விட்டன. பால், தயிர், நெய், தேன், பஞ்சாமிர்தம் என்று கடலைச்சொல்லி அது கண்ணிற் கெட்டாது, கைக்குக் கிட்டாது, கடவுள் ஒருவர் தான் அங்கு சயனித்துக் கொண்டிருப்பார் என்று சொன்ன சமுத்திரம், கண்ணிற் கெட்டி கைக்குக் கிட்டி கணக்கற்றவர்கள் பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கும் பாட்டை வழியாய் விட்டது. இப்பொழுது உலகத்தின் உருவமே மாறிவிட்டது. ஜனங்களுடைய நிறம், பாஷை, உண்ணுடைகளெல்லாம் மாறிவிட்டன. இப்படி மாறுந்தன்மையான உலகத்தில் சென்றுவிட்ட காலத்து முன்னோர்கள் வழிகளையும் சம்பிரதாயங்களையும்நிலைநாட்டப்பார்க்கிறீர்கள்.உங்களுடைய விவகாரங்களில் முன்னோர் வழி எப்படி சென்றுகொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் கவனிப்பதேயில்லை.கவனித்தீர்களானால் மற்றவர்களைத்துன்புறுத்தவும் தங்கள் லாபத்தைக் கருதியும் சொல்லப்படும் வார்த்தை என்பதையுணர்வீர்கள்.

ஒரு வருடத்தில் ஆகாசம், கிரகங்கள், சோதிட சாஸ்திரங்கள் முதலியவைகள் கூட மாறிவிட்டன. சுக்கிரனும் வியாழனும் சூரியனுக்குச் சமீபமாக இருக்கையில் அக்கினி நட்சத்திரம் உண்டாகுமாம். அந்தச் சமயம் சமுத்திரமும் சூரிய உஷ்ணத்தால் வற்றி விடுமென்று சொல்லுகிறார்கள். அந்த வருடத்திலோ அக்கினி நட்சத்திரத்தில் மழை பெய்து சூரிய வெப்பத்தைத் தணித்து பூமியைக் குளிரச்செய்து, ஆறெல்லாம் பெருகி வந்து சமுத்திரத்தை வற்றாமல் செய்து விட்டன. உங்களால் சாக்ஷாத் என்று சொல்லப்படும் ராமரின் தந்தையான சூரியனும் அசுர குருவான சுக்கிரனும் தேவ குருவான வியாழனும் முன்னோர் வழியில் நடக்க முடியவில்லை என்றால் மனிதனால் எப்படி முடியும்? மனிதனை மற்றப்பிராணிகளினின்று பிரித்துக்காட்டுவது எது? சந்தர்ப்பத்தை ஓட்டிய நிலைக்கு அறிவை உபயோகப்படுத்திக் கொள்ளுவதுதானே! சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி மிக நேர்த்தியாக முன்னோர்கள் ஏற்பாடுகளை அமைத்தார்கள் என்றே வைத்துக்கொள்ளுவோம். அமைத்த பிறகும் சந்தர்ப்

மதத்தால் விளைந்ததென்ன?

மதத்திற்கு மக்களா? மக்களுக்கு மதமா?

(கோ. சௌரிராஜன்)

மக்களின் இவ்வுலக வாழ்க்கை நலத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் இயற்றப்பட்ட சட்டதிட்டங்கள், கொள்கைகள்தான் இப்பொழுது மதம் என்று சொல்லப்படுகிறது. இக்கோக்கத்தோடு தோற்றுவிக்கப்பட்ட மதமானது மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டது, காலதேசவர்த்தமானங்களையுத்தேசித்துமனிதர்களாலேயே மாற்றம் செய்வதற்கும் திருத்துவதற்கும் உரியது என்ற நம்பிக்கை தற்பொழுது பெரும்பாலோர்க்கு இல்லாது போனது பெரிதும் விசனிக்கத்தக்கதே. இதற்குக்காரணம் "மதம் கடவுளால் உண்டாக்கப்பட்டது" "அறிவிற்கு மேம்பட்டது" என்ற எத்தகைய சான்றுமில்

பங்கள் மாறிக்கொண்டே போவதால் சமூகம் மறுபடி புதிய அமைப்பைப்பெற்று வசிக்க வேண்டாமா? அப்படி அல்லாவிட்டால் துன்பமும் தொல்லையும் தொலையாதே. முன்னே செல்லவேண்டிய மனிதன் எப்போதும் பின்னால் பார்த்த படியே சென்றால் துக்கத்திற்கே ஆளாவான். நீங்கள் மட்டும் மேனாடு போங்கள்; படியுங்கள்; உத்தியோகம்பாருங்கள்; எனாதகிடாரியின் இடது தொடையை உருசியாய்உண்ணுங்கள். நீலகிரிக்குப் போங்கள்; மாடன் ஹிந்து ஓட்டலுக்கும் கவர்ன்மெண்டு மாளிகைக்கு உத்தியோகத்திற்கும் அலையுங்கள்;குளிருக்குப்பகலில்சிகரெட்டும்ராத்திரியில்பிராந்தியும் குடியுங்கள். இதெல்லாம் உங்கள் முன்னோர்கள் வேலிக்குள்ளிருந்து தானோ வந்தது? மற்றவர்களைப் பள்ளியில் சேர்க்கப்படாது; நல்ல தண்ணீர் கொடுக்கப்படாது; வீதியில் போகவிடப்படாது; சோற்றுக்கடையில் தடுக்க வேண்டும்; சேவக வேலை கூடக்கொடுக்கப்படாது. இது மட்டும் உங்கள் முன்னோர் வேலிக்குள்ளிருந்து கடக்கவேண்டும். இதுதானா உங்கள் நியாயம்?

லாத நம்பிக்கை மக்கள் மனதில் புகுத்தப்பட்டு விட்டதே யாகும். உண்மையிலேயே மதங்கள் கடவுள் சிருஷ்டியானால் ஒரு மதத்தின் கொள்கைகளுக்கும் மற்றொரு மதக்கொள்கை களுக்கும் மாறுபட்ட அபிப்பிராய பேதங்களும், சண்டை களும் ஏற்பட வேண்டிய அவசியமில்லை. மதம் கடவுளால் ஆக்கப்பட்டதென்றால் மக்கள் அநாகரீகமாக, காட்டுமிராண் டிகளாக வாழ்ந்து வந்த காலத்திலும் மதம் இருந்திருக்க வேண்டும். அப்படியொன்றும் இருந்ததாக எந்த சரித் திரத்திலும் காணப்படவில்லை. எந்த ஆராய்ச்சியாளரும் கூறவுமில்லை. ஆகவே, மதம் கடவுள் சிருஷ்டியல்ல என் பது திண்ணம்.

மதம், அக்காலத்திருந்த மக்களின் வாழ்க்கை நிலை, அறிவு, சீதோஷ்ண நிலை, காலதேச நிலைமை முதலியவை களுக்கு ஏற்ற வழியிலேயே ஸ்தாபிக்கப்பட்டிருக்கவேண் டும். இன்னும் மதத்தின் சட்ட திட்டங்கள் செய்கைகளுக்கு ஒத்ததாய் இல்லாவிட்டாலும், உண்மையையும் நியாயத்தை யும் நிலை நிறுத்துவதற்காகச் சொல்லி பொய்யும், நியாய மற்றவைகளையும் ஒப்புக்கொள்ளும் மனிதர்களாலேயே இப்பொழுதிருக்கும் மதங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதவேண்டியிருக்கிறது. இஃதொருபுறமிருக்க, மதக் கொள்கைகள், பழக்கங்கள் எல்லாம் எங்கும் ஒரேவிதமாக ஏற்பட்டிருக்குமாயின் சீதோஷ்ண நிலை பேதத்தால் உஷ் ணப்பிரதேசமாகிய இந்தியாவில் துறவிகள் என்போர் கோவ ணத்தோடு திரியவேண்டும் என்றிருக்கும் மதப்பழக்கத்தை, மிக்க குளிருள்ள பிரிட்டனில் உள்ளவர்கள் கையாளுவார் களானால் அவர்கள் உயிர் உடலில் நிற்குமா? இதனாலேயும் மதம், கடவுள் சிருஷ்டியல்லவென்பது நன்கு விளங்குகின்ற தல்லவா?

ஆகவே அக்காலத்திலுள்ள ஒருவகுப்பாரால்—சூழ்ச்சிக் காரர்களால் தங்களுடைய சுலபலத்திற்காகவும், முன்னேற் றத்திற்காகவும் ஏற்படுத்தப்பட்ட வாழ்க்கைக்கு ஒவ்வாத ஒரு தலைப்பட்சமான கொள்கைகளே இப்பொழுது மதச் சட்டங்களாக நம்முன் காண்கின்றன. தற்பொழுது உலகி லுள்ள எந்த மதத்தை எடுத்துக்கொண்டாலும் குருட்டு நம்பிக்கை என்ற ஒரே அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட் டது என்பதும், பகுத்தறிவைக் கொண்டு அவைகளை அல சிப்பார்த்தால் அவைகள் நிலையற்றது என்பதும் நன்கு

புலனாகும். எனெனில் உலகில் இயற்கையாகத்தோன்றும்— எற்படும் காட்சி, சக்தி ஓட்டம் ஆகிய எல்லாம் மக்களின் நன்மைக்கும், சுகத்திற்குமாகும் என்பது ஓர் ஆராய்ந்தறிந்த உண்மை. அதே போல மனிதர்களால் தோற்றுவிக்கப் பட்ட எதுவும், மக்களின் நன்மையைக் கருதியே இருக்க வேண்டும். ஒரு காலத்தில் நன்மையாய்த் தோற்றுவது பிறி தொரு காலத்தில் தீமையாகவும், ஒரு காலத்தில் தீமையாய் உள்ளவை மற்றொரு காலத்தில் நன்மையாகவும் மாற்றமடை வது உலகியற்கையும் அநுபவமுமாகும். ஆகவே எந்தெந்தக் காலங்கட்கு எவைனவை நன்மையும் இன்பமும் அளிக்கின்றனவோ அவைகளை ஏற்றுக்கொண்டு புறம்பாயுள்ளவைகளை நீக்குதலே கற்றோர்க்கழகும் கடமையுமாகும். மிகவும் பெரிதாகவுள்ள இமயமலை மக்கட்கு தீமை பயக்குமாயின் அதே நிமிடத்தில் அதை சல்லிசல்லியாக உடைத்தெறிந்து நன்மை பயக்கத்தக்க எந்தப் பாலைவனமாகயிருந்தாலும் அதை அப்படியே வரவேற்று ஒப்புக்கொள்ளுதலே உண்மை நிலையும் முன்னேற்றமடையும் வழியுமாகும். இதே போல மக்களின் இவ்வுலக வாழ்க்கைக்கும், அநுபவத்திற்கும், நன் மைக்கும், உடல்நலத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் ஒத்தவாறு தோற்றுவிக்கப்பட்டதென்று கொள்ளப்படும் மதச்சட்டங்கள் மக்கட்குப் பயன் தராத—ஒவ்வாத காலங் களில் அவைகளை மாற்றவோ, புதுப்பிக்கவோ மனிதருக் குரிமையுண்டு. அதைவிட்டு அம்மதம் எக்கொள்கையோ டிருந்தாலும் அதைப் பின்பற்றத்தான் வேண்டும் என்றிருக் தால் அம்மதம் மக்களுக்காக ஏற்பட்டதாக ஆகுமா? அம் மதம் மக்களுக்குத்தான் நன்மைபயக்குமா?

ஒரு மதத்தினுடையவோ அல்லது மதத்தலைவனுடை யவோ கொள்கைகளும் ஒழுக்கங்களும் சீரியதாக இருப்ப தால் மாத்திரம் அந்த மதத்தை உயர்வானது என்று கூறி விட முடியாது. ஆனால் அம்மதத்தைப் பின்பற்றுபவர்கள் நடவடிக்கைகளையும் சௌகரியத்தையும், முன்னேற்றத்தை யும் பொருத்திருக்கின்றது அம்மதத்தின் மேன்மை. எந்த மதமாயினும்சரி, அதில் எந்த விஷயம் குறிப்பிட்டிருக் தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி, அது மக்களின் வாழ்க் கைக்கு இன்றியமையாததா? அன்றா? அதனால் மக்கள் துன்ப மின்றி இன்பம் பெறலாமா என்பதையே குறியாகக் கொள்ளவேண்டும். அவ்வாறு மக்களின் சுகத்தையும், முன்

னேற்றத்தையும், பொருட் படுத்தாத ஓரு மதத்தை மக்கள் ஏன் பொருட்படுத்தி அதற்கு அடிமைப்பட்டு அறிவிழக்க வேண்டுமென்பதுதான் நமது கேள்வி. மத அடிமைப் பாசத் தால் கட்டுண்ட எந்த நாட்டு மக்களாவது சுதந்தரத்துட னும், வீரத்துடனும், கல்விபெற்றும், செல்வம் பெருத்தும், ஆராய்ச்சித்திறன் எய்தியும் வாழ்ந்ததாகவாவது அல்லது மக்களுக்கான மதத்தையுடைய நாட்டுடன் போட்டிபோட்டு வெற்றிபெற்று முன்னேற்றமடைந்ததாகவாவது நாம் இது வரை கேள்விப்பட்டதுமில்லை; படித்ததுமில்லை.

இஃதொருபுறமிருக்க, நம் நாடாகிய இந்தியாவில் தோன்றியதாகக் கூறப்படும் இந்து மதத்தைப்பற்றி பேசுவ தென்றாலோ நாவெழுன் என்கிறது; எழுதுவதென்றாலோ எழுதுகோல் நகரேன் என்கிறது, ஏன்? இக்கொடிய இந்து மதம் மக்களை அறியாமைப்பாசத்தால் கட்டி அடி மைப்படுகுழியில் ஆழ்த்திவைத்திருக்கின்றது. சுருங்கக்கூறின் இம்மதத்தின்படி மக்கள் ஓழுகவேண்டுமேயல்லது மக்களின் சௌகரியத்தையோ முன்னேற்றத்தையோ அறிவையோ இந்து மதம் கருதக்கூடியதன்று. இக்கொடிய மதம் மனித சமூகத்தின் அறிவை அறவே பாழ்படுத்தி அழித்துவிட்டது என்று கூறுதல் மிகையாகாது. பல்லாண்டுகளாக இம் பாழும் மதத்திற்கு மக்கள் அடிமைகளாக, அவர்கள் முன் னேற்றம் பெரிதும் தடைப்பட்டுப்போயிற்று என்பதை யாரே னும் மறுக்க முடியுமா? நம் நாட்டில் மக்கள் எல்லோரும் சமம் என்ற மனப்பான்மையைப் போக்கி, சமயப் பிரிவும், ஜாதி வித்தியாசமும், பிறப்பில் உயர்வு தாழ்வும், தீண்டா மையும், பிறவும் தோன்றியமைக்கு இந்த இந்துமதமே கார ணம் என்பது நன்கு விளங்கவில்லையா? இதனால் இம்மதம் மக்களை ஒற்றுமையடையச்செய்வதை விடுத்து அவர்களைப் பிரித்து வைத்துக்கொண்டிருக்கின்றது. எழுகோடி ஆதி திராவிட மக்களுக்கு கல்வியளிக்க மறுத்து அவர்களைத் தெருவில் நடக்கக்கூடாது, தீண்டக் கூடாது, பார்க்கக் கூடாது என்று நாயினும் கடையோராய்—மிருகங்களுக் குரிய உரிமையும்இல்லாதவராய் செய்திருக்கின்றது இம்மதம். இஃதை எப்படி மக்களுக்காகத் தோன்றிய மதம் எனக்

கூறுவது? இன்னும் இம்மதம் ஆணுக்கொரு நீதியெனவும் பெண்ணுக்கொரு நீதியெனவும் கற்பித்து பெண்களை சாஸ்வத அடிமைகளாக்கி அவர்கள் கல்வி கற்கவும் மறுக்கின்றது. இம்மதத்தில் கல்விக்குத் தலைவி சரஸ்வதி என்று பெண் தெய்வமாகக் கொண்டாடி வந்தும்—பெண்களுக்குக் கல்வி யில்லை என்ற கொள்கையையுடைய இம்மதம் நன்னோக்கமு டையதாகுமா? ஆகவே, இம்மதம் எப்படி மக்களுக்கேற்ற தாகும்?

இன்னும் இம்மதம் உலகத்திலுள்ள பலவிதமான கொடிய நோய்களுக்கும் அகாலமரணத்திற்கும் ஆஸ்பதமான விபசாரத்தை வளர்க்கின்றது. எங்ஙனமெனில் விபசாரத் திற்கென ஒரு வகுப்புப் பெண்களை ஒதுக்கி அவர்களுக்குக் கடவுள் பேரால் பொட்டுக்கட்டி தேவதாசிகளாக்கி அவர் களை மானமற்று ஜீவிக்கச் செய்வது இத்தீய இந்து மத மல்லவா? இதன்றி ஒரு ஆடவன் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம்; ஆனால் ஒரு ஆடவனை இழந்த பெண், அதாவது ஒரு விதவை மறுபடி யும் மணம் செய்து கொள்ளக்கூடாது என்பது இம்மதச் சட்டமாம்! இதை எப்படி ஏற்பது? இதனால் இதை மக்களுக்கொத்த மதம் எனக்கூற முடியுமா? இன்னும் நம் நாட்டில் மதக்கொள்கைகளின் காரணத்தால் நடைபெறும் இளதார மணங்களுக்கும் அவைகளால் விளையும் தீங்குகட் கும் அளவுண்டோ? சமீபத்தில் ஜனநன்மைக்காகச் சட்ட மாக்கப்பட்ட சாரதா சட்டம் அமுலுக்கு வரவியலாது அழி யும் தருவாயிலிருப்பதற்கு இவ்விந்து மதமன்றோ காரணம். இன்னும் இம்மதம் மக்களிடையே அகங்காரத்தையும், அச் சத்தையும் உண்டாக்கி அவர்களைத் தீயகாரியத்திற் பிரவே சிக்கச் செய்கிறது. இவைகள் போதாதென, கடவுளுக்கும் மக்குமிடையே தரகர்களை உற்பத்தி செய்து அதன்மூலம் மக்களிடம் மூடநம்பிக்கை, மூடப்பழக்க வழக்கங்கள், அர்த் தமற்ற செய்கைகள் ஆகியவைகளை வளரச் செய்கின்றதே யன்றி வேறு ஏதேனும் நன்மையுண்டா? சுருக்கமாகக்கூறின் மக்களின் நலத்திற்காகத் தோற்றுவிக்கப்பட்டதெனச் சொல்

லப்படும் மதம் மக்கள் வாழ்க்கையைப் பாதிப்பதோடு சுதந்திரத்திற்கும் தன் மதிப்பிற்கும் தடையாயிருப்பது கண்கூடு. இத்தகைய கொடும் கொள்கைகளையுடைய மதத்தை என் செய்வது? சீர்திருத்துவதா, அல்லது அறவே விட்டுவிடுவதா என்பது ஒரு முக்கியமான பிரச்சினை. எந்த மதச்சட்டங்களாயினும் கொள்கைகளாயினும் அவைகளை அப்படியே ஒப்புக்கொள்வதென்பதும் தள்ளிவிட வேண்டுமென்பதும் அத்துணைச் சிறந்ததல்லவென்பதே எமது தாழ்ந்த அபிப்பிராயம். எந்த மதம் மக்களின் உரிமையைப் பாதித்து அவர்களை முன்னேற விடாமல் தடுத்து, அவர்களின் அறிவைப்பாழாக்கி, அடிமைத்தனத்தில் ஆழ்த்தி வைத்திருக்கின்றதோ அம்மதம் இருப்பதைக்காட்டிலும் இறந்தொழிவது மேலாகும். சீர்திருத்துவதென்றால் இம் மதத்தைப்பொருத்த மட்டில் புத்தர், ராமானுஜர், சங்கரர், திருவள்ளுவர் முதலியோர்களின் சீர்திருத்தமாகிவிட்டது என்பதைக் கூறத்தேவையில்லை.

ஆகவே அன்பர்களே! மக்கள் உரிமையைப்பறிக்கும் மதத்தை—மக்களை அடிமைப்படுத்தும் மதத்தை—மக்களின் பகுத்தறிவைப்பங்கப்படுத்தும் மதத்தை ஒழிக்க முன் வாருங்கள். இப்பொழுதிருக்கும் மதங்களை ஒழித்துப் புதியதாக மக்களின் வாழ்க்கை கலங்கருதி சட்டங்கள்—கொள்கைகள் ஏற்படுத்துவதாயின் அவைகள் பஞ்ச இந்திரியங்களின் (ஐம்புலன்களின்) இயற்கை உணர்ச்சிக்கும், ஆசையின் சுபாவத்திற்கும், மனதிற்கும், அறிவிற்கும், அநுபவத்திற்கும் ஏற்றவைகளாயிருக்கவேண்டும் என்பதைத்தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது நிற்க, நம் அறிவு என்ன சொல்லுகின்றது, இயற்கைக் கட்டளை இயற்கையின் போக்கு என்ன, நமது வாழ்க்கையின் லக்ஷியம் என்ன என்பதைக் கவனித்து நடந்தோமானால் அதிவிரைவில் திருப்தியும் சாந்தியும் உண்டாக்கக்கூடிய ஓர் நல்வாழ்க்கை வாழ்ந்து இன்புறுவோமென்பது திண்ணம், முக்காலும் திண்ணம்.

குழந்தைகளும் பயிற்சியும்.

(ஜோஸப் மெக்காபி.)

நாம் நினைத்த விதமாக மதத்திற்கு பெண்கள் தான் அதிக கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதற்கு தகுந்த ஆதாரம் இல்லையானாலும் அல்லது அவ்வாதாரத்தை நம்மால் கண்டுபிடிக்கவில்லையானாலும், நமது ஆராய்ச்சியை வேறு வழியில் திருப்ப வேண்டும். மத சம்பிரதாயங்களில் பெண்கள் மந்த புத்தியோடு சம்மந்தம் வைத்திருக்கிறார்கள் என்பதை ஆதியிலிருந்து மறுத்து வந்திருக்கிறேன். நாம் எதற்காக ஒன்றை நம்புகிறோம் என்று அவர்கள் ஒரு காலும் சிந்தனை செய்வதில்லை. ஆகவே நாம் ஒவ்வொருவரும் நமது நம்பிக்கை சரியான ஆதாரத்தின் மீது தான் எழுந்திருக்கிறதா என்பதைக் கண்டிப்பாக அறிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு தனது தப்பிதங்களையும் அநீதிகளையும் தனது வாழ்க்கையில் வெறுத்துத் தள்ளுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு மனித சமூகம் உயர்வடையும். இதில் பெண்கள் அதிக பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். மனித வர்க்கத்தில் பெண்கள் சமூகந்தான் பிடிவாத குணத்தையும், மாறுபடாத எண்ணத்தையும் உடையது என்று பெரும் பாலும் சரித்திரமும் மனோதத்துவ சாஸ்திரமும் கூறுவதை அவர்கள் உணர வேண்டும். இதிலிருந்தாவது அவர்கள் தங்கள் தப்பிதங்களை விலக்கவும், நம்பிக்கையை சிந்தித்துப் பார்க்கவும் கடமைப்பட்டிருக்கிறார்களல்லவா? அப்பொழுது தான் ஆண்கள் தங்களை எவ்வளவு தூரம் கௌரவிக்க வேண்டுமென விரும்புகிறார்களோ அந்த அளவு எதிர்பார்க்க முடியும். அதனால் அவர்களை, எதையும் விசாரிக்கவும் அதைக்குறித்து தர்க்கம் செய்யவும் வேண்டுகிறேன். மதம் உண்மை என அறியாதவரை மதபோதனையால் ஒருவித புனிதத்தன்மை ஏற்பட மாட்டாது என்பதை மறந்து விடாதீர்கள். இது சாதாரணமானதும் தெளிவானதுமான விஷயந்தான். ஆனால் அனேகர் இவ்வாறு மதத்தைப்பற்றி ஆராய்வதோ அல்லது தர்க்கம் செய்வதோ அதன் பரிசுத்தத் தன்மையை அழித்து விடும் என்று மதத்துக்கு வக்காலத்துப் பெற்றுக்கொண்டு மனித சமூகத்தை மூட்டாள்களாகவும் பரிதாபப்படக்கூடியவர்களாகவும் செய்து வருகிறார்கள்.

பெண்களுக்கும் சர்ச்சுக்குமுள்ள சம்பந்தத்தைக் குறித்த ஆதாரங்களைக் குறித்து விவாதித்து ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டுமானால் முதலில் பெண்களுக்கும் சர்ச்சுக்குமுள்ள சம்பந்தத்துக்கு ஒரு மூலகாரணம் வேறு இருக்கிறது என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அனேக பெண்கள், தங்கள் குழந்தைகளை, ஒரு கிறிஸ்துவனுடைய உதவியாலோ அல்லது ஒரு ஆஸ்திகனுடைய உதவியாலோ அல்லாது மற்றவர் களுடைய உதவியைக்கொண்டு பயிற்றுவிக்க முடியாது எனப் பெரும்பாலும் நினைத்து வருகிறார்கள். இந்தக் காரணத் தால், அனேக ஆண்களும், மத நம்பிக்கையில்லாத ஆண்களும் கூட பெண்களை விட்டு இத்தகைய எண்ணம் மறைந்துபோகச் செய்யத்துணிவுகொள்ளாமலிருக்கிறார்கள். குழந்தைகளைபயிற் றுவித்தல் என்பது மிகவும் கஷ்டமும் நுண்மையுமான காரிய மாகும். இதைச் செய்ய ஒருவனுக்கு கடவுள் நம்பிக்கையும் மதநம்பிக்கையும் வேண்டுமென்பதற்கு இடமேயில்லை. உண் மையில் அதனால் யாதொரு பயனும் அடைய முடியாது. குழந்தைகளை நல்வழியில் பழக்குவதற்கு மதக் கோட்பாட் டைத் தவிரவேறு ஒன்றுமில்லை எனத்தாய்மார்கள் நினைத் திருக்கும்வரை, அவர்கள் மத ஆராய்ச்சியில் இறங்க அஞ்சு வார்கள் என்பதில் ஆச்சரியமில்லை. இப்பிரச்சினையைப்பற்றி பெண்கள் அதிகமாக யோசிக்கிறதில்லை, வாசிக்கிறதில்லை, விசாரிக்கிறதில்லை என்பதையும் மறுமுறையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குழந்தைகளுக்கு மதக் கல்வி கற்பிக்கப்படா ததால், அவர்கள் தூர்ப்பழக்கம் கற்று வீணாகிவிடுவார்கள் என்பதில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்று ஆராய்வோம்.

எமர்சன் சொன்ன அதாவது "கோழைத்தனத்தால் எழுந்த சித்தாந்தம்" என்பதை ஒரு கொள்கையாக்க வேண்டும் என்று முயற்சிப்பதை நாம் முதலில் எதிர்க்க வேண்டும். ஒரு தாய் தன் குழந்தையைப் பயிற்றுவிப்பதில் மதத்தை கைவிட அஞ்சினால் அந்த ஆசையை நான் மதிக் கிறேன்; ஆனால், ஒரு ஆசிரியர் (நூலாசிரியர்) இச் சிந்தாந்தத்தைத் தனக்கனுகூலமாக வைத்துகொண்டு கிறிஸ்துவ மதக்கொள்கை யே அவனது வாழ்க்கையில் பிரதானமாக விளங்கவேண்டும் என்று வற்புறுத்துவது மிகக் குறும்புத்தனமான செய்கை என்றே சொல்லவேண்டும். அழியாதது என்ற நம்பிக்கையை ஏன் எதிர்க்கிறீர்கள் என்று ஜியார்ஜ் எலியாட்டை ஒரு சமயம் கேட்டபோது "எனெனில் அது பொய்" என அவள்பதில் கூறினாள். அவளைச் சார்ந்த ஒவ்வொரு பகுத்தறிவு வாதியும் சத்தியத்தின் சக்தியையும் பெருமையையும் சிறப்பாக மதித்து

வருகிறான். மதாச்சாரியார்களுடைய நிந்தனைகளையும், பகுத்தறிவாளர்களுடைய போதனையால் மக்கள் உலகாயுதமான காரியங்களில் அதிக கவனம் செலுத்திவருகிறார்கள் என்ற பழிச் சொல்லையும் நிந்தனைச் சொல்லையும் பொருட்படுத்தாமல் இவர்கள், மக்கள் சத்தியத்தையும் யதார்த்தத்தையும் வாழ்க்கையின் லட்சியமாக கொள்ளவேண்டுமென பறை சாற்றிவருகிறார்கள். டாக்டர் மிவார்ட் கத்தோலிக்கனாக வாழ்ந்த காலத்தில் தான் ஒரு புத்தகம் எழுதும்போது ஒரு பக்கத்தில் வழக்கம்போல் சம்சயவாதியின் எண்ணத்தால் வரும் பலனைக்கண்டித்தும், மறுபக்கத்தில் ஜூ. எஸ். மில்லின் உயர்ந்த மாயாவாதக் கற்பனைகளைத் தாக்கியும் எழுதியிருந்தது எனது ஞாபகத்துக்கு வருகிறது. இன்றும் அதேமாதிரி இருக்கிறது. அதாவது, பகுத்தறிவாதிகள் சத்தியத்தையும், உண்மையான — கபடற்ற தன்மையையும் வற்புறுத்துகிறார்கள். அவர்கள் எதிரிகளான லோகாயுதமான சித்தாந்தத்தின் பலன்களைக் குறித்து எடுத்துக் கூறிவருகிறார்கள். மதத் தலைவர்கள் --குருக்கள் பகுத்தறிவாதிகள் மக்களை அனியாயமான, பொய்யான வழியில் செலுத்துகிறார்கள் என்று குற்றஞ் சாட்டிவருகிறார்கள். இதைப் பார்க்கும்போது நெமசிஸ் என்ற தேவதையின் செய்கையை ஒத்திருக்கிறது.

எனெனில் நீதியான ஒழுங்கான கோட்பாடு எவ்வாறு இயங்க வேண்டியிருக்கிறது? எவ்வாறு இயங்கிக்கொண்டிருக்கிறது? அது பொய்யானாலும் சரி, மெய்யானாலும் சரி, கிறிஸ்துவ எற்பாட்டை நீதியான ஒழுங்கு என நம்ப வேண்டுமென்று நமக்கு போசனை கூறப்படுகிறது. இதில் சில கோட்பாடுகள் நியாயமாகத் தோன்றலாம். ஆனால் வாழ்க்கையின் நடைமுறையில் அதன் உண்மை வெளிப்பட்டு விடும். உண்மையான நம்பிக்கையின் பலனையும் அதன் சக்தியையும் குறித்து மிக அழுத்தமாகப் போதகர்கள் பீடத்தின் மீது எறி பிரசங்கங்கள் பொழிவார்கள்; இராப் போசனங்கள் விமரிசையாக நடத்தப்படும். கடவுளின் லட்சணத்தைக் குறித்தும், மோட்சம், நரகம், உயிர்த்தெழுதல், அவதாரம் முதலியவைகளைக் குறித்தும் போதகர்கள் அதிக உருக்கத்தோடு பேசுவார்கள்; இவ்வளவும் பேசுகிற அவர்களுக்கே அதில் உண்மையான நம்பிக்கை கிடையாது என்பதையும் நாம்நன்றாக அறிந்துகொள்ளலாம். நாமே பிள்ளைகளை ஜெபம் செய்யத் தூண்டுகிறோம், கடவுள் ஒருவர் இருக்கிறார், மோக்ஷம், நரகமிருக்கிறது என்று கற்பிக்கிறோம். இப்படிச் செய்வதால் ஆசிரி

யன் தனது கௌரவம் குறைபடாமல் பார்த்துக்கொண்டதாகவும் பெற்றோர்கள் தாங்கள் தங்கள் கடமைகளைச் செய்துவிட்டதாகவும், குழந்தைகளின் ஒழுக்கத்திற்கு அஸ்திவாரம் போட்டு விட்டதாகவும் நினைத்து வருகிறார்கள். ஒழுக்க பயிற்சியில் இதைவிட மோசமான முறை வேறு எது இருக்க முடியும்? இந்தக் கடைசி முறையில் தான் மதம் பரிகசிக்கக் கூடிய தன்மையை யடைந்திருக்கிறது. இது கில்பர்ஷியனு டைய நாடகத்தின் விடுகதையையும் வென்று விடும்போல் தெரிகிறது. இவ்வாறு சொல்லப்படுவது மதத்தைக் குறை கூறு பவர்களின் வாயை அடக்குவதற்காகவும் சர்ச்சின் பழைய செல்வாக்கை நிலை நிறுத்துவதற்காகவும் செய்யப்படும் சூழ்ச்சி என்றே சொல்ல வேண்டும். நாம் சொல்வதில் நம்பிக்கையில் லாதவர்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறோம். அதா வது அவர்கள் இதன் உண்மையை அறிய மதபோதகர்களை சிறிது காலம் வாய்மூடி இருக்கச் செய்து அவர்கள் சந்ததியார் காலத்திலும் அவ்வாறே இருக்கச் செய்ய வேண்டும். அப் பொழுது தான் இதன் உண்மை தெரியவரும். மெய்யாகவே இந்த இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானமான சுயிசேஷங் களைக் கேள்விப்பட்டுக் கொண்டே வருகிறது.

இத்துன்பகரமான சம்பவங்களைப் பார்த்துத் தான்பகுத் தறிவு வாதிகள் போலி உண்மை வாதிகளை எதிர்க்கிறார்கள். அனேகமாக உண்மைக்கும் உண்மையான தன்மைக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது என்பதை மறந்து விடுகிறார்கள். சில சமயங்களில் நாம் நமது உண்மைக் குணத்தைக் குறித்து பெருமையாக நினைத்துக்கொள்ளுவதுமுண்டு. ஆனால் அதே சமயத்தில் பொய்யான—அபத்தமான காரியங்களை ஆதரித் தும் உண்மையை அறிய எதையும் விசாரிக்க இடம் கொடுக்கா மலும் செய்து வருகிறோம். அல்லது நமது வாழ்க்கையில் சில காரியங்களில் நாணயக் குறைவாக நடந்துகொண்டு மற்ற காரி யங்களில் நாணயமாக, மரியாதையாக நடந்து கொண்டால் போதும் என நினைக்கிறோம். இவ்வாறு நடந்து கொள்வது முடியாத காரியம். எனெனில் நமது வாழ்க்கையின் ஒரு பகுதியில் நாணயக் குறைவாகவும் வஞ்சகத்தனமாகவும் நடந்துகொண்டு மற்றப் பகுதிகளில் போக்கியமாகவும் நடந்து கொள்ளலாம் என்று நினைப்பது மூட்டாள் தனமாகும். ஒரு காரியத்தில் ஒழுக்கக்குறைவாக நடந்துகொண் டவன் மற்ற காரியங்களில் எப்படி ஒழுக்கங்கெடாமலிருக்க முடியும்? ஒழுக்கந் தவறியவன் எல்லாத் துறையிலும் தவறு

வான். சத்தியமும் அசத்தியமும் ஒன்றாக இருக்கமுடியாது. பொய் ஒரு நாளும் மெய்யை உண்டுபண்ணமுடியாது. கொருஞ்சி முள்செடியிலிருந்து திராக்ஷைப்பழம்பெற மனிதனால்முடியுமா? அதுபோலவே அசத்தியப் பழக்கத்திலுள்ளவனிடமிருந்து உண்மையையும், நேர்மையையும் எதிர்பார்க்க முடியாது.

இப்பொழுது காணக்கூடிய தத்துவ ஞானங்கள் ஆண்களால் கற்பனை செய்யப்பட்டவைகளே தவிர பெண்களால் அல்ல. என் இதைப்பற்றி அதிகமாகச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் இதில் தான் பெண்களை இரையாக்கியிருக்கிறார்கள். இதனால், தாய்மார்கள் போலி உண்மையையும், யோக்கியதையையும் பெரிதாக நினைத்துக்கொண்டு உண்மைக் கௌரவத்திற்கு மரியாதை செலுத்த வேண்டுமென்று கருதி தங்கள் பிள்ளைகளை நல்வழியில்பழக்கவேண்டிய முக்கியதத்துவத்தை மறந்துவிடுகிறார்கள். மதசரித்திரத்தைப் புரட்டிப்பார்த்தால் பெண்கள் சமூகத்துக்கு இத்தகைய ஆவல் தோன்றுவது ஒரு புதிய விஷயம் அல்ல என்று தெரியவரும். அப்படியிருந்தும், இதற்குமுன் தோன்றிய மாறுதல்களால் அனுபவ அறிவு இதுசம்பந்தமாய் உண்டாயிருக்க வேண்டும். நம்மை ஆண்டுவரும் சமயகோட்பாட்டின் வைதீக முறைகளை—ஒழுங்குகளை சில சீர்திருத்த வாதிகள் தாக்கிய காலையில் பெரிய கூப்பாடு கிளம்பிற்று. இவர்கள் ஐரோப்பியருடைய ஒழுக்கத்தையே கெடுத்து நாசம்பண்ணுகிறவர்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டனர். இவ்வைதீகக் கொள்கை மனித சமூகத்தின் இரத்தத்திலே ஊறிவிட்டபடியால் இவைகளை மனிதனை விட்டுபிரிப்பதால் பெரிய ஒழுக்க பங்கம் ஏற்படும் என்று சொல்லப்பட்டது. குழந்தைகள் செய்த குற்றங்களை வெளியிட்டு மன்னிப்புக் கோருவதையும் இராப்போசனம் பெறுவதையும் தடுத்து விட்டால் எவ்வாறு குழந்தைகளை நல்வழியில் நடத்துவது? என்று அனேக தாய்மார்கள் கேட்பது உலகம். ஆனால் இன்று சீர்திருத்தவாதிகள் ஐரோப்பாவைவிட்டு அனேகமாகப் பதுதிக்குமேல் வைதீக எல்லைத்தைக் குறைத்து விட்டார்கள். இதனால் ஒன்றும் ஒழுக்கங்கெட்டு விடவில்லை. மக்களின் ஒழுக்கத்திற்கு பைபிள் மிக முக்கியமான ஆதாரம் எனக் கருதப்பட்டு வந்தது. பைபிளில் சொல்லப்பட்டிருந்த ஒழுக்கக் கற்பனைகளை—சித்தாந்தங்களைப் பற்றிய நம்பிக்கையை அழிக்க வேண்டுமென டியஸ்ட்சும் யுனிட்டேரியன்சும் புறப்பட்டபோதும் இவ்வாறுதான் கூக்குரல் எற்பட்டது. ஆனால், நாளாவட்டத்தில், பைபிள் தான் நன்னடக்கைக்கு ஆதாரமானது என்றநம்பிக்கை

பெரும்பான்மையான மக்களைவிட்டு மறைந்து விட்டது. இதனால் மக்களின் ஒழுங்கு ஒன்றும் சீரழிந்து விடவில்லை. இதே மாதிரிதான் மோகூஷ நரகத்தைப்பற்றிய எண்ணத்தை தாக்கியபோது இதைவிட பயங்கரமான எதிர்ப்பு தோன்றியது. மக்களை விட்டு இந்த நம்பிக்கை ஒழிக்கப்பட்டு விட்டால் உண்மையிலே மனித சமூகத்தில் ஒழுக்கம் எள்ளளவாவது காணமுடியாது என ஆரவாரித்தார்கள். அவ்வாறு இருந்தும், இங்கிலாந்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் இந்த நம்பிக்கையையும் உதறித்தள்ளி விட்டார்கள். இதனாலும் அவர்களுடைய நடக்கை கெட்டு விடவில்லை.

உண்மையில் ஒழுக்கம் கெட்டு விட்டதென்று யாராலும் சொல்லமுடியாது; அதற்குபதிலாக ஒழுக்கம் விருத்தியடைந்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். இன்று ஐரோப்பாவில் உள்ள சராசரி ஒழுக்கம் இதற்கு முன் அனேக காலம்வரை இல்லை. கிரேக்க நாகரீகத்தின் ஆரம்பத்திலோ அல்லது ரோமருடைய நாகரீகத்தின் ஆரம்பத்திலோ அல்லது எகிப்தியருடைய நாகரீகத்தின் ஆரம்பத்திலோ ஒரு வேளை மக்கள் இன்று இருப்பதைவிட மேம்பட்ட ஒழுக்கத்திலிருந்ததாகச் சொல்லலாம். கிறிஸ்தவ சகாப்தம் தோன்றிய பின் எந்த நூற்றாண்டிலும் இன்று இருப்பதைவிட மேலான ஒழுக்கத்தில் இருந்ததேயில்லை; இன்னும் சொல்லவேண்டுமானால் கிறிஸ்தவ சர்ச்சுகளின் ஆதிக்கம் வலுத்திருந்த காலத்தில் ஒழுக்கம் மிகத் தாழ்மையான நிலையிலிருந்து வந்திருக்கிறது. 19 ம் நூற்றாண்டில்தால் சிறிது உயர ஆரம்பித்தது. 18ம் நூற்றாண்டில் சார்லெஸ்லின்ல மடன் எழுதிய அதாவது இங்கிலீஷ் காரர்கள் பிரயோஜனத்தையேபாராட்டுகிறவர்கள் என்பதற்கு எழுதிய முகவுரையில் அக்காலத்து மக்களின் ஒழுக்கத்தைப்பற்றி நன்கு சித்தரித்திருக்கிறார். இது சம்பந்தமாக சர்வால்டர் பெசண்டுடைய அபிப்பிராயத்தையும் நான் எடுத்துக்காட்டியிருக்கிறேன். வியாபாரத்தினால் சில ஒழுக்கக் குறைகள் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனாலும், பொதுவாக, செல்வந்தனிடத்திலும் ஏழையிடத்திலும் கடந்த நூறுவருடங்கட்கு முன் காணப்பட்டதைவிட இன்று உயர்ந்த ஒழுக்கத்தைக்காணலாம். இந்த நூறு வருடகாலத்திற்குள் மதபோதகர்களின் ஆதிக்கம் படிப்படியாக குறைய—ஆட்டம் கொடுக்க ஆரம்பித்துவிட்டது. ஒருவன் நல்லொழுக்கத்தோடு வாழ்வதற்கு மத நம்பிக்கை வேண்டியதில்லை என்பதை மக்கள் நன்கு உணர்ந்து கொண்டார்கள். அதற்கு

பதிலாக மனிதாபிமானம் அன்பான ஒழுக்கத்தைப்பற்றிய அறிவுமிருந்த பயனைத்தரும் என்பதை அறிந்து கொண்டார்கள். சமூக ஒழுக்கத்தில் மனதாபிமானமும் நீதியும் அவசியம் என்ற உணர்ச்சிவளர ஆரம்பித்தது. நாசகால யுத்தத்தின் கொடுமையைக் குறைத்தல், அதைத்தடுத்தல், தொழிலாளர்களுடைய வீடு, கல்வி நிலை முதலியவைகளை விருத்திபண்ணுதல், பெண்களுக்கு நீதிவேண்டுதல், பாப்பர்களையும் குற்றவாளிகளையும் மனிதத் தன்மையோடு நடத்துவித்தல் முதலியவைகள் தற்காலத்திட்ட விசேஷமான சீர்திருத்தங்கள். இவைகள் கிறிஸ்துவமதக் கொள்கைகளின் கண்ணியமான பெருந்தகைமையின் காரணத்தால்தான் எற்பட்டன என்று சொல்லுவது அயோக்கியத்தனமாகும். மதநம்பிக்கை குறைய ஆரம்பித்ததால்—ஆட்டங்கொடுக்க ஆரம்பித்ததால் தோன்றியவைகளாகும்.

ஆகவே, நன்னடக்கையை நிலைநாட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட மத நம்பிக்கை வேண்டுமென்று மீண்டும் கூச்சல் போடுவது ஆச்சரியமாகவே யிருக்கிறது. உண்மையென்னவெனில், உலகத்தில் ஒரு காலத்தில், ஒருவரையறைக்குட்பட்ட ஒழுக்கத்தைத்தான் கிறிஸ்துவ மதம் வளர்த்து வந்தது. உன்னத சன்மார்க்கத்தையுடைய வெண்ணெய் வெட்டி சிப்பாய் போன்ற சாதுக்களை இம்மதம் உற்பத்தி செய்திருக்கிறது! ஒவ்வொரு தலை முறையிலும் அனேகர் நன்னடக்கையைப் பற்றிய சிறந்த அறிவை அறிய உதவி செய்திருக்கிறது. ஒரு சிலரைத் தவிர மற்றவர்களின் ஒழுக்கத்தை செம்மைப் படுத்துவதில் அது வெற்றிபெறவேயில்லை. இது சம்பந்தமான சரித்திர ஆதாரங்களை பன்முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். மீண்டும் அவைகளைக் கூற விரும்பவில்லை. எல்லாக்காலத்திலும் குடியும், துன்மார்க்கமும், கொடூரமும், பலாத்காரமும், பொய்யும் புரட்டும், மோசடியும் ஏராளமாக இருந்து வந்திருக்கின்றன. இவைகளைக் காணும்போது மதத்தைப்பற்றிய நம்பிக்கை பெண்களை விட்டு சற்று குறைய ஆரம்பிக்கிறது. இந்த நம்பிக்கை குறைவுக்கு எவ்வளவு சரித்திர ஆதாரங்களிருந்த போதிலும் இந்த நம்பிக்கையை கைவிட தைரியம் கொள்ளுவதில்லை. இம்மத நம்பிக்கையை சோதிப்பதற்கு சரித்திர ஆதாரங்களும், மத நம்பிக்கையற்ற வாழ்க்கையும் தகுந்தவாறு உதவி செய்யும் என்பதை மறுபடியும் எடுத்துக் கூறுகிறேன். வேண்டுமானால் பகுத்தறிவு படைத்த ஒரு சமூகத்தாரைக் கவனியுங்கள். அவர்கள் கோயிலுக்குப் போகாததாலும் மத நம்பிக்கையை

யிழந்ததாலும் அவர்களுடையதுன்மார்க்கமானஎண்ணம்சிறி தளவாவது தடைப்பட்டிருக்கிறதை எவராவது சந்தேகிக்க முடியுமா? நான் இதை ஒரு மீன் பிடிக்கிற, விவ சாயஞ் செய்கிற கிராமத்திலிருந்து எழுதுகிறேன். இங்கும் மூன்று பாதிரிகளிருக்கிறார்கள். ஆனால் அவர்க ளுக்கு ஜனங்களிடத்தில் செல்வாக்கு கிடையாது. இதனால் ஜனங்களுடைய நடத்தை ஒன்றும் சீர்கெட்டிருக்கவில்லை. சிறந்த முறையில்தான் அவர்களுடைய ஒழுக்கமிருந்து வரு கிறது. ஸ்பெயின் தேசத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கு தவறி விழுந்தால் கோவில்களின்மேல்தான் விழவேண் டும். அங்கு சர்ச்சின் ஆதிக்கம் சொல்ல முடியாது. அப்படி யிருந்தும், அந்நாடு பிரசித்திபெற்ற கொடுமைக்கும் ஒழுக்க யீனத்திற்கும் பெயர்பெற்று விளங்குகிறது.

வண்டிக்கணக்கான விஷயங்களைப்பற்றி தர்க்கிப்பதை விட உண்மை விஷயங்கள் சிறிதளவுகிடைத்தால் போதும். பலநூற்றாண்டுகளாக மதத்தைவிட்டு விலகியஒழுக்கத்தோடி கூடிய மக்களையுடைய நாட்டை—ஜப்பானை—எடுத்துக் கொள்ளுவோம். ஜப்பான் தேசத்தின் தாய்மதமாவது அல்லது இறக்குமதி செய்யப்பட்ட—புகுத்தப்பட்ட, எங்கும் பரந்துகிடக்கிற புத்தமதமாவது அந்நாட்டு மக்களின் ஒழுக் கத்தைக் கட்டுப்படுத்தவில்லை. அந்நாட்டு மத குருக்களுக்கு சடங்குகளையும் வணக்கங்களையும் கவனிப்பதுதான்வேலை. ஒழுக்கத்தைப்பற்றி கவனிக்க வேண்டியவர்கள் ஒழுக்காபிமா னிகளாம், சீன தத்துவ ஞானிகளுமேயாவர். இப்பொழுது இவர்கள் சம்சயவாதிகள். எனெனில் பல நூற்றாண்டுக ளாக ஜப்பானில் ஒவ்வொரு கற்றவனும் சம்சயவாதியாகவே இருந்து வந்திருக்கிறான். ஜப்பானைப்பற்றியெழுதிய ஒவ் வொரு ஆசிரியரும் அந்நாட்டின் ஒழுக்கம் இவர்கள் கையிலே ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதனால் ஏற்பட்ட பயன் என்ன? இதைப்பற்றி ஆசிரியர் ஹியர்ன் "செய்கையின் சத்தியத்தையும், வாழ்க்கையின் பரிசுத்தத்தையும், வெளிப்படையான பக்தியையும் கண் டால் உண்மையிலே அவர்கள் கிறிஸ்துவர்களை வென்று விட் டார்கள் என்றுதான் சொல்லவேண்டும்." என்று கூறி காய்ம்பர் என்பவரின் வாக்கியத்தை ஒப்புக்கொள்ளவேண்டும் எனக் குறிப்பிட்டிருக்கிறார். அமெரிக்கா மிஷனரி டாக்டர் கிரிப்ஸ் அவர்களைப்பற்றிக் கூறும்போது "அவர்களு டைய (ஜப்பானியர்களுடைய) உன்னத நடத்தையாலும்

அழகிய வாழ்க்கையாலும்தான் தங்களுடைய ஒழுக்கத்தை சீர்படுத்த முடிந்தது'' என்று குறிப்பிட்டிருக்கிறார். எம். லாமர்ஸி ''மதுபானம் ஒழித்தலிலும், சுயமரியாதைக் காப்பாற்றுவதிலும், ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்ளும் மரியாதையிலும், பரஸ்பரவாஞ்சையிலும் அவர்கள் மேல் காட்டாரை தோற்கடித்து விட்டார்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். சர் எட்வின் அர்னால்டு கூறுவதாவது:—

''உலகத்தில் எங்கேயாவது இவர்களைப்போன்ற வாழ்க்கையை இன்பமாக நடத்துபவர்களை பார்க்க முடியுமா? இவர்கள், வாழ்க்கையில் துன்பம் வந்துற்ற காலையில் எவ்வளவு பொறுமையோடும், சகசமாகவும் கடந்து கொள்ளுகிறார்கள்! அவர்கள் நடத்தை எவ்வளவுதூரம் எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாயும் தவறாததாயுமிருக்கிறது! அவர்கள் சொல்வதிலும் செய்வதிலும் கொஞ்சமாவது பிறழாமலிருக்கும் செய்கை அவர்களது அழகிய வாழ்க்கை; அழகிய சித்திரங்களினிடத்திலுள்ள ஆசை, குழந்தைகளிடத்தில் காட்டப்படும் பச்சாதாபம், அன்பு, பெற்றோர்களிடத்திலும் முதியோர்களிடத்திலும் அவர்கள் காட்டும் மரியாதை, நன்கு பயிற்சியடைந்த பழக்கவழக்கம், அந்நியர்களிடத்தில் காட்டப்படும உபசாரம், பிறரை சந்தோஷிக்கச் செய்யும் சந்தோஷ குணம் முதலியவைகள்தான் அவர்களை பெரிதும் பாராட்டுதலுக்குத் தகுந்ததாயிருக்கின்றன.''

இதனால் ஜப்பானியர்களுடைய ஒழுக்கத்தை அதிக கண்ணியப்படுத்த வேண்டுமென்று நான் விரும்பவில்லை. ஜப்பானில் வசித்துவந்த ஒரு இங்கிலீஷ், பிரஞ்சு, ஜெர்மன் பாதிரியாவது இதற்கு மாறுபாடான அபிப்பிராயத்தை எழுதவில்லை. ஜப்பானியர்களுடைய ஒழுக்கத்திலும் குறைபாடுகளில்லாமலில்லை; ஆனாலும், மதுவை விலக்குவதிலும், மனிதத்தன்மையிலும், ஈகையிலும், இரக்கத்திலும், சுத்தத்திலும், பரஸ்பர வாஞ்சையிலும், அன்பிலும், பெருந்தன்மையிலும், சுயமரியாதையிலும், தன்னடக்கத்திலும், உலகத்திலுள்ள மற்ற எந்த நாட்டு மக்களுக்கும் பின் வாங்க மாட்டார்கள். இவ்வளவு காரியமும் மனிதனுடைய அறிவால் செய்யப்பட்டவைகளே. கீழ் நாடுகளில் இத்தகைய ஆச்சரியப்படக்கூடிய வெற்றியுண்டானதற்கு காரணம் அறிவு—ஞானமேயாகும். உலக சரித்திரத்திலே ஜப்பானை

கவனிக்காதிருந்தாலும், அதன் ஒழுக்க சம்பந்தமான தேர்ச்சி ஆச்சரியப்படக் கூடியதாகவேயிருக்கிறது. முப்பது வருடங்களுக்கு முன் ஜப்பானிய சர்க்கார், அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் கிறிஸ்துவமத கோட்பாட்டினால் ஏற்பட்டிருக்கும் ஒழுக்கத்தை விசாரித்தறிய ஒரு கமிஷனை அனுப்பிற்று. அவ்விசாரணையின் முடிவு அம்மதத்தில் ஆத்மீக சக்தி உண்மையிலே ஒழுக்கத்திற்கு காரணமாகயிருப்பதாக மெய்பிக்கப்பட்டால் அம்மதத்தையே தேசிய மதமாக ஒப்புக்கொள்ளுவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். இதில் சேர்ந்திருந்த 70 கற்றறிவாளர்களும் பாரபக்ஷமற்றவர்கள். அனேகமாக அவர்கள் யாவரும் சம்சயவாதிகளே. அவர்களுக்கு ஒரு மதத்திலாவது அதிக பற்றுதல் கிடையாது. ஆனால் கடைசியாக மனித சமூகம் க்ஷேமமாக இருப்பதற்கு எதாவது ஒரு மதக்கோட்பாட்டையாவது பின் பற்ற வேண்டுமென்ற நம்பிக்கையே கொண்டிருந்தார்கள். அவர்களுடைய ஆழ்ந்த விசாரணையின் முடிவு "கிழக்காட்டில் புத்தமதம் செய்த நன்மையைவிட நீதிதெறி விஷயத்தில் மேல் நாட்டில் கிறிஸ்துவமதம் உதவிசெய்திருக்கிறது" என் பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மக்களின் ஒழுக்கம், எனிமெண்டரி பாடசாலைகளின் மூலமாகவும் செகண்டரி பாடசாலைகளின் மூலமாகவுந் தான் விருத்தியடைகிறது. ஆகவே குழந்தைகளுக்கு நன்னடத்தையை உண்டுபண்ணுவதற்கு தனியான பிரசங்கங்களோ அல்லது ஒழுக்கக்கல்வியோ அவசியமில்லை. பள்ளிக்கூடங்களில் மதபோதனை கிடையாது. ஒருவன் மற்றொருவனுக்கு உதவி செய்ய கடமைப்பட்டிருக்கிறான் என்ற ஒரு தத்துவம் கற்பிக்கப்படுகிறது. இதே விதமான ஒழுக்கத்தைப் பற்றிய அறிவு தான் சீனாவிலும் இருந்து வருகிறது. "சீனா தேசத்தின் கல்விச்சாலைகளின் முக்கிய நோக்கம் சமாசாரத்தை யறியக்கூடிய அறிவைக்கற்பிக்க வேண்டுமென்றோ அல்லது வாசிக்கக் கற்பிக்க வேண்டுமென்றோ கருதும் எண்ணமில்லை. ஒழுக்கத்திற்கும் செயலுக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்க வேண்டும் என்ற ஒரே கொள்கை தான் அங்கு தோன்றி வருகிறது" என அமெரிக்க பேராசிரியர் தோழர் ஹால்காம்ப் கூறுகிறார்.

உயர்தரப் பள்ளிக்கூடங்களிலுங்கூட இதைத்தான் பிரதானமாக கையாளப்படுகிறது. மற்ற அறிவைப்பற்றி அதிகமாகப் போதிக்கப்படுகிறதேயில்லை. அப்படியிருந்தும் ஜப்

பானைவிட ஒழுக்கத்தில் மிகவும் பின்னணியில்தானிருந்து வருகிறது. இவ்வளவுக்கும் சீனா வெகுநாள்தொட்டு அந்நிய நாட்டோடு உறவாடிக்கொண்டே வந்திருக்கிறது. அவர்கள் தங்கள் ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள். சீனர்களை உள்நாட்டிலே கண்டறியாத ஐரோப்பியர்கள்தான் அவர்களைத் தப்பாக நினைத்து வருகிறார்கள். அவர்களைப்பற்றி தோழர் ஹால்காம்பு எழுதியதைத் தவிர தோழர் லிட்டில் அம்மையாரும் அவர்களைப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். அதாவது "அவர்கள் கஷ்டப்பட்டு உழைப்பவர்கள், கல்லெண்ணமுடையவர்கள், பக்ஷிமுடையவர்கள், செட்டாயிருப்பவர்கள், சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள், திருப்தியுடையவர்கள், மனச்சாட்சியோடு தனக்கிட்ட காரியத்தை செய்து முடிக்குந் தன்மையுடையவர்கள்" என்று எழுதியிருக்கிறார். மேலும், "அந்நாட்டில், ஒழுக்கத்தைப்பற்றி விண்ணப்பஞ்செய்து இங்கிலாந்து முதலிய நாடுகளில் வீணாகப்போவதுபோல் அங்கு ஆவதில்லை" என்றும் கூறியிருக்கிறார்.

ஆகவே மதத்தின் உதவியில்லாமல் குழந்தைகளை வளர்க்க முடியாது; ஒழுக்கத்தை கற்பிக்கமுடியாது என்று எண்ணுகிற தாய்மார்களுக்கும் மதபோதகர்களுக்கும் இது ஒரு பொருட்பாடம் என்றே சொல்லலாம். சிறுவர்களையும் சிறுமிகளையும் மனித கோட்பாட்டிலே—மனித திட்டத்திலே—மனிதாபிமானத்திலே வளர்க்க முடியுமா என்று கோழைத்தனமாக நாம் தர்க்கஞ் செய்துகொண்டிருக்க, சீனா தேசம் 2500 வருடங்களாக மத நம்பிக்கையில்லாமல் தன் மக்களை நன்னடக்கையில் வளர்த்து வருகிறது; பல நூற்றாண்டுகளாக ஜப்பான் தேசமும் தனது மக்களை சன்மார்க்கத்தில் இருத்தி வருகிறது. கடவுள் தான் ஒழுக்கத்துக்கு எல்லாம் தந்தை என்ற நம்பிக்கை மக்களை விட்டுப் போய்விட்டால்—அழிந்து விட்டால் எப்படி ஒழுக்கம் நிற்கும் என்றுநாம்அஞ்சுகிறோம். ஆனால் 2500வருடங்களுக்கு முன்னமே சீனா "ஆத்மீக சம்பந்தமான விஷயங்களை மூட்டை கட்டிவைத்து விட"த் துணிந்து விட்டது. அவ்வளவு பெரிய நாடு இன்றும் நீதி நெறியில் ஒரே கட்டுப்பாடாயிருந்து வருகிறது. இதனால் தான் மார்க்குயஸ் இடோ என்பவர் ஜப்பானைப்பற்றியும் சீனாவைப்பற்றியும் நன்கு அறிந்தவர். மேல் நாட்டு நாகரீகத்தையும் ஒழுக்கத்தையும் நன்கறிந்தவர். அப்பேர்ப்பட்டவர் நம் நாட்டை (ஐரோப்பியரை)ப் பார்த்து

"மதமழிந்து போகிறதே என்று அஞ்சாதீர்கள். மனிதாபிமானத்தோடு கூடிய ஒழுக்கமிருந்தால் போது" மென்று கூறியிருக்கிறார். மேலும் இவர் தோழர் ஸ்டட்டு என்பவரிடம் சொல்லும்போது "மக்களின் சோம்பலுக்கும் அநைதரியத்துக்கும் காரணம் மதம்" எனக் கூறியிருக்கிறார். ஒரு முழு சம்சயவாதியின் பதில் நம்மவர்களுடைய சந்தேக நிவிர்த்திக்கு ஏற்றதாகுமெனக் கருதுகிறோம். சீனதத்துவ அறிஞர்களின் கோட்பாடுகள் ஒரு சில முனிவர்களாலோ அல்லது பக்தர்களாலோ அறியப்படவில்லை. பல லக்ஷக் கணக்கான மக்களால் அறியப்பட்டிருக்கின்றது. இவ்விரு நாடுகளிலுமுள்ள நீதிநெறி சம்பந்தமான புத்தகங்களைப் பார்த்தால் எல்லாம் வீரத்தோடு கூடிய செய்கைகள் பொருந்தியனவையாயிருக்கின்றன. எங்கெங்கு கிறிஸ்துவ மதம் வெற்றிபெறவில்லையோ அங்கங்கெல்லாம் ஒழுக்கம்நல்லநிலையில்தானிருக்கிறது. நான் முன் சொன்னதுபோல் இவைகளுக்குள் உள்ளதார தம்மியத்தை வற்புறுத்த விரும்பவில்லை. ஐரோப்பிய நாகரீகம் தோன்றுவதற்கு முன்னே மனிதாபிமானத்தோடு கூடிய அறிவு தோன்றி மனித சமூகத்தையே நல்ல—உயர்ந்த நிலையில் வைத்திருக்கிறது என்பதற்கு போதிய சான்று இருக்கிறது.

மத வெறியர்களுடைய நடுக்கத்திற்கும், அவர்களை ஆதரிக்கும் கள்ளநியாயஸ்தர்களுக்கும் பதில் நான் இதுவரை எடுத்துக்காட்டிய உண்மை விஷயத்தில் போதுமான அளவு இருக்குமெனக் கருதுகிறேன். கிறிஸ்துவ மத நம்பிக்கையை கைவிடுவதால் ஒழுக்கங் கெட்டுவிடும் என்று பயப்படுவதற்கு யாதொரு ஆதாரமுமில்லை. அவர்கள் எந்த ஆதாரத்தைக்கொண்டு வாதித்தாலும் நான் மேலே காட்டிய உண்மை விஷயங்களுக்கு எதிரில் நிற்கமாட்டா என்றே கருதுகிறேன். அதைப்பற்றி யோசிக்கவேண்டிய கவலையே இல்லை. சம்சயவாதிகளிடமிருந்து எந்த விதமான நல்லொழுக்கத்தையும் காண முடியாதென்று ஒரே பிடிவாதமாக குரங்குபிடியாக தங்கள் குறுகிய புத்தியை விசாலப் படுத்த மனமில்லாதவர்களும், விசாலப்படுத்தும் அனுபவமில்லாதவர்களும், நான் எடுத்துக்காட்டிய உண்மையில் நம்பிக்கையில்லாதவர்களும் இவ்விரு நாடுகளையும்—ஜப்பான், சீனா—நேரில் போய் பார்த்தால் அந்நாட்டு மக்கள் எவ்வளவு உயரிய முறையில் தாங்கள் ஒழுக்கத்தை நிலைநாட்டி வருகிறார்கள் என்பதும் மத நம்பிக்கை எவ்வளவுதூரம் குறைந்துவருகிறது என்பதும் தெரியவரும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதன் பின்தான், மதமில்லாமல் குழந்தைகளை கல்வழிப் படுத்தலாமா? என்பதற்குப் பதிலாக அவர்களை எப்படி கல் வழிப்படுத்துவது? என்ற கேள்விதான் எழ முடியும். இந்தக் கேள்விக்குத்தான் நான் இனி சில பாரா எழுதி விளக்க முற் படுகிறேன்.

இவ்விஷயத்தைப்பற்றி ஆராயப்புகும்போது ஒருவ னுக்கு முட்டுக்கட்டையாக இருந்துவருவதில் சமூகத்தின் பல வகுப்புகளுக்கு பலதிறப்பட்ட கல்வி போதிக்கப்பட்டு வரு வதினால் ஏற்படும் கஷ்டந்தான் முதன்மையானது. இத் தடையை எப்படி நீக்குவது என்பதற்கு, முதலில் பள்ளியில் பழகும்பழக்கம், வீட்டில் பழகும் பழக்கம் என்பதைக்குறித்த சில பொதுக் குறிப்புகளை எடுத்துக்காட்டிவிட்டு பின்னால் வாசகர்கள் எங்கு முழுவிபரம் அறிய முடியும் என்பதை தெரி விக்கிறேன். பள்ளிக்கூடத்தைப்பற்றிய கேள்விக்கு விடை அல்லது அப்பிரச்சினைக்கு பரிகாரம் காண்பது அசட்டுத்தன மான காரியம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது. இன்று சீனா வில்லும் ஜப்பானிலும் உள்ள பள்ளிக்கூடங்களில் கையாளப்படு கிற முறையையும் கொள்கையையும் நாமும் அப்படியே இங்கு காப்பியடிக்க வேண்டுமென்று நாம் விரும்பவில்லை. இன்று நமது ஆரம்பபாடசாலைகளில் கற்பிக்கப்படும் சிறுவர்களுக்கு ஒழுக்கத்தைப்பற்றி செய்கையில் அனுபவமளித்தல் என்பது மிக பரிதாபகரமாயிருக்கிறது. ஆகையினால்தான் போதகர்க ளும் பெற்றோர்களும் இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறார் கள். மதத்தைப்பற்றியகோட்பாடு—குறிப்புகளையும் ஒழுக்கத் தைப்பற்றிய குறிப்புகளையும் ஒன்றாகச்சேர்த்து குழப்பிவரு கிறார்கள். ஒழுக்கத்தைக் கற்பிப்பதற்கு பழைய ஏற்பாட் டின் சில பகுதிகள் கையாளப்படுகின்றன. இதில், சில திறமை சாலிகளான ஆசிரியர்களைத் தவிர மற்றவர்களால் ஒழுக்கத் துக்கேற்ற குறிப்புகளை தெரிந்தெடுக்க முடியாது. உண்மை யைப்பற்றி குழந்தைகளுக்குப் போதிக்கவேண்டுமானால் பழைய ஏற்பாட்டிலிருந்தும் புதிய ஏற்பாட்டிலிருந்தும் பல உபகதைகளைக் கொண்டு பேச்சளவில் கற்பிக்கப்படுகிறது. உபாத்தியாயர்கள், அவ்வாறு கற்பிக்கும்போது ஏதாவது ஒரு வார்த்தையிலாவது நம்பிக்கையில்லாதுபோனால் அதை அப்படியே ஒரு எழுத்துக்கூட விடாமல் கற்பிக்க கட்டாயம் படுத்தப்படுகிறார்கள். ஆனால் அவ்வாசிரியர்களுக்கு ஒழுக் கத்தை உண்டுபண்ணுவதற்கு பயிற்சி கிடையாது. குழந்தை கள் இவ்வாறு கற்பிக்கப்பட்டு வருகையில் அவர்களுக்கு புறம்

பானவர்கள் வாழ்க்கையைக்கண்டு இவர்கள் சந்தேகங்கொள் ளுகிறார்கள். பள்ளிக்கூடத்தைவிட்டு தொழில் செய்யப்புகுந்த காலத்தில் அங்கு நடைபெறும் காரியங்களைகண்டு தாம் கற் பிக்கப்பட்ட போதனைகளுக்கு முற்றிலும் முரணாயிருந்து வருவதையும் அவைகளுக்கு கூறப்பட்ட ஆதாரம் நிலையற்ற தென்பதையும் காண்கிறார்கள். இந்த விதமான ஒரு கல்வித் திட்டத்தை வைத்துக்கொண்டு என்ன நல்ல பலனை எதிர் பார்க்க முடியும்? அல்லது எந்த ஆதாரத்தின்மீது இத்திட் டத்தை நிலைத்திருக்கச்செய்ய நம்மால் வற்புறுத்த முடியும்?

நமது பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டுவரும் மத போதனை நிறுத்தப்பட வேண்டும். அதிலும் தாம் கற்பிக் கும் மதபோதனையில் நம்பிக்கையில்லாத ஆசிரியராலும், நற் பழக்கம் பயிற்றுவித்தலில் பயிற்சியில்லாத ஆசிரியராலும் பழ க்கத்தை உண்டு பண்ணுவதற்காக மதம் கற்பிக்கப்படுகிறது என்றால் அதனால் வருங்கேட்டின் அளவை எவ்வாறு எடுத் துரைப்பது? மத போதனை சர்ச்சுகளில்தான் செய்யப்பட வேண்டும், மற்ற இடங்களில் செய்யக்கூடாது என்ற காலம் வந்து விட்டது. அதுவும் மக்கள் மதத்தை அடியோடு விட்டு விடும் வரையில்தான். அதன்பின் மதம் எங்குமே இல்லாமல் போய் விடும். தேசத்தின் முதல் வேலை சிசுக் களுக்கு நற்பழக்க வளர்ச்சியுண்டுபண்ணுவதற்கு கல்வியில் சீர்திருத்தஞ் செய்து கல்வியின் மூலமாகவே நற்பழக்கத்தை உண்டுபண்ணவேண்டியதாகும். ''எங்களுடைய கல்வித் திட்டத்தில் தன்மதிப்புத்தான் பிரதானமாக இருக்கிறது'' என்று ஜப்பான் தேசத்து கல்வி மந்திரி தோழர் ஹென்றி, கார்மன் என்பவரிடம் கூறியிருக்கிறார். இதே மாதிரி,என்று இங்கிலாந்தும் தனது கல்வியின் பரந்த நோக்கம் இதுதான் என்று கூறுமோ அன்றுதான் நன்னாள் என்று சொல்லலாம். ஆசிரியர்களுக்கு பழக்கத்தை—நன்னடக்கையை உண்டுபண் ணும் பயிற்சி முதலில் அளிக்கப்படவேண்டும். பள்ளிக் கூடத்தின் அன்றாடக பாடத்திட்டத்தில்- மாணவர்களின் ஒழுக்காபிவிருத்தியைக் குறித்த முறைகள்—பெருந்தன்மை, காணயம், சத்தியவாதித்துவம், சுத்தம், மரியாதை, ஒழுக் கம், கௌரவம், நியாயம்—சேர்க்கப்படவேண்டும். ஆசிரி யர்களும் ஆசிரியைகளும் தாங்கள் பிள்ளைகளின் மனதில்— மூளையில் எவ்வளவோ விஷயங்களை, நுழைத்துவிட்டோம் என்று வீண் பெருமை கொள்ளாமல் எத்தனை ஒழுக்கமான, கற்குணமான, சந்தோஷமான, முன்னுக்கு வரத்தகுந்த

குழந்தைகளை உலகத்திற்கு தோற்றுவித்திருக்கிறோம் என் பதையே பெரிய கௌரமாக மதிக்கவேண்டும். குழந்தை களுக்குக் கற்பிக்கப்படும் கல்வி அவர்களுக்கு புதிதாக புகுத்தவேண்டிய முறையிலிருக்கக்கூடாது. இயற் கையில் அவர்களிடம் உள்ள தூண்டப்படாமலிருக்கும் சக் தியை ஆசிரியர்கள், சமயம் பார்த்து, மின்சார சக்தியைப் பெறுவதற்கு எப்படி தேவைக்குத் தகுந்த மாதிரி சுவிச்சைத் தட்டுகிறோமோ அதே மாதிரி பிள்ளைகளின் சக்தி யையும் தேவைக்குத் தகுந்த மாதிரி தூண்டினால் போதும். இதைக் குறித்து ரஸ்கின் கூறியது கவனிக்கத் தக்கது. அதாவது கிறிஸ்துவ மதம் தன்னைப்பற்றி எவ்வளவு பெரு மையடித்துக்கொண்டாலும் தன் மக்கள் நல்ல வாழ்க்கையை பின்பற்றவேண்டுமென்றால் புறமதத்தார்களுடைய அறிவை யும் திறமையையும் பெற்றுத்தான் தீரவேண்டும் எனக் குறிப் பிட்டிருக்கிறார்.

வாசகர்கள் ரஸ்கின் கூறுவது கனவோ அல்லது நினை வோ என்று சந்தேகப்படவேண்டாம். ஏனெனில் இம்மா திரி வேலைகள் எங்கும் கடைபெற்றுக்கொண்டுதான் வரு கின்றன. பிரான்சில் அனேக படித்த மக்கள் "உண்மையா ளர் சங்கம்" என்ற பெயரோடு ஒரு கூட்டமாகக் கூடிக் கொண்டு மதக்கோட்பாடுகளில்லாமல் எவ்வாறு குழந்தை களை கல் வழியில் பழக்குவது என்று கவலை யெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவின் ஐக்கிய மாகாணத் தில் நீதி நெறியைக் கற்பிக்கும் சங்கத்தார் இவ்வேலையில் முனைந்து நிற்கிறார்கள். ஜெர்மனியிலும் ஒரு கூட்டம் கூடிக்கொண்டு இவ்வேலையில் முனைந்து வேலை செய்து வருகிறார்கள். இங்கிலாந்திலும், நாங்கள் வேறு எங்கும் செய்யாத அளவுக்கு இது விஷயமாக வேலை செய்து வருகி றோம். எங்களுடைய வேலைகளைத் தவிர நீதி நெறிச் சங்கங்களும், சோஷியலிஸ்டுச் சங்கங்களும் சம்சயவாதி களின் ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடங்களும் பெரிதும் நமக்கு அனுகூலமாயிருக்கின்றன. ஒழுக்கம் கற்பிக்கும் சங்கமொன்றுமிருக்கிறது. இதுவும் நமது பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அதிக பங்கு எடுத்துக்கொள்ளுகிறது. இச்சங்கம் ஒழுக்கத்தைக் கற்பிப்பதற்கு ஏற்றபாடங்களையே தனது முழுத்திட்டமாகக் கொண்டு கல்வியறிவாளிகளைக் கொண்டும், அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டும் ஆசிரி யர்களுக்கு வேண்டிய குறிப்புகளையும் கொடுத்து வருவ

தோடு மாதிரிப்பாடங்களாகவும் உபயோகப்படுத்த உதவுகிறது. லீ செஸ்டரிலும் இன்னுமுள்ள மற்ற இடங்களிலும் கல்விக் கமிட்டியாரே ஒழுக்கத்தைக் கற்பிக்கும் பல மாதிரிப் பாடங்களைத் தயார் செய்து கொண்டு வருகிறார்கள். இது சம்மந்தமாக ஏராளமான புத்தகங்கள் எழுதப்பட்டு வருகின்றன.

ஆகவே மத உதவியில்லாமல் குழந்தைகளுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கலாம் என எண்ணற்ற முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. படித்த மக்களும் இதை ஒப்புக்கொண்டு விட்டார்கள். சில போதகமார்களும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஆரம்ப பாடசாலையில் இத்தகைய சீர்திருத்தமான முறைகளை ஒழுக்கத்தைக் கற்பிப்பது கையாளப்பட்டால் உயர்கலாசாலைகளிலும் இம்முறைகளையே பின்பற்றக்கூடும். அப்பொழுது இத்தகைய கல்விச்சாலைகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்புகிற தாய்மார்களும் அனுப்பப் போகிற தாய்மார்களும் இதன் பயனை உணர முடியும். உயர்ந்த பள்ளிக் கூடங்கள் எனக்கருதப்படும் ஈடன், ஹார்ரோ முதல் தாழ்ந்த பள்ளிக்கூடங்கள் வரை குடித்தன்மையை ஒழிக்க எவ்வளவோ பாடுபட்டு வருகின்றன. (ஆசிரியர்களுக்கு நம்பிக்கையில்லை) ஆனால் அதன் பயன் பிள்ளைகள் ஆசிரியர்களைப்பார்த்து குடிகாரர்களில் முதன்மை பெற்றவராக விளங்கி விடுகிறார்கள். அவர்கள் வாழ்க்கை கெட்டு நாசமாகிப் போய் விடுகிறது. ஆசிரியனாகிய எனக்குத் தெரியும் ஆசிரியர்களின் குண லட்சணம். ஆதலால் அவைகளை எடுத்துக் கூறுவதானால் மிக விரியும். மேலும் அருவருக்கக்கூடியதாகும் என்று அஞ்சி இத்துடன் நிறுத்தி விடுகிறேன். ஆகவே கல்வியினால் நல்ல பலன் ஏற்படவேண்டுமானால் பிள்ளைகளை கண்ணியமாகவும் மனிதத்தன்மையோடும், நேர்மையாகவும், பகுத்தறிவோடும் நடக்கச் செய்யவேண்டும். குழந்தைகளிடத்தில் எப்பொழுதும் கௌரவமும் பெருந்தன்மையும், மரியாதையும் தோன்றுவதற்கான முறையை நாம் கடைப்பிடிக்கவேண்டும். அழகும் சந்தோஷமுமான உலகத்தை அவர்களே யுண்டுபண்ண வேண்டியதென்றும் அவ்வாறு உண்டு பண்ணுவதற்கு உதவிசெய்யக்கூடியது அன்பும், இரக்கமும், பெருந்தன்மையும் மரியாதையுமே யாகும் என்று அறிவுறுத்த வேண்டும்.

இங்கிலாந்திலுள்ள எல்லா பள்ளிக்கூடங்களும் இப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் பெற்றோர்களுடைய பொறுப்பு—சுமை சிறிது குறையுமென்பதில் சந்தேகமில்லை. மக்களிடத்திலுள்ள 'கடவுள்' நம்பிக்கையும் மறைந்துவிடும். அப்பொழுதுதான், பதினைந்து வயது முதல் விவாகம் ஆகும் வரையுள்ள யுவதிகளைப் பற்றியகவலையும் யுவர்களைப்பற்றி கவலையும்நம்மைவிட்டு ஒழியும். வாலிப உலகம்இன்றுகெட்டு காசமாகித் திரிவதற்குக்காரணம் இளமையில் அவர்களுக்கு மனித அறிவுக்கு புறம்பான ஒரு சக்தியிருக்கிறதென்றும் அதற்கு பயந்து நமது வாழ்க்கையை நடத்த வேண்டுமென் றும் அவ்வொழுக்கத்தின்படியே நடக்க வேண்டும் என்றும் கற்பிக்கப்பட்டதேயாகும். இதனால் வாலிப பருவம் அடைந்த பிறகுவாழ்க்கையின் ஒழுங்கைக்கண்டு தாங்கள் கற்ற ஒழுக்க த்துக்கும் இப்பொழுது தாங்கள் காண்பதற்குமுள்ள வித்தி யாசத்தை அறிய ஒழுக்கத்தில் நிலையான அறிவில்லாமல் சந் தேகங்கொண்டு விடுகிறார்கள். ஏதோ பல ஆயிரத்தில் ஒரு வன் 'துஷ்டனாயிருந்து' நல்லவனாயிருக்கலாம். பல லக்ஷக் கணக்கானவர்களிடத்தில் சரியான ஒழுக்கம் காணமுடி யாது. ஆனால் நாம் சொல்லுகிற புதியமுறையில் பழக்கங் கள் பயிற்சிக்கப்பட்டால் சிறுவர்களும் சிறுமிகளும் வாலிபப் பருவமடைந்த பின் தாம் கற்றவைகள் தாங்கள் காணக்கூடிய உலக சம்பவங்களுக்குப் பொருத்த மாயிருப்பதைக் கண்டு ஏமாற்ற மடையாமலிருப்பார்கள். அவர்கள் கற்ற ஒழுக்கத்தின் பலனையும் காண்பார்கள். உபாத்திமார்கள் எவ்வாறு பிள்ளைகளிடத்தில் நடந்துகொள் ளுகிறார்களோ அதே மாதிரி பெற்றோர்களும் தங்கள் பிள் ளைகளிடத்தில் நடந்துகொள்ளுவார்கள். எப்பொழுதும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளிடத்தில் மனிதத் தன்மை யோடு கூடிய சாதாரண காரியங்களைப் பற்றியே சொல்லு வார்கள் என நம்புகிறேன். இங்கிலாந்தில் ஆயிரக்கணக் கான வீடுகளில் 'கடவுள்' பெயரே உச்சரிக்கப்படுகிறதில்லை. அவ்வீடுகளில் உள்ள பிள்ளைகள் ஒழுக்கத்தில் எவ்வளவோ விருத்தியடைந்திருக்கிறார்கள். கர்னல் இங்கர்சாலின் பிள் ளைகள் ஒரு சமயத்திலாவது அடிபடவில்லை என்றும், அவர்கள் குணத்தில் மிக சிறந்தவர்களாக விளங்கினார்கள் என்றும் கூறப்படுகிறது. இன்னொரு சம்சயவாதிகளான பெற்றோரைக் கண்டேன். அவர்கள் தங்கள் பிள்ளைகளை மிக மேன்மையான முறையில் வளர்த்திருக்கிறார்கள். குழந் தைகள் படுத்துறங்கும் சுவர்களில் "உன்னுடைய கன்மைக்

கடவுளுக்கு நமது உலகில் வேலை உண்டா?

(சிங்காரவேலு எழுதியது)

தேகத்திற்கு அந்நியமாக உள்ள நமதுபூமி நிகழ்ச்சிகளில் யாதாமொரு சம்பந்தமாவது கடவுளர்க்கு உளதா எனப் பார்ப்போம். நமது பூமியில் நிகழும் தோற்றங்கள் பல உள. மழை, காற்று, புயல், வெள்ளம் முதலிய நிகழ்ச்சிகள் யாவும் இயற்கையாகவே நடந்தேறி வருகின்றன. பௌதிக பூகோள நூலில், பூமியின் மேல் நிகழ்ந்து வரும் பிரகிருத சம்பவங்கள் யாவும் நடந்து வரும் முறையை நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றன. பூமி சூரியனைச் சுற்றி ஓடும் மார்க்கத்தில் சற்று அசைந்து ஓடுதால், நான்கு காலங்களாகிய கோடைகாலம், மாரிக்காலம், வேனிற்காலம், உதிர்காலம் உண்டாகின்றன. இந்தக் காலங்களுக்குத் தக்கவாறு வெய்யிலும், மழையும், பனியும் உண்டாகவே சத்தியவாதியாக இரு'' என்ற வாக்கியத்தை எழுதி தொங்கவிட்டிருந்தார்கள். 'கடவுளை'ப்பற்றியும் ஜபதபங்களைப்பற்றியும் வெகு மரியாதையாகப் பேசிக்கொண்டிருக்கிற ஒரு தாயை விட மனிதத் தன்மையோடு—மனிதாபிமானத்தோடு கூடிய ஒரு தாய் எந்தவகையிலும் பின் வாங்க மாட்டாள்.

இனியும் அதிகமாக இதைப்பற்றி விவரித்துக் கொண்டு போகப் பிரியப்படவில்லை. தாய்மார்கள், நாம் இதுவரை எடுத்துக் காட்டிய குறிப்புகளை கவனிக்கும்படியாக மறு முறையும் வற்புறுத்துகிறேன். மத சம்பந்தத்தை ஒழித்து விடுவதாலேயே குழந்தைகளின் நடத்தை கெட்டுவிடும் என்று ஒருவரும் பயப்பட வேண்டியதில்லை. அதற்குமாறாக இப்பொழுது இருந்துவரும் துன்பங்களும் கவலைகளும் வெகு சுலபத்தில் மறைந்து விடும்.

கின்றன. மழைக் காலங்களில் மின்சார சக்தியால், இடியும் மின்னலும் உண்டாகின்றன. வெய்யில் காலத்தில் பூமியின் மேலுள்ள ஜலம் நீராவியாகி, குளிர் காற்று பட்டவுடன், இரவில் பனியாக நிலத்தின் மேல் விழுகின்றன. குளிர்ச்சி அதிகரித்தால், காற்று மேல் எழுகின்றது. மேலெழுந்த காற்று குளிர்ச்சியடைந்தால் புயலாக அடிக்கின்றது.

இவ்விதமாக, காற்று, மழை முதலிய பிரகிருத சம்பவங்கள் யாவும், கடவுளோ, அல்லது தெய்வங்களோ, அல்லது பேய் பிசாசுகளோ யாருடைய உதவியும் ஒத்தாசையுமின்றி நிகழ்ந்து வருகின்றன. கடலில் அடிக்கும் அலைகளும், சமுத்திரங்களில் எழும் வெள்ளம் முதலிய யாவும் சாதாரண காரணங்களால் நடக்கின்றன. மழை பெய்தால் ஆற்றில் வெள்ளமும், ஏரி முதலிய பள்ளங்களில் ஜலமும் காண்கின்றோம். கால மழை பால் வெள்ளாமையும், அதில்லாவிட்டால் பஞ்சமும் சேரிடுகின்றன. பிரகிருதத்தில நிகழ்ந்து வரும் சகல சம்பவங்களும் நாம் பார்க்கக்கூடிய காரணகாரிய முறையில் நடைபெறுகின்றன. எதன் மத்தியிலும் கடவுளோ, அல்லது தெய்வமோ, அல்லது பிரமமோ பிரவேசிப்பதை யாரும் அறியார். சில புராணங்களில், சில அபூர்வ நிகழ்ச்சிகள் கடவுளால் நிகழ்ந்தனவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஊமைப்பெண்ணைப் பேசவைத்ததாகவும், எலும்பைக்கொண்டு பெண்ணை உயிர்ப்பித்ததாகவும், குஷ்ட ரோகிகளை ஸ்பரிசத்தால் சுகப்படுத்தியதாகவும், சமைத்துச் சாப்பிட்ட பிள்ளை உயிருடன் தோன்றியதாகவும், இறந்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததாகவும், சூரியனை ஓடாமல் நிறுத்தியதாகவும், ஜலத்தைப் பெண்ணாக்கித் தலையில் வைத்துக் கொண்டதாகவும், இன்னும் இவைபோன்ற அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும், அவை கடவுளாலோ அல்லது கடவுள் அனுக்கிரகத்தாலோ நிகழ்வுற்றதாகவும் அநேக மதங்கள் எழுதிய புத்தகங்களில் படிக்கின்றோம். இந்த அபூர்வக்கதைகளை மெய்யெனப் பலகோடி பாமர மக்கள் நம்பியும் அந்நம்பிக்கை மேல் தங்கள் வாழ்வையும் நடத்துகின்றார்கள். அறிஞர்களில் சிலரும் பண்டைக் காலங்களில் இவை போன்ற அற்புதங்கள், நடந்திருக்கலாமெனவும் கூறுகின்றனர். இன்னுஞ் சில அறிஞர்கள், முற்காலங்களில் நிகழ்ந்தனவாகச் சொல்லும் அபூர்வ நிகழ்ச்சிகள் அநேகம் கற்பனா கதைகளாயினும், சில மாத்திரம் உண்மையாயிருக்கலாமெனக் கூறுகின்றனர். விசாரணைக்குப் பகுத்தறிவை அஸ்திவாரமாகக் கொண்ட அறிஞர்களில் சிலர் இவ்வித அபூர்வ நிகழ்ச்சிகளுக்குச் சாட்சியம்

போதாதெனச் சிலவற்றைத் தள்ளியும், சிலவற்றை மாத்திரம் உண்மையாய் இருக்கலாமென அந்தந்த வேத புத்தகங்களிலிருந்தே ருசு செய்வதாகக் கூறுகின்றனர். இத்தியாதி வாதத்திற்கு இரண்டு திருட்டாந்தங்களை எடுத்துக் கொள்ளலாம். முதலாவது, இயேசு மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தது ஒன்று, இரண்டாவது பிரகலாதன் கதை மற்றொன்று. இதன் சம்பந்தமாக ஒரு பிரச்சினையைக் குறிக்கவேண்டும்.

பஞ்சதந்திரக் கதைகளில் சொல்லியிருக்கும் கதைகளை உண்மையென நம்பும் குழந்தைகளுக்கும், வேத புராண விவிய நூல்களில் சொல்லும் கதைகளை உண்மையென நம்பும் மனிதர்களுக்கும், என்ன வித்தியாசம்? இந்த சங்கை, தத்துவஞான ஆராய்ச்சியிலும், மதவாதங்களிலும் முக்கிய சங்கையாகும். இவ்விருதரத்தாருடைய நம்பிக்கைகளில் எது உண்மை? இந்தப் பிரச்சினை விஷயமாகக் கோடான கோடி நூல்கள் இயற்றியுள்ளனர். மதங்களில் கூறப்பட்டுள்ள கடவுளர்கள் உண்மையாயின், புராணங்களில் கூறப்பட்டுள்ள கதைகள் உண்மையென்று ஏற்படும். அல்லது புராணங்களில் கூறியுள்ள கதைகள் உண்மையாயின், அந்த திருவிளையாடல்களைச் செய்துவந்ததாகச் சொல்லும் கடவுளரும் உண்மையாவர். ஆகலால் புராணக் கதைகளின் உண்மையில் கடவுள் உண்மையும் அடங்கியுள்ளது. அதே பிரகாரம் புராணக் கதையின் உண்மையின்மையில் கடவுள் இன்மையும் அடங்கியுள்ளதென அறியவும். உலகில் மதவாதிகளும், தத்துவ ஞானிகளும், பகுத்தறிவு சிந்தாந்திகளும் வாதிக்கும் வாதங்களில் இதுவும் ஒன்று. இதுமத தத்துவ விசாரணையில் முக்கிய பிரச்சினையாதலால் இவ்விடத்தில் சற்று விவரமாக இதனைக் குறிப்பிடுவோம்.

பஞ்சதந்திரக் கதைகள் சிறு குழந்தைகளுக்கு விளையாட்டாக எழுதப்பட்ட கதைகளாதலால, அதனைக் குழந்தைகள் சிலகாலம் உண்மையென நம்பிவந்தபோதிலும், வயது வந்தவர்களுக்கு அவை கதைகளே. மிருகங்கள் மனிதரைப்போல் பேசுவது கூடாமையால், அப்படி மனிதரைப்போல் நடித்ததாகச் சொல்லுவது வெறும் கதைகளேயாகும்.

ஆனால் வேதங்கள் தெய்வ வாக்கானவையென்று நம்புகின்றபடியால், அவைகளில் கூறியுள்ள கதைகளை உண்மையாகக் கொள்ளல் வேண்டுமென்பார். இந்த வாதத்தின் முதல் வழுக்கு என்னவெனில், வேதங்கள் தெய்வ வாக்கென்று ருசுப்

பிக்கும் வரை, அவர்கள் கூறும் வாதம் பொருந்தாது. ஆகவின் இந்த வாதம் முற்றுந் தவறு. இரண்டாவது, வேத புராணங்களில் கூறியுள்ள அபூர்வ காரியங்கள் தற்காலத்தில் நடவாமையால் ஈஸாப் கதைகளைப் (Easop's Fables)போன்ற கதைகளெனவே ஏற்படும். இந்த கண்டனைக்கு என்ன விடை கூறுகின்றார்கள் எனில் சரித்திரங்களில் கூறியுள்ள முற்கால சம்பவங்களை உண்மையெனக் கொள்வதுபோல், அதேநியாயமுகத்தானே, வேத புராணக் கதைகளையும் நம்பவேண்டுமென்பர். ஆகவின் சரித்திரங்களில் கூறியுள்ள கதைகளின்மேல் வைத்துள்ள நம்பிக்கையின் விசேடத்தை, வேத புராணக் கதைகளின்மேல் வைக்கலாமா என விசாரிப்பாம்.

சரித்திரத்தின்மேல் வைத்துள்ள நம்பிக்கையின் விசேடமென்ன? முதலாவது, சரித்திர சம்பவங்கள் இன்றைக்கும் நடந்தேறிவருகின்றன. இரண்டாவது, அந்த சம்பவங்களில் யாதும் அபூர்வமில்லை. மூன்றாவது அச்சம்பவங்களுக்குத் தகுந்த சாட்சியும் இருக்கின்றன. முக்கியமாக சரித்திர சம்பவங்களை அதே காலத்து சரித்திர வாதிகளோ, அல்லது பார்த்தவர்களோ, அந்த சம்பவங்களை எழுதியிருக்கின்றனர். இதை Contemboraneous evidence என்பார் ஆங்கிலத்தில். சில சம்பவங்கள் சிலா சாஸனங்களில் வரையப்பட்டுமுள்ளன. செப்பேடுகளில்சிலவற்றைக்குறிப்பிட்டிருக்கவும்காணலாம். சரித்திரங்கள் கூறும் கதைகளுக்கு சாட்சியம் அவை எழுதியுள்ள புத்தங்களிலேயே ருசுவாக்கப்படுகின்றது. இவைபோன்ற காரணங்களைக்கொண்டு பகுத்தறிவு சித்தாந்திகள், சரித்திரக் கதைகளை நம்புவதற்கு இடமுண்டு என்று கூறுகின்றனர். இவ்வித சாட்சியங்கள் வேத புராண சம்பவங்களுக்குக் கிடைக்காமையால், அவைகள் வெறும் கட்டுக் கதைகளெனவே கொள்ளவேண்டுமென்பார். இந்த நியாயத்தை மேற்குறித்த இரண்டு திருஷ்டாந்தங்களினிடையே காணலாமாவென்று பார்ப்போம் இயேசுநாதர் உயிர்த்தெழுந்தாரென்று விவிலிய நூலில் எழுதியுள்ளதாகக் கூறுகின்றார்கள்.

முதலாவது, வாஸ்தவத்தில் உயிர் மரித்தவர், மூன்று நாள் பொறுத்து பிழைத்தார் என்பது சாதாரண அனுபவமல்ல. ஆனால் சில பிராணிகள், உயிரைத் துறக்காமலே, பல நாள் புதைக்கப்பட்டும், அசைவு அற்றும் இருந்த பிறகு அசைவு அடையும் சர்பவங்களைப்போல், ஏசுவும் (Susbenbed animation) உயிரை இழக்காமலேயே இருந்து, கல்லறை திறக்கப்

பட்டவுடன், காற்றின் சம்பந்தத்தால் உயிர்த்து எழுந்திருக்க லாமென்பது ஓர் யுக்தி. மூன்றாவது அவர் உயிர்த்தெழுந்ததாகச் சொல்லும் நூல்களிலேயே, அந்த சம்பவம் சரித்திர பூர்வகமாக நடந்ததாகச் சொல்லுவதற்கு இடமில்லை. அதாவது, ஏசு உயிர்த்தெழுந்த கதை நான்கு சுவிசேஷங்களில் சொல்லியிருப்பதாகச் சொல்லுகின்றார்கள். ஆனால், இந்நான்கில், இரண்டுதான் உயிர்த்தெழுந்த அபூர்வ சம்பவத்தைக் குறித்திருக்கின்றன. செயின்ட்ஜான் (Saint John) சுவிசேஷம், இச்சம்பவம் நடந்ததாகச் சொல்வதில்லை. செயின்ட்லூய்க் (St. Luke) ஓர் போக்காகக் குறிக்கின்றது. இந்த சுவிசேஷத்தில் சொல்லியபடி செயின்ட் மாத்யு (St. Mathew) வில் சொல்லவில்லை. ஆதி சுவிசேஷமெனக் கூறும் செயின்ட்மார்க் (St. Mark) இதனைக் குறிக்கவே காணோம். உலகப் பிரசித்தி பெற்ற இந்த சம்பவத்தின் கதி, விசாரணையில் இதுவானால், மற்ற அபூர்வ சங்கதிகளின் கதி என்னாம். பிரகலாதன் கதைக்கு ருசுவென்ன? தூணிலுமிருப்பார், துரும்பிலுமிருப்பார் என்று பிரகலாதன் சொன்னதும், அவன் தகப்பனாகிய இரண்யன், தூணை உதைக்க, நரசிம்மம் தூணைப் பிளந்து வந்த கதை எவ்வித விசாரணைக்கும் இடங்கொடுக்கவில்லை. மதவைராக்கியத்தால் எழுதி வைத்த கதையென்றே முதல் பார்வையிலேயே தோன்றுகின்றது. சைவத்தைத் தாழ்த்தி, வைணவத்தை உயர்த்த ஏற்பட்ட கதையே அல்லாது, இது உண்மையல்ல.

இவ்விதமாகப் பண்டைக்கால நூல்களில் கூறியுள்ள அபூர்வக் கதைகள் யாவும், கற்பனைகளென முடிந்தால், கடவுளுக்கு மற்றென்ன வேலை? பூமி மேல் நிகழும் பூத பௌதிக சம்பவங்கள், இயற்கையாவே நிகழ்வுறக் கண்டோம். பூமி மேல் நடமாடும் இவர்கள் நடத்தையெல்லாம் தாங்களே செய்து வருவது பிரத்தியட்சக் காட்சி. மனிதருடனும், மிருகங்களுடனும், தாவரங்களுடனும், மணல், மலை, நீர், சமுத்திரம் முதலிய அசேதனங்களுடனும், கடவுள் கலந்து செய்து வந்ததாகச் சொல்லும் வேதபுராண திருவிளையாடல் யாவும், விசாரணையில் கற்பனையாக முடிவதைக் கண்டோம். இனி, கடவுளுக்கு உலகில் என்ன வேலை? ஒரு வேளை நமது உலகில் கடவுளுக்கு யாதாமொரு வேலையில்லாமற்போனபோதிலும், பிரபஞ்சத்திலுள்ள எந்த உலகிலாகிலும் கடவுளுக்கு ஏதாகிலும் வேலை உளதர்வென இனிக் கண்டறிவோம்.

——)●(——

சோவியத் ரஷியாவில் பெண்கள் நிலை.

(ஜே. எம். குமரப்பா, எம். எ.)

"என்ன உல்லாசம்! இவ்வளவு உல்லாசமாயும், சந்தோஷமாயும் நமது வாழ்க்கையை இன்று நடத்துவதற்கு காரணம் உங்களுடைய உழைப்பேயாகும்" என்று சமீபத்தில் அந்நாட்டில் நடந்த தொழிலாளர் கூட்டத்தில் ஜோஸப் ஸ்டாலின் கூறியிருக்கிறார். இதிலிருந்து தொழிலாளர் ஆட்சியால் ஏற்பட்ட மகத்தான வெற்றியை நாம் அறியலாம். உலகமகாயுத்தத்தின் முடிவு ரஷிய மக்களில் பல லக்ஷக்கணக்கானவர்களை கொலை செய்ய நேர்ந்தது. 1917ம் வருடம் அந்நாட்டில் போல்சுவிக் புரட்சிக்கு காரணம் அந்நியநாட்டு படையெடுப்பும், உள்நாட்டு குழப்பமுமேயாகும். ரஷியாவின் கௌரவம் நசுக்கப்பட்டது; அருகாமையிலுள்ள அந்நிய முதலாளி ராஜ்ஜியங்கள் இந்நாட்டைபயத்தோடும் அவநம்பிக்கையோடும்இணைகொட்டாது பார்த்துக்கொண்டிருந்தன. ஒருதற்காலைகத்தொழில் நாடுஎந்த அளவிலிருக்கிறதோ அந்தஅளவுக்குரஷியாவும் நிதியிலும், விவசாயத்திலும், பொருளாதாரத்திலும் உயர்த்தப்படவேண்டும்என்று தலைவர்கள் உணர்ந்தார்கள். அதன் பயனாகத்தான் லெனின் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி குறுகிய காலத்தில் நிறைந்த கைத்தொழில் சாலைகள் ஏற்படுத்த முற்பட்டார்கள். கைத்தொழில் சாமான்களுக்காகவும் மற்ற இயந்திர சாமான்களுக்காகவும் அந்நிய முதலாளி ராஜ்ஜியங்களை எதிர் பார்த்திருக்கக்கூடாது என முடிவு கட்டினார்கள். இதனால் இந்த ஐந்தாண்டும் இவர்கள் கடுமையான சோதனைகளுக்கு உட்பட வேண்டியிருந்தது. இக்கஷ்டங்களைக் கண்ட தலைவர்கள் மக்கள் பழைய குடும்ப கட்டுப்பாடு

களையும் ஒருவருக் கொருவருக்குள்ள போலி சம்பந்தத்தை யும் கொண்ட கூட்டு திட்டங்களை உடைத்தெறிய வேண்டும் எனக் கருதினார்கள். நாட்டின் நலனுக்காக குடும்பம் தியாகம் செய்யப்பட்டது. விவாகரத்து மிக சுலுவில் கிடைக்க கூடிய தாயிருந்தது. சோவியத் ஐக்கியத்திலே அக்கடி மாற்றங்கள் தோன்றலாயின. அவர்கள் திடமான சித்தத்தோடு இச்சமயத் திலிருப்பதற்கில்லை. அவர்கள் வாழ்க்கை நிலையற்றதாகவே யிருந்தது. அவர்கள் முன்வைத்தக்காலை பின் வாங்காது முன்னேறிச் செல்லுபவர்கள் ஆனதால் ஒழுக்கத்தை தங்களுடைய அவசியத்துக் கேற்றவாறு ஏற்படுத்திக்கொண் டார்கள். அந்த சமூகத்தில்தான் ஆண்களோடு பெண்களும் சரி நிகராக வேலை செய்ய வேண்டியதாயிற்று. நாட்டின் க்ஷேமத்துக்கு ஒவ்வொரு ஆணின் சக்தியும் பெண்ணின் சக்தி யும் தேவையாயிருந்தது. அதனால் ராஜாங்கமே—அவர் களை பிணைத்திருந்த கட்டை—களையை அவிழ்த்து— அறுத்து விடத்துணிந்தது. ஆனால் இப்பொழுது அந்நிலைமை மாறிவிட்டது. முதல் ஐந்தாண்டு திட்டத்தின் முடிவும் இரண்டாவது திட்டத்தின் வளர்ச்சியும் மக்கள் சமூகம் வளம் பெறுவதற்கு குடும்ப வாழ்க்கையின் தத்துவத்தை புதுப்பிக்கவேண்டுமென்ற எண்ணத்தைபிறப்பித்தது. கைத்தொ ழிலுக்கு வேண்டிய மூலதனம் தேடியாய்விட்டது. வாழ்க்கை உயர்வடையலாயிற்று; ராஜ்ஜிய விவகாரங்களில் ரஷ்யா நல்ல கௌரவமான நிலையைப் பெற்றுவிட்டது. இத்தகைய சௌக ரியங்கள் தோன்றியபின் "இயந்திராபி விருத்திக்காக அரசாங் கம் எவ்வளவு கவலை எடுத்துக்கொண்டதோ அதே அள வுக்கு ஒவ்வொரு மனிதனைக் குறித்தும் அரசாங்கம் கவலை எடுத்துக்கொள்ளவேண்டு"மென ஸ்டாலின் கூறுகிறார்.

இந்நிலைமையை உண்டுபண்ணுவதற்கு தொழிலாளிகள் அதாவது அரிவாளைக்கொண்டு செய்யும் தொழிலாளியும், சுத்தியலைக்கொண்டு செய்யும் தொழிலாளியும் அதிகமாகத் தேவையாயிருந்தது. அந்நாட்டின் நிலைமை உயர்வடைய சோவியத் சர்க்காருக்கு ஏராளமான சித்திரக்காரர்களும், பரி பாஷைக்காரர்களும் அதிகமாகத் தேவையாயிருக்கும்; அதிக

மான ஓய்வு மக்களுக்கு இருக்கும்; இன்பமான வாழ்க்கை அதிகரிக்கும். வரும் சகாப்தத்தில் பெண்கள் எந்த அளவுக்கு பங்கு எடுத்துக்கொள்ளுவார்கள்? அடுத்த நூற்றாண்டின் ஐந்தாண்டுத் திட்டத்தில் சோவியத் சர்க்கார் பயிற்சிபெற்ற தனது ஆணையும் பெண்ணையும் எங்கு கண்டுபிடிக்கும்? அதை சமாளிப்பதற்கு இன்றே சோவியத் ரஷியா திட்டஞ்செய்ய வேண்டும். இவ்விடத்தில்தான் பெண்கள் பிள்ளை பெறுபவர்களாகவும், வளர்க்கிறவர்களாகவுமே இருக்க வேண்டும் எனத்துணிய வேண்டியவர்களாகிறார்கள். நிலையான குடும்ப வாழ்க்கையை அவர்கள் கையில் ஒப்புவியுங்கள். அப்பொழுதுதான் சமூகப் பற்றுதலையுடைய, அறிவு விளக்கத்தோடு கூடிய எதிர்கால சந்ததியை உண்டு பண்ணமுடியும். இதனால்தான் இன்று விவாகரத்தைக்கோரும் மனுக்களுக்கு விவாகரத்து உரிமை அளித்தலை மட்டுப்படுத்தி வருகிறார்கள். பெண்களுக்கு ஜீவனாம்ச முதலியவைகளைக் குறித்த சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. குடும்ப வாழ்க்கையை நிலைபெறச்செய்ய வேண்டுமென்ற இப்புதிய திட்டத்தினால் ரஷியப்பெண்களை பழையபடி அடுப்பூதும்பெண்களாகவோ அல்லதுஜர்மனியில்இருப்பதுபோல் வீட்டுவிவகாரங்களையே கவனிப்பவர்களாகவோ செய்யப்பட்டு வரும் என ஒருவரும் முடிவு செய்துவிடாதீர்கள். சோவியத்யூனியனில் பெண்கள் நிலைமையும் குடும்ப வாழ்க்கையின் நிலைமையும் முற்றிலும் பெரிய மாற்றத்தையடையும் என்பது உண்மையே. ஆனால் பழைய ஒழுக்கத்திற்கே மாற்றப்படும் என்று ஒருபொழுதும் கருத வேண்டாம். சோவியத் சமூகம் மனித வர்க்கத்தின் விடுதலைக்காக எவ்வளவோ பெரியவேலை செய்து வருகிறது; அதைவிட்டு ஒருகாலும் பின்வாங்காது. அப்போரைத் தொடர்ந்து நடத்திக்கொண்டேயிருக்கும். எவ்வாறு சுகமான குடும்பங்கள் இருக்கவேண்டுமெனநாம்போராடுகிறோமோ அதேமாதிரி தாய்மார்களின் சுகாதாரத்திற்காகவும் குழந்தைகளின் சுகாதாரத்திற்காகவும் போராடக்கடமைப்பட்டிருக்கிறோம்.

இப்புதிய இயக்கம் ஆண்களோடு பெண்கள் சகலத்துறைகளிலும் சமத்துவமாக போட்டிபோட உரிமையுண்டு என்பதை

ஒப்புக்கொள்ளுவதோடு பிள்ளைகளைப் பெறுவது அவர்களுக்கு முக்கியமான கடமை என்பதையும் வற்புறுத்துகிறது. இவ்விஷயத்தில் இப்பொழுது பெரும்பாலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ரஷியாவில் பெண்கள் முக்கிய பதவி வகிக்காத துறை ஒன்றுமேயில்லை. ஆண்களைப்போல பெண்களும் சரிசமமாக உத்தியோகங்கள் வகித்து வருவதை கண்டறிய சமீபத்தில் சர்வே செய்யப்பட்டது. இந்த சர்வேபடி விஞ்ஞான ஆராய்ச்சி சாலைகளில் 12000 பெண்கள் வேலை செய்து வருகிறார்கள். 1911ம் வரு 2000 பெண் டாக்டர்கள் இருந்தார்கள். இன்றோ 42000 பேர்கள் இருக்கிறார்கள். கைத்தொழிற்சாலைகளில் மொத்தம் 8,000,000 பெண்கள் வேலை பார்த்து வருகிறார்கள். அங்கு இயந்திரத் தொழிலிலும் கட்டிடம் கட்டுந் தொழிலிலும் உள்ள தொழிலாளர்களில் பெண்கள் கால்பகுதியினர் இருக்கின்றனர். கனித் தொழிலாளர்களில் ஏறக்குறைய கால்பகுதியினர் இருக்கிறார்கள். கால்நடைகளை வளர்க்கும் பண்ணைகளிலுள்ளவர்களில் அனேகமாக 16 சதவீதம் பெண்களேயாவர். கைத்தொழிலில் முக்கிய ஸ்தானங்களில் பெண்கள் 9.2 சதவிகிதம் இருக்கிறார்கள். போக்குவரத்து இலாக்காவில் 4.4 வீதமும் வியாபார ஸ்தாபனங்களில் 5. 8 வீதமும் விஞ்ஞான வேலைகளில் 30. 6 விகிதமும் இருந்து வருகிறார்கள். நகரச் சபையில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள். ஐக்கிய நிர்வாக மத்திய கமிட்டியில் இவர்களுக்கு 101 ஸ்தானங்கள் இருக்கின்றன. 925 பெண்களுக்கு அவர்களுடைய தைரியத்துக்காகவும், வீரத்திற்காகவும், கலைக்காகவும், விஞ்ஞானத் தேர்ச்சிக்காகவும், கைத்தொழில் திறமைக்காகவும், விவசாயத்திறமைக்காகவும் பொதுஜன சேவைக்காகவும் அனேக சன்மானங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன.

கல்வி, அரசியல், விளையாட்டு, கைத்தொழில், விவசாயம் முதலிய வேலைகளை சர்வே செய்ததில் பெண்கள் 500000க்கு மேல் காலேஜில் வாசித்து வருகிறார்கள் என்பதும் 2,000,000 பெண்கள் விளையாட்டுகளில் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகின்றது. இதில் என்ன ஒரு பெரிய

இந்து என்பவர் யார்?

(தோழர் டி. டி. கார்வ்)

இந்த துரதிர்ஷ்டமுள்ள காட்டில் 'விசேடஉரிமைகளை'க் காப்பாற்றும் பொருட்டும், "போதிய பிரதிநிதித்துவம் வகித்துக் கொள்ளும் பொருட்டு"ம் நிகழும் சண்டை சச்சரவுகளில் உபயோகிக்கப்படும் 'இந்து' என்னும் பதத்தின் அர்த்தம் இன்னதென்பதே எனக்குப் புலப்படவில்லை.

'இந்து' என்றால் என்ன அர்த்தம்என்று வினாவியதற்கு எனக்கு இதுவரையில் ஒருவரும் திருப்திகரமான பதில் அளிக்கவுமில்லை. எனவே யார் தன்னை இந்து என்று கூறிக்கொண்ட போதிலும் அவர் ஒரு 'இந்து' வாதல் வேண்டும்.

மதம் என்பது சமூகங்கள் ஒற்றுமையுடன் வாழவேண்டியதற்காக நிறுவப்பட்ட சில வரையறைகள் என்று கூறுவோமாயின், சமூக நன்மைக்காகவே ஏற்பட்ட பல்வேறு மதங்களும் ஒன்றுக்கொன்று முரண்கொண்டு சண்டையிட்டுக்கொள்ள வேண்டியதில்லை.

செத்துப்போம் மதம் சாவதுதானே.

ஆனால் மதம் என்பது சில மனிதர்களால் பல நூற்றாண்டுகட்கு முன்னர், பிற்கால சந்ததிகள் கண்மூடித்தன

விதியாசம் காணப்படுகிறதென்றால் யுத்தத்திற்கு முன் ரஷியப் பெண்கள் இருந்த நிலையைவிட இன்று அவர்கள் நிலை பன்மடங்கு உயர்ந்திருக்கிறது என்பதேயாகும். முன் இருந்தவர்களை கைவிரல் விட்டு எண்ணிவிடலாம். அதுவும் அவர்கள் உயர்ந்த பணக்கார வகுப்பைச் சேர்ந்தவர்களே யாவர். புரட்சிக்குமுன்பெண்களின் ஹாக்கிடம் என்றோ, பெண்களின் வாலிபால்டம் என்றோ ஒரு பெயராவது கேள்விப்பட்டிருக்கமாட்டார்கள். சாதாரண குடியானப் பெண்கள் அயல்நாடுகளுக்குச் சென்று விளையாடுவோம் என்று கனவிலும் கருதியிரார். இன்றோ எவரும் எந்தவகையான் விளையாட்டும் விளையாடக் கற்றுக்கொள்ள சகலவசதிகளும் உண்டு.

மாக தங்கள் பகுத்தறிவை அடமானம் வைத்து அநுசரிப்பு தற்காக நிறுவிய சில சட்டங்களாகும் என்றுதான் நான் கருதுகிறேன். ராய்பகதூர் சாரதாவின் மிகச்சாதாரணமான மசோதாவைப்பற்றி சில பிடிவாதம் பிடித்த அங்கத்தினர்கள் சின்னாட்கட்கு முன்னர் இந்தியா சட்டசபையில் நிகழ்த்திய வாதங்களிலிருந்து மேற்கூறிய உண்மை உறுதி செய்யப்படுகின்றது.

14 வயதுக்கு ஒரு பெண்ணின் மண வயதை உயர்த்தினமட்டில் சேத்துப் போகக்கூடிய ஒரு மதம் சமூக நலனுக்குத் தீமை இழைக்கக்கூடியதும், ஒழுக்க ஈனமானதும் என்பதில் தடையில்லை.

மதம் ஒழிதல் வேண்டும்.

இதனை அதாவது இந்த இந்துமதத்தை இக்கணத்தே ஒழித்து விடுதல் வேண்டும். மரத்தாலும், லோகத்தாலும், கல்லாலும் செய்யப்பட்ட கடவுள்களை நம்பி வணங்கும் ஒரு மனிதன்; சாதி பேதத்தில் உறுதியான பற்றுடைய ஒரு மனிதன்; அருவக் கடவுளை நம்பும் ஒரு மனிதன்; மிருக கோடிகளில் ஒருவகை மிருகந்தான் தெய்வீகமுள்ளதென்று அதனை வழிபடும் ஒருமனிதன்; சில குறிப்பிட்ட நாட்களில் விரதங்கள் அநுட்டிக்கும் ஒரு மனிதன்—இதனை மருங்க வளர்க்கலாம். இவர்களில் எவன் 'இந்து' எனப்படுவோன்? இவ்விந்தியாவில் இப்பொழுது கூறப்பட்ட இத்துணை விஷயங்களும் அல்லது அவற்றுள் ஒன்றேனும் ஒரு இந்து என்பவனுக்கு அவசியமில்லை என்று கூறும் பல இந்துக்கள் இந்தியாவில் இருக்கின்றனர் என்பதாக நான் திண்ணமாகக் கூறுவேன். இத்தகைய சான்றோர்கட்குத்தான் நான் முறையீடு செய்து கொள்கின்றேன். இவர்கள் அனைவருமேமதம் என்ற ஒன்றைக் கண்டிப்பதுடனின்றி தமக்கு மதமே இல்லையென்றும் பொதுப்படப்பிரசாரம் புரிதல்வேண்டும். இனி ஜனத்தொகைக் கணக்கு எடுக்கப்படுங்காலத்தில் மதம் என்ற கட்டத்தில் 'ஒன்றுமில்லை' என்று இப்பெருந்தகையார் அனைவரும் எழுதி விடுதல் வேண்டும். இவர் தம் மத விரோதப்பான்மை பொது விளம்பரத்துடன் நின்று விடுவதுடனில்லாமல் எழுத்து மூலமாகவும் பதிவு செய்யப்படவேண்டும்.

(பம்பாய் கிரானிகள்)

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)≡(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ. 0 5 0
பிரகிருதிவாதம் ...	...	,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...		,, 0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ...	...	,, 0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மைதின்ன? ...		,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ...	...	,, 0 3 0
கடவுள்	...	,, 0 5 0
நான் சமுசயவாதியானதேன்? ...	...	,, 0 3 0
வால்ட்டேர்	...	,, 0 4 0
பேய்-பூதம்-பிசாசு ...	...	,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ...	...	,, 0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ...	...	... ,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்	0 6 0
ஷி	2-ம் பாகம்	0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்		0 4 0
ஷி	2-ம் பாகம்	0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும் ...	...	,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (“நான்காம் பதிப்பு”) ...		,, 0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)		0 4 0

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குவன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ.ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
24.	சோதிடஆராய்ச்சி	0	4	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
28.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31.	ராவணப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	நரகம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம் அல்லது கைவல்யம்கட்டளை	0	5	0
36.	பரிணாமவாதம் உண்மையா?	0	4	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press, Erode.